*Issued* 2—11—1965]

# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

# OFFICIAL REPORT

## THURSDAY, 5TH AUGUST 1965

**VOLUME XXXI—No. 2** 227

*CONTENTS*


| | PAGES |
|---|---|
| I Questions and Answers .. .. .. .. .. .. | 111–121 |
| II Non-official business— | |
| (i) Bills— | |
| (1) The Madras Agriculturists Relief (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 13 of 1965 .. .. .. | 121–124 |
| (2) The Madras Buildings (Lease and Rent Control) Bill, 1965 .. .. .. .. .. .. | 124 |
| (3) The Hindu Marriage (Madras Amendment) Bill, 1965. | 124 |
| (ii) Resolutions— | |
| (1) Inclusion of Tamil as one of the media for U.P.S.C. examinations—Discussion—*cont.* .. .. .. | 125–150 |
| (2) Provision of a separate constituency for elementary school teachers in the Legislative Council .. | 150–188 |
| (3) Declaration of all the languages mentioned in the Eighth Schedule as National Languages of India. | 188–208 |
| III Papers laid on the table of the House .. .. .. | 208 |


V211,31 N65
N65·31·2
64916

©
GOVERNMENT OF MADRAS
1965

*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-9*

PRICE 50 *Paise*]

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Thursday, 5th August 1965.**

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTION AND ANSWERS.

## STARRED QUESTIONS.

### விளையாட்டு வீரர்களுக்கு வயோதிகப் பென்ஷன்

*81 கேள்வி.— **திரு. து. ப. அழகமுத்து:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வயது முதிர்ந்த விளையாட்டு வீரர்களுக்குப் பென்ஷன் வழங்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) No, Sir.

(b) Does not arise.

64916

**திரு. து. ப. அழகமுத்து:** தலைவர்களே, விளையாட்டுக்களை ஊக்குவிப்பதற்காக மற்ற மாநிலங்களில் இப்படிப்பட்ட வயதான வீரர்களுக்கு பென்ஷன் அளிக்கப்படுவதாகத் தெரிகிறது. நம்முடைய மாநிலத்திலே அப்படிக் கொடுப்பதில்லை. ஆகவே, பரிசீலனை செய்து பென்ஷன் கொடுப்பதற்கு முன்வருவார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அவ்வாறு உத்தேசமில்லை யென்று கூறினேன். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஸ்போர்ட்ஸ் கவுன்சில் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கவுன்சில் இவர்களைப் பயன்படுத்திக் கொள்வதானால் பயன்படுத்திக் கொள்ளலாம்.

### *Sports stadium in each district*

*82 Q.—SRI V. SANKARAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any of the District Sports Councils have requested the Government for the construction of Stadia in the districts, and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) No, Sir.

(b) Does not arise.

[5th August 1965

### சட்டங்களைத் தமிழில் மொழிபெயர்த்தல்

* 83 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மத்திய அரசின் சட்டங்களைப் பிராந்திய மொழிகளில் மொழி பெயர்ப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள கமிஷன் தமிழ் மொழி பெயர்ப்புச் சம்பந்தமாக நமது மாநில அரசின் ஆலோசனையைக் கேட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) A copy of the Tamil translation of the Transfer of Property Act, 1882, prepared by the Official Language (Legislative) Commission has been received for offering the suggestions and comments of the State Government thereon and the matter is under consideration. Excepting that, no other communication seeking the views of this Government on the *question of translation of Central Acts into Tamil* has so far been received from the Official Language (Legislative) Commission.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர்வர்களே, அதில் என்னென்ன அபிப்பிராயங்கள் நம்முடைய மாநில சர்க்காரிடம் கோரப் பட்டிருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : டெக்னிகல் டெர்ம்ஸ் எப்படிப் போடுவது என்று கேட்கப்பட்டது. பழக்கப்பட்ட வார்த்தையைப் போடலாம் என்றும், பழக்கப்பட்ட வார்த்தை ஆங்கில வார்த்தை யாக இருந்தால் அதைப் போடலாம் என்றும் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் பொதுவாக மொழிபெயர்ப்புக்கு இந்தி வார்த்தையைக் கூடியவரைக்கும் தெரிந்த டெர்மாக இருந் தால் போடலாம் என்று சொன்னார்கள். தமிழ்நாட்டிலே தெரிந்த தமிழ் வார்த்தையையும், இல்லையென்றால் ஆங்கிலத்திலே தெரிந்த வார்த்தையையும் போடலாம் என்று சொல்லியிருக்கிறோம். அது இன்னும் முடிவாகவில்லை.

### தமிழ் வெளியீட்டுக் கழகம்

* 84 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ் வெளியீட்டுக் கழகம் ( Bureau of Tamil Publications ) வெளியிடும் நூல்கள் அரசினர் அச்சகத்தில் அச்சிடப்படுகின்றனவா அல்லது வெளி அச்சகங்களிலா ?

(இ) வெளி அச்சகங்களில் என்றால் பாரம் ஒன்றுக்கு என்ன தொகை தரப்படுகிறது ?

(உ) நூல்களுக்கான ‘ பிளாக்கு ’-கள் செய்யத் தரப்படும் தொகை என்ன ?



5th August 1965]

(எ) கடந்த ஆண்டில் எத்தனை நூல்கள் வெளியிடப்பட் டிருக்கின்றன ?

(ஐ) அந்த நூல்களின் அடக்கம் என்ன ? விற்பனை வரவு என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) In private presses:

(*b*) (1) Setting Text 12 pt.—Rs. 3.25 per page.
Setting Text 10 pt.—3.90 per page.
Setting Glossary 10 pt.—Rs. 4.00
(English and Tamil *vice versa*.)

(2) Striking—

*First* 1,000 *impressions*—

8 pages per forme—Rs. 5.00
4 pages per forme—Rs. 4.00
2 pages per forme—Rs. 3.00

*Succeeding* 1,000 *impressions*—

8 pages per forme—Rs. 4.50.
4 pages per forme—Rs. 3.50.
2 pages per forme—Rs. 2.50.

(*c*) 0.37 Paise per square inch.

(*d*) 13 books; and

(*e*) Net cost—Rs. 88,989.99
Sale proceeds—Rs. 70,260.75

### தொழில் யூனிட்டுக்களுக்கான வாடகை

* 85 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தொழிற்பேட்டைகளில், தொழில் யூனிட்டுகளுக்கான வாடகையை உயர்த்தும் உத்தேசம் அரசாங்கத்தின் பரிசீலனையி லிருக்கின்றதா ?

(இ) இது குறித்து அண்மையில் அரசாங்கத்திற்கு விண்ணப் பம் ஏதேனும் வந்ததா ?

(உ) ஆம் எனில், அதன் மீது என்ன முடிவு எடுக்கப் பட்டுள்ளது?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Rent for the factory units in the Industrial Estates is subsidised by the Government during the initial period of five years, and thereafter the subsidised rent is increased gradually to the level of the economic rent. In accordance with the above procedure the rent for factory units in six Industrial Estates has been raised with effect from 1st April 1965 and in one Industrial Estate with effect from 1st June 1965;

[5th August 1965

(b) A petition has been received on 28th April 1965 from the Madurai Industrial Colony Manufacturers' Association on behalf of the industrialists in the Industrial Estates at Madurai, Virudhunagar, Tiruchirappalli and Pettai representing against the increase in the rent; and

(c) The Director of Industries and Commerce, Madras has been requested to investigate into the matter.

SRI V. S. S. MANI : May I know the reason for the disparity in rent between the industrial units in Theni and those in Dindigul?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, the rent is calculated on the basis of the cost of putting up the Industrial Estate. For instance, the Industrial Estate at Virudhunagar has cost more than the Industrial Estates at one or two other places like Pettai. Similarly Industrial Estates in Tiruchi have cost less. So, the rent depends upon the cost of construction of the Industrial Estate concerned.

**திரு. து. ப. அழகமுத்து :** தலைவாவர்களே, இந்தத் தொழிற் பேட்டையில் உள்ள தொழிற்சாலைகள் இன்னும் வளருகின்ற நிலையிலே இருப்பதால், இதுவரை கொடுத்து வந்தது போல் வாடகைச் சலுகையைக் கொஞ்ச காலம் நீடிப்பதற்கு அரசாங்கம் உத்தரவிடுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அவ்வாறு நீடித்தால் ராஜ்ய சர்க்காரிலிருந்துதான் மத்திய சர்க்காருக்குக் கொடுக்க வேண்டிய கடன், வட்டி எல்லாம் கொடுக்க வேண்டியிருக்கும்.

**திரு. வை. சங்கரன் :** சில எஸ்டேட்டுகளிலே பொற்கொல்லர்களுக்கு வேலை தருவதற்காக மல்டி மெட்டல் கோவாப்பரேடிவ்ஸ் ஆரம்பிக்கப்பட்டு இருக்கின்றன. மதுரையிலே இது ஆரம்ப நிலையிலே இருப்பதால், ஓரளவு வாடகையில் தருவதற்கோ அல்லது சப்சிடி போன்ற ஏதாவது உதவி செய்வதற்கோ அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** வாடகையைக் குறைக்க முடியாது. வேறு விதத்திலே சப்ஸிடி வேண்டுமென்றால், அதற்காகத் தனி மனுப் போட்டால் சர்க்கார் பரிசீலனை செய்யும்.

## தொழிற்பேட்டைகள்

*86 கேள்வி.—திரு. மு. கருணாநிதி : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ரெவின்யூ டிவிஷன் ஒவ்வொன்றிலும் தொழிற்பேட்டைகளை ஆரம்பிக்க அரசாங்கத்திற்கு ஏதேனும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், இத் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும் ?



5th August 1965]

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) It is proposed to establish Industrial Estates during the Fourth Five-Year Plan period in all Revenue divisions where Industrial Estates have not so far been established to the extent this is feasible.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** தொழில் பேட்டைகள் நகரப் புறங்களிலேயே அதிகமாகக் கட்டப்படுகின்றன. ரூரல் ஏரியாக்களில், அதாவது கிராமப் பகுதிகளில், குறிப்பாக டவுன் பஞ்சாயத்துக்களில் தொழில் பேட்டைகள் கட்ட உத்தேசமுண்டா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** தொழில் பேட்டை என்றால் கட்டடங்கள் கட்டி தனியார்களுக்குத் தொழில் நடத்த வசதி செய்து கொடுப்பது. சர்க்காரே தொழில் வைப்பதில்லை. எந்த இடத்தில் அந்த விதமான தொழில்கள் செய்வதற்கு மக்கள் முன்வருகிறார்களோ அந்த இடத்தில்தான் முதலில் கொடுக்க வேண்டும். நம் ராஜ்யத்தில் இப்போது இதுவரை 21 ரெவின்யூ டிவிஷன்களில் தொழில் பேட்டைகள் வைத்திருக்கிறோம். ரெவின்யூ டிவிஷன் தலைநகரங்கள் எல்லாம் பெரிய நகரங்கள் என்று சொல்ல முடியாது. அதை எல்லாம் 'மோர் ஆர் லெஸ் ரூரல் ஏரியா' என்றுதான் சொல்ல வேண்டும்.

**புலவர் கா. கோவிந்தன் :** தாலூகா தலைநகர்தோறும் ஒரு தொழிற்பேட்டை அமைப்பது என்பது அரசாங்கத்தின் கொள்கை என்று ஒரு முறை அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இப்போது ரெவின்யூ டிவிஷன் என்றால் மூன்று தாலூகாக்கள் சேர்ந்தது. ஆகவே தாலூகாதோறும் தொழில் பேட்டை வைக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** சர்க்கார்க் கொள்கையைத் திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறேன். ப்ளாக் தலைநகரங்களில் கார்ப்பன்டரி அன்ட் ஸ்மித்தி யூனிட்ஸ், தாலூகா தலைநகரங்களில் ஜெனரல் பர்பஸ் என்ஜினியரிங் வொர்க் ஷாப்ஸ், ரெவின்யூ டிவிஷன் ஹெட்குவார்ட்டர்சில் இண்டஸ்ட்ரியல் காலனி வைப்பது என்று சொல்லியிருக்கிறேன்.

**திரு. து. ப. அழகமுத்து :** இன்டஸ்ட்ரியல் எஸ்டேட் வைப்பது ரெவின்யூ டிவிஷன் தலைநகரில் என்று சொல்கிறார்கள். தொழிலில் பின் தங்கிய பகுதிகளில் அவற்றை வைக்க உத்தேசிக்கப்படுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** தொழிலில் பின்தங்கிய பகுதிகளில் இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்ஸ் வைத்தால் அங்கு இன்டஸ்ட்ரியே வளராது.

**திரு. ஜே. மாதா கவுடர் :** மாவட்டங்கள் தலைநகர்தோறும், ரெவின்யூ டிவிஷன்தோறும் தொழில் பேட்டைகள் இருக்கும் போது நீலகிரி ஜில்லாவில் ஒரு தொழில் பேட்டை கூட இல்லையே, அதற்குக் காரணம் என்ன ?

[5th August 1965

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** நாம் ஆராய்ச்சி செய்ததில் அங்கு தொழில் நடத்தக்கூடிய வாய்ப்புகள் இல்லை. அங்கு பெரிய அளவிற்கு ப்ளான்டேஷன்ஸ் போன்ற தொழில்கள்தான் நடத்த முடியும் என்ற நிலை இருக்கிறது.

**திரு. ஜே. மாதா கவுடர்:** தேயிலை உற்பத்தி செய்யக் கூடிய பாக்டரிகளுக்கு, ப்ளான்டேஷன் ஏரியாவில் அதற்கு வேண்டிய சாமான்களைக் கூட வேறு மாவட்டங்களில் இருந்துதான் வாங்க வேண்டியிருக்கிறது. அதுபோன்ற சாமான்களைச் செய்ய அங்கு ஏராளமான வசதியிருக்கிறது. ஆகவே, அதைச் செய்யவாவது ஒரு சிறு யூனிட்டாவது அங்கு வைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** அதற்காகத்தான் நீலகிரி ஜில்லாவில் டீ இன்டஸ்ட்ரியல் கோவாப்பரேட்டிவ்ஸ் டீ பேக்கிங் பாக்டரியை வைத்திருக்கிறார்கள். அதற்கு வேண்டிய கருவிகள், உபகரணங்கள் செய்யத் தேவை ஏற்பட்டால் அது பின்பு பரிசீலிக்கப்படும்.

**திரு. வை. சங்கரன்:** இந்த எஸ்டேட்களில் யூனிட்ஸ் அலாட் செய்வதில் ஏற்கெனவே நல்ல விதமாக வெளியில் தனியார் துறையில் தொழில்கள் நடத்திக் கொண்டிருப்பவர்களுக்குக் கொடுப்பதை விட்டுப் புதிதாகத் தொழில் ஆரம்பிப்பவர்களுக்கு முதல் ப்ரயாரிட்டி கொடுக்கப்படுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** அப்படித்தான் செய்யப் படுகிறது. ஆனால், வெளியில் நல்ல தொழில் செய்கிறவர்கள் ஒருவர் இருவரை எஸ்டேட்டில் அனுமதித்தால் தான் அதைப் பார்த்து மற்றவர்கள் நல்ல முறையில் தொழில் செய்ய எடுத்துக் காட்டாக இருக்கும் என்றுதான் அவர்களையும் நாம் அனுமதிக்கிறோம்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது பிற்பட்ட பகுதிகளில் தொழில் பேட்டைகள் ஏற்படுத்தினால் தொழில் வளராது என்று சொன்னார்கள். ஆகவே, பிற்பட்ட பகுதிகளை முற்போக்குப் பகுதிகளாக ஆக்குவதற்குச் சர்க்கார் என்ன திட்டத்தைத் தீட்டியிருக்கிறார்கள்?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கொஞ்சம் கொஞ்சமாகத்தான், படிப்படியாகத்தான் பிற்பட்ட பகுதிகளுக்குக் கொண்டு போக முடியும். ஜில்லாத் தலைநகரங்களில் எல்லாம், தொழில் இல்லாத இடங்களில் தொழில் பேட்டைகள் வைத்துத் தொழில்கள் உண்டாக்கினோம். ரெவின்யூ டிவிஷன்களில் வைக்கவேண்டுமென்று வைத்து தொழில்களை வளர்க்கிறோம். அதற்குப் பிறகு பின்தங்கிய பகுதிகளுக்கு எடுத்துச் செல்ல வேண்டும். சிலர் நினைப்பது போல் கிராமங்களிலிருந்து தொழில்கள் நகரங்களுக்குச் சென்று வளராது. நகரங்களில் இருந்துதான் தொழில்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் கிராமங்களுக்குச் செல்லவேண்டும்.



5th August 1965]

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை:** தொழில் பேட்டை அமைக்க என்ன செலவாயிற்று? இதுவரை ஆரம்பிக்கப்பட்ட தொழில் பேட்டைகள் லாபகரமாக நடக்கின்றனவா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** லாபகரமாக நடத்தக் கூடாது என்பதுதான் இப்போது எல்லோருடைய கோரிக்கையாக இருக்கிறது. ஆகவே லாபகரமாக நடக்கிறதா என்ற கேள்விக்கு இடமேயில்லை. ஆரம்பித்திருக்கிற தொழில் பேட்டைகளில் யூனிட்டைப் பொறுத்தது அதன் செலவு. 10, 15, 20 யூனிட்டாக இருந்தால் என்னவாகும் என்பது யூனிட்டைப் பொறுத்தது.

**திருமதி பி. கே. ஆர். லட்சுமிகாந்தம்:** தொழில் பேட்டைகளில் பொதுவாக டெக்ஸ்டைல் சம்பந்தமான தொழிற்சாலைகள் அனுமதிக்கப்படுவதில்லை யென்று தெரிகிறது. ஆனால் சிறிய யூனிட்டாக இருக்கிற ரா காட்டன் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கான அனுமதி அளிக்கப்படுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** இதை எல்லாம் அப்ளிகேஷன் போட்டால் டைரக்டர் பரிசீலனை செய்வார்கள்.

**திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்:** ஒரு சில இடங்களில் தொழில் பேட்டைகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் அங்கு ஒன்றும் தொழிலே நடப்பதில்லை. காரணம் என்ன?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** எந்த இடம் என்று கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்:** காரைக்குடி பக்கத்தில் அமராவதிபுதூர்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** அது இப்போதுதான் ஆரம்பித்து இரண்டு மாதங்கள் கூட ஆகவில்லை. தொழில் வைத்து தொழில் பேட்டை வைப்பதில்லை. தொழில் பேட்டை வைத்து தொழில் வளர்ப்பது. ஆகவே, கொஞ்சம் பொறுத்துக் கொண்டிருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. அ. தியாகராசன்:** புதுக்கோட்டையில் நிறுவப்பட்டிருக்கிற தொழில் பேட்டையில் இரண்டு தனியார்கள்தான் ஏதோ ஸ்க்ரூ, வலை போன்றவை செய்து கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்களைக் கேட்டபோது கூட ஒரு அலுமினியம் தொழிற்சாலை வைப்பதாகச் சொன்னார்கள். அதை நிறுவ அரசாங்கத்திற்கு எவ்வளவு தாமதமாகும்?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** தொழில் பேட்டைகள் எல்லாம் தனியார்களுக்கு ஊக்கம் அளிப்பதற்காகத்தான். குறிப்பாக சிறிய தொழில்கள் செய்யும் தனியார்களுக்கு ஊக்கம் அளிப்பதற்காகத்தான். ஆகவே தனியார்கள் வைத்திருப்பது வெற்றிக்கு அறிகுறியே தவிர சரியாக நடக்கவில்லை என்பதற்கு சான்றல்ல. சர்க்கார் அந்த இடத்தில் தொழில் வைக்க இப்போது உத்தேசம் இல்லை.

[5th August 1965

**திரு. வி. எஸ். எஸ். மணி :** கிண்டி தொழில் பேட்டை, அம்பத்தூர் தொழில் பேட்டை இவை மாநிலத்திலேயே பெரிய தொழில் பேட்டைகளாக அமைந்துள்ளன. மின்சார வெட்டு வரும் காலத்தில் அங்கிருக்கக்கூடிய யூனிட்களுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, மின்சார வெட்டு வராது தடுக்க ஏதாவது தர்மல் ஸ்டேஷன் வைத்து இரண்டையும் இணைக்கும்படியான அளவில் தர்மல் ஸ்டேஷன் ஏற்படுத்த உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இப்போது எலக்ட்ரிசிட்டி பட்ஜெட் விவாதம் செய்தோம். நான்காவது திட்டத்தில் பெரிய திட்டங்கள் எல்லாம் தர்மல் திட்டங்கள்தான். எண்ணூரில் 350 மெகாவாட், தூத்துக்குடியில், நெய்வேலி எக்ஸ்பான்ஷனில் 600 மெகாவாட் என்று இருக்கிறதெல்லாம் தர்மல் திட்டங்கள்தான்.

**திரு. மு. சண்முகம் :** தொழில் பேட்டைகள் நிறுவும்போது அரசாங்கம் தாங்களாகவே இடங்களைக் குறிப்பிட்டுத் தேர்ந்தெடுக்கிறார்களா, அல்லது அந்த அந்த வட்டாரத்தில் உள்ளவர்களின் கோரிக்கையின் பேரில் தொழில் பேட்டைகள் அமைக்கப்படுகின்றனவா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கோவாப்பரேட்டிவ் தொழில் பேட்டைகளாக இருந்தால் அந்த வட்டார மக்களின் கோரிக்கையை அனுசரித்து முடிவு எடுக்கப்படுகிறது. சர்க்கார் வைக்கிற தொழில் பேட்டையாக இருந்தால் சர்க்கார் அந்த இடத்தில் தொழில் வளர்ச்சியைப் பெருக்குவதற்கான வாய்ப்புகளைப் பரிசீலனை செய்து முடிவு எடுக்கிறது.

**திரு. து. ப. அழகமுத்து :** இந்தக் கேள்விக்கு அமைச்சர் அவர்கள் கொடுத்த பதில்களில் பின்தங்கிய பகுதிகளில் தொழில் வளராது என்று கூறினார்கள். அடுத்தாற்போல் தொழில் பேட்டை வைத்துத்தான் தொழில் வளர்க்க வேண்டும் என்று கூறினார்கள். இரண்டும் ஒன்றுக்கு ஒன்று முரணாக இருக்கிறதே, காரணம் என்ன ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் அங்கத்தினர் புரிந்து கொள்ளவில்லை. சிலர் நினைப்பதுபோல் கிராமங்களில் தொழில் பேட்டை வைத்து தொழிலை வளர்த்து நகரங்களுக்குக் கொண்டு போக முடியாது. நகரங்களில் இருந்துதான் கொஞ்சம் கொஞ்சமாகக் கிராமங்களுக்குத் தொழில்கள் வர முடியும். ஆகவே முதலில் சென்னை நகரில் வைத்து, அடுத்தபடியாக ஜில்லாக்களில் வைத்தோம், இப்போது ரெவின்யூ டிவிஷன்களில் வைக்கிறோம். இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாக நாம் கிராமப் பகுதிகளுக்குக் கொண்டு போகமுடியும் என்றுதான் சொன்னேன்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** உதகையில் உள்ள போட்டோ பிலிம் தொழிற்சாலை இப்போது உற்பத்தியைத் தொடங்கத் தயாராகயிருக்கிறது. அதற்கு உப தொழில்களாக பிலிம் கன்டெயினர்ஸ், காமரா உற்பத்தி செய்யும் தொழிற்சாலை இவற்றை ஊக்குவிக்க அங்கு ஒரு தொழில் பேட்டை ஆரம்பித்தால் என்ன?



5th August 1965]

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அங்கத்தினர் அவர்கள் அதற்காக முயற்சி எடுத்துக் கொண்டால் நான் வரவேற்கிறேன். அதற்குக் குறைந்த பட்சம் ஐந்நூறு உறுப்பினர்களைச் சேர்த்து கோவாப்பரேட்டிவ் இன்டஸ்ட்ரியல் எஸ்டேட் போட்டால் நாங்கள் 80 சதவிகிதம் அதற்குப் பணம் கொடுக்கத் தயாராயிருக்கிறோம்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** அக்கேஷியா வாட்டில் பார்க்கிலிருந்து ப்ளாஸ்டிக், கலர் போன்றவை, டிஸ்டெம்பர் தயாரிக்கலாம். டிஸ்டெம்பர் ஒரு பாக்கட் 4 ரூபாய் என்று விற்கப்படுகிறது. எங்கள் மாவட்டத்தில் 4 அணாவிற்கு விற்கக்கூடிய மண்ணை எடுத்துக் கலர் போட்டு டிஸ்டெம்பர் செய்யலாம். அதே போன்று கருவிகள் செய்ய தேன் இரும்பு செய்வதற்குக் கூட அங்கு வாய்ப்பு இருக்கிறது. அது போன்ற கருவிகள் செய்ய அங்கு தொழில் பேட்டை அமைத்தால் என்ன ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** தனிக் கேள்வி போட்டால் பரிசீலனை செய்து பார்க்கிறோம். அங்கத்தினர் சொல்வது சாத்தியமா என்பதே எனக்குச் சில விஷயங்களில் சந்தேகமாக இருக்கிறது.

**திரு. அ. ராமசந்திர ராயர் :** தலைவர் அவர்களே, பிரம்பரம் தாலூகாவில் எந்த விதமான தொழிற்பேட்டையும் இல்லை. பக்கத்திலுள்ள புவனகிரியில் ஒரு தொழிற்பேட்டையை அமைப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. அ. தங்கவேலு :** தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள திண்டிவனம் வட்டத்தில் வெள்ளைக் களிமண் கிடைக்கிறது. இதை எடுத்து பல ஊர்களுக்கும் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தக் களிமண்ணை உபயோகித்து அங்கே ஒரு பீங்கான் தொழிற்சாலையை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : Though the main question relates to Industrial Estates, I can answer this supplementary question but I do not think that it will be relevant.

**திரு. அ. தியாகராசன் :** கனம் சபாநாயகர் அவர்களே, நான் முன்னால் கேட்டிருந்த கேள்விக்கு அமைச்சர் அவர்கள் 'இரண்டு கட்டடங்கள்தான் இருக்கின்றன' என்று சொன்னார்கள். கூடுதல் கட்டடங்கள் கட்டிக் காலியாக இருந்தால் நாம் வாடகை கொடுக்க வேண்டியிருக்கும் என்று சொன்னார்கள். ஆகவே, புதுக்கோட்டையில் தொழிற் பயிற்சிக் கூடம் இருக்கின்ற காரணத்தால் அரசாங்கமே ஒரு தொழிலை நடத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : It is a request.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, தொழிற் பேட்டைகள் அமைக்கிற விஷயத்தில் தலைநகரத்தில் ஆரம்பிக்கப் பட்டு, ஜில்லா அளவுக்குப் போய் அதிலிருந்து இப்போது

[5th August 1965

ரெவின்யூ டிவிஷன் அளவுக்குப் போயிருக்கிறது. இதில் நிலம் ஆர்சிதம் செய்வதில் நகரத்தைப் பொறுத்தளவில் நிலம் கிடைப்பது மிகவும் சிரமமாய் இருக்கிறது. கிராமத்தைப் பொறுத்த அளவில் வசதியான, போதுமான நிலங்கள் கிடைக்கின்றன. ஆகவே, நகரத்தை விட்டுவிட்டு, குறைந்தது நகரத்திலிருந்து 10 மைல்கள் தள்ளியிருக்கின்ற வகையில், கிராமங்களில் தொழிற்பேட்டையை அமைக்க அரசாங்கம் முன் வருமா ?

**கனம் திரு. ஆர் வெங்கட்டராமன் :** தொழிற்பேட்டை அமைப்பதற்கு நிலம் மட்டும் முக்கியமான விஷயம் அல்ல. நிலத்தை வைத்துக் கொண்டு இண்டஸ்ட்ரீஸ்ஸை ஏற்படுத்திவிட முடியாது. விவசாயத்தை எடுத்துக் கொண்டு பார்த்தால் நிலம் கிடைத்தால் நல்ல வருமானம் கிடைக்கும். தொழிற்பேட்டைகளில் இயந்திரங்களில் இருந்துதான் வருமானம் கிடைக்கும். ஆகவே, நிலம் இருக்கிறது என்பதற்காக மட்டும் யாராவது தொழிலை ஆரம்பித்தால் நிச்சயம் கஷ்டப்படுவார்கள் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

* 87 Q.—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to establish Industrial Estates at Tuticorin, Sivakasi, Vyasarpadi and Udumalpet; and

(*b*) if so, when will the same be implemented?

THE HON. SRI R. VENKATARAMAN. (*a*) Government do not propose to set up Industrial Estates in these places. However, interested entrepreneurs have formed themselves into Co-operative Societies and Industrial Estates are being established by them in these places. They are given financial assistance on the approved pattern by the Government.

(*b*) The schemes are under implementation.

* 88 Q.—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the acquisition of lands for the establishment of the Industrial Estate in Salem has been completed; and

(*b*) if not, the reasons thereof?

THE HON. SRI R. VENKATARMAN : (*a*) No.

(*b*) A total extent of 26.56 acres of land in Narasojipatti and Reddiyur villages required for the establishmenat of an Industrial Colony at Salem was notified for acquisition under the Land Acquisition Act. But the owners of a major portion of the lands (19.72 acres) filed Writ Petitions in the High Court challenging the validity of the land acquisition proceedings and also obtained stay orders restraining the Land Acquisition Officer from passing the award. The Writ Petitions are still pending in the High Court.

**திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே,** சேலத்தில் தொழிற்பேட்டை வைக்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக இருந்து வருகிறது. இருந்தும், இதில் இன்னும்



5th August 1965]

முடிவு எடுக்கப்படாமல் திட்டம் நிறைவேறாத அளவுக்கு இருந்து வருகிறது. ஆகவே, குறிப்பிட்ட இடத்திற்காகக் காத்திராமல் வேறொரு தகுந்த இடத்தையாவது இப்போது எடுத்து, அங்கே தொழிற்பேட்டையை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இப்போது பார்த்தது, இரண்டாவதோ மூன்றாவதோ பார்க்கப்பட்ட இடம். இனியொரு இடம் பார்த்தாலும்கூட, இதே மாதிரி ரிட், இதே மாதிரி அப்ஜெக்ஷன் எல்லாம் வரும். இதையெல்லாம் பார்க்கும்போது, சேலத்தில் உள்ள மக்களுக்கு தொழிற்பேட்டை அமைப்பதில் அக்கறை இல்லையோ என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

* 89 **கேள்வி.—திரு. ஆர். அப்துல் கலீல் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் ராணிப்பேட்டை தொகுதியில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு தொழிற்பேட்டை நிறுவும் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றதா ?

(இ) ஆம் எனில் அதன் விவரங்கள் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) The proposals for inclusion in the Fourth Five-Year Plan have not yet been finalised. The location of the various Industrial Estates to be established during the Fourth Five-Year Plan period will be decided only at the time of sanctioning the specific schemes.

(*b*) The question does not arise.

* 90 **கேள்வி.—திரு. ஆர். அப்துல் கலீல் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், சோளிங்கர் தொகுதியைச் சேர்ந்த காவேரிப்பாக்கத்தில், ஒரு தொழிற்பேட்டை நிறுவும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

(இ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No.

(*b*) The question does not arise.

MR. SPEAKER : Questions are over.

**[Note.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## II—NON-OFFICIAL BUSINESS

### (i) BILLS

### (1) *The Madras Agriculturists Relief (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 13 of 1965).*

**திரு. அ. தியாகராசன் :** கனம் சபாநாயகர் அவர்களே, 1965-ம் ஆண்டு தமிழ்நாடு உழவர்கள் இடருதவி (திருத்த) மசோதாவை (சட்டசபை மசோதா எண் 13-1965) ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று பிரேரேபிக்கிறேன்.

[5th August 1965

Mr. SPEAKER: Motion moved—"That the Madras Agriculturists Relief (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 13 of 1965) be taken into consideration".

**திரு. அ. தியாகராசன் :** கனம் சபாநாயகர் அவர்களே, அரசாங்கம் விவசாயிகளுக்கு எவ்வளவோ சலுகைகள் செய்திருக்கிறது. ஆனால் வட்டி விஷயத்தில் அரசாங்கம் விவசாயிகளுக்குச் சலுகை காட்டுவதில் சிறிது குறைபாடு இருக்கிறது என்ற காரணத்திற்காகத்தான் இந்தத் திருத்த மசோதாவைக் கொடுத்திருக்கிறேன். 1937-லிருந்தும் அதற்கு முன்பும் வட்டி விகிதம் விவசாயிகளுக்குத் தாராளமாக வழங்கப்பட்டு வந்தது. 1938-ம் வருஷத்திலிருந்து விவசாயிகள் வட்டி கொடுப்பதில் அதிகமாகக் கொடுக்க வேண்டியிருப்பதன் காரணமாக மிகவும் சிரமப்படுகிறார்கள் என்பதை இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். 1937-ல் எம்.எ. ஆர். (4/38) சட்டம் வந்த பின்னாலும் அந்தச் சட்டம் சரியான முறையில் இல்லாததினால்தான் இந்தத் திருத்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறேன். எங்கள் பகுதியில் அதாவது புதுக்கோட்டைப் பகுதியில் டாம்டுபட் சட்டம் அமலுக்கு வந்தபோது வட்டி விகிதத்தில் சில சலுகைகள் கொடுக்கப்பட்டது. அந்தச் சலுகைகூட இன்றைய நிலையில் கேரளத்திலும், பம்பாயிலும் அமல் நடத்தப்பட்டு வருகிறது. ஆனால் இது சென்னை மாநிலத்தில் அமல் நடத்தப்படவில்லை. இதன் காரணமாக சென்னை மாநிலத்தில் இருக்கின்ற விவசாயிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அதாவது, ஒருவரிடமிருந்து ஆயிரம் ரூபாய் வாங்கினோம் என்றால் வட்டியில் மட்டுமே ஆயிரத்திற்கு மேற்பட்டு கொடுக்க வேண்டியிருக்கிறது. இரண்டு நாட்களுக்கு முன்பு இங்கு பேசிய திரு. தண்டாயுதபாணி பிள்ளை அவர்கள் கூடச் சொன்னார்கள். லாண்ட் மார்ட்கேஜ் பாங்கில் 10 ஆயிரம் கடன் வாங்கினால் வட்டியாக 7,000 ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது என்று வருத்தப்பட்டு பேசினார்கள். அரசாங்கத்தால் கொடுக்கப்படுகிற கடனுக்கும் இவ்வளவு வட்டி கொடுக்க வேண்டியிருக்கிறது. இதே நேரத்தில் இதைவிட அதிகமாக விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே விவசாயிகளுக்குச் சலுகை அளிக்கவேண்டும் என்ற எண்ணத்தில்தான் இந்தத் திருத்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறேன். இந்தத் திருத்த மசோதாவை ஏற்றுக்கொண்டு நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

9-00 a.m. * **கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவைக் கொண்டுவந்துள்ள கனம் அங்கத்தினர் அவர்கள், சிறிய நோக்கத்துடன், கடனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்று கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் குறிப்பிட்டபடி 1937-38-ம் ஆண்டிலே அப்போது இருந்த சட்ட மன்றத்திலே விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் என்று ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. கடனில் மூழ்கி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு அந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்டத்தின்படி 1932-ம் ஆண்டுக்கு முன்னே கடன் வாங்கி, அந்தக் கடன் வாங்கியதற்குத்



5th August 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

திருப்பிக் கொடுத்தது, அசல் கடன் எவ்வளவு வாங்கினார்களோ அதைப்போல் இரட்டிப்பாக ஆகிவிட்டால் அந்தக் கடன் தீர்க்கப்பட்டதாக ஆகிவிடும் என்பது அந்தச் சட்டம். அதிலே 1932-ம் ஆண்டு என்று ஏன் குறிப்பிட்டார்கள் என்றால் அதற்கு முன்னே இருந்த விலைவாசி, பொருளாதார நிலை ஆகிய விஷயத்தில் அதற்குப் பிறகு ஒரு மாறுதல் இருந்தது. 1932-க்கு முன்னே வாங்கிய அசலுக்கு இரட்டிப்பாகக் கொடுத்து விட்டால் கடன் தீர்ந்து விடும் என்று சட்டம். அதோடுகூட சட்டம் நிறைவேற்றப்பட்டதிலிருந்து 6¼ சதவீதம் தான் வட்டி வாங்குவது என்று அதிலே போடப்பட்டது. அதற்கு முன் வட்டி வீதம் அதிகமாக இருந்தது. அதற்கு மேல் வாங்கக் கூடாது என்பது சட்டம். அது விவசாயிகளுக்கு உரிய சட்டம். விவசாயிகள் அல்லாதவர்களுக்குக்கூட நிவாரணம் அளிக்க வேண்டுமென்ற நோக்கம் கனம் அங்கத்தினருக்கு இருக்கிறது. 1952-ம் ஆண்டிலே மணி லெண்டர்ஸ் ஆக்ட் என்று விவசாயிகள் அல்லாதவர்களுக்கு நிவாரணம் கொடுக்க ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. 6¼ வட்டி வீதம் 1937-ம் ஆண்டிலிருந்து இருக்கிறது. 6¼ வட்டி வீதத்திலே யே நீண்ட காலமாகக் கொடுக்காமல் இருந்தால் இரட்டிப்பு ஆகலாம். அரசினர்கூட 6¼ வட்டி வீதத்திற்கு வாங்குகிறார்கள். அதற்கு மேல் யாரும் வாங்க முடியாது. இந்த வீதத்திலேயே நீண்ட காலம் இருந்தால் இரட்டிப்பு ஆகலாம். இரட்டிப்பு ஆகிவிட்டால் கடன் தீர்ந்ததாகக் கருதப்படும் என்பதுதான் டாம்டுபட் கொள்கை. அதற்காகக் கடனை ரத்து செய்வது என்பது நியாயம் அல்ல. விவசாயிகளுடைய நன்மையைத்தான் முக்கியமாகக் கவனிக்க வேண்டும். 6¼ சதவீதம் என்று குறிப்பிட்ட பிறகு கூட, நீண்ட காலம் வைத்திருந்து இரட்டிப்பாக ஆகியிருந்தால் ரத்து செய்யலாம் என்றால், விவசாயிகளுக்குக் கடனே கிடைக்காது. இன்றைக்கு அரசாங்கமே அவர்களுக்குக் கடன் கொடுக்கிறது. 6 சத வீதம் கொடுக்கிறது. இதைத் தவிர மற்றவர்கள் மூலமும் கடன் வசதி வேண்டியிருக்கிறது. மசோதா இப்படியே ஏற்றுக்கொள்ளப்பட்டால் அவர்களுக்குக் கடன் வசதியே கிடைக்காமல் போய்விடும். ஆகவே இந்த மசோதாவை வற்புறுத்த வேண்டாம் என்று கனம் அங்கத்தினரைக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. அ. தியாகராசன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இதிலே அரசாங்கம் கடனைக் கொடுக்கிறது என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்களே கூட ஒப்புக்கொண்டார்கள் அதிகமாக வட்டி கொடுக்க நேரிடுகிறது என்று. நீண்ட காலம் ஏற்பட்டு விட்டால் இரட்டிப்பு வட்டி ஆகிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். டாம்டுபட் கொள்கைப் பிரகாரம் நீண்ட காலம் இருந்தாலும் பிரின்சிபல் அமௌண்டைப் போல் இரட்டிப்பு ஆகிவிட்டால் கடன் தீர்ந்து விடும் என்பதாகும். அது கேரள மாகாணத்திலும், மகாராஷ்டிரா மாகாணத்திலும் இருக்கும்போது சென்னை மாகாணத்திலும் ஏற்படுத்தினால் குறை இருக்காது. விவசாயிகளுக்கு இன்னும் அதிகமாகச் சலுகை அளிப்பதாக அர்த்தமாகும் என்று சொல்லிக்

[திரு. அ. தியாகராசன்] [5th August 1965

கொள்கிறேன். இரட்டிப்பாக ஆகி விட்டால் கடன் தீர்ந்ததாக ஆகிவிடும் என்றால், வட்டி, வட்டிக்கு வட்டி என்று வாங்குகிற வகையில் பிசினஸ் போய்விடும் என்று தனியார்கள் வேண்டுமானால் கொடுக்காமல் போகலாம். அரசாங்கம் விவசாயிகளுடைய நன்மையில் அக்கறை கொண்டு எல்லாவிதக் கடன்களையும் அரசாங்கமே கொடுக்கின்ற காரணத்தினால், தனியாரிடத்தில் வாங்க வேண்டிய அவசியம் ஏற்படாது. விவசாயிகள் விவசாய சம்பந்தமாக வாங்குகிறார்களே தவிர, சொந்த நலனை உத்தேசித்து வாங்குவதில்லை, சொந்த வேலைகளுக்கு வாங்குவதில்லை. ஆகவே இந்த மசோதாவை மீண்டும் ஆலோசித்து கனம் அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டு அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, டாம்டுபட் பிரின்சிபலை நாம் அனுசரிக்கவில்லை என்று சொல்வது சரியல்ல. முன்பு நிறைவேற்றப்பட்ட விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டப்படி டாம்டுபட் ப்ரின்சிபிள் இருக்கிறது. 1932-க்கு முன்னால் வாங்கியிருந்து இரட்டிப்பு ஆகி இருந்தால் ரத்து செய்ய வேண்டும் என்பது. அதோடு 6¼ வீதத்திற்கு மேல் வட்டி வாங்கக் கூடாது என்று சட்டம் இருக்கிறது. 6¼ இருந்தும் இரட்டிப்பு ஆகியிருக்கலாம் என்றால், கடன் வாங்கினால் கொடுக்கின்ற எண்ணம் இருக்க வேண்டும். அப்படிக் கொடுப்பது இல்லையென்றால், இரட்டிப்பு ஆகிறது. அரசாங்கம் பரிபூர்ணமாகக் கடன் கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டாலும் வேறு வகைகளில் கடன் வேண்டியிருக்கிறது. எதாவது கலியாணம் இருந்தால் கடன் வேண்டியிருக்கிறது. வேறு விதங்களில் கடன் வேண்டியிருக்கிறது. 6¼ வீதம் என்று குறைக்கப்பட்ட பிறகு, டாம்டுபட் ப்ரின்ஸிபிளை ஏற்றுக்கொண்ட பிறகு, 6¼ வீதம் இருந்தால் கூட இரட்டிப்பு ஆகிறது என்றால், நீண்ட காலத்திற்கு வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுப்பதில்லை என்று ஏற்படும். ஆகவே, இந்த மசோதாவை எதிர்க்கிறேன்.

MR. SPEAKER : The question is—

"That the Madras Agriculturists Relief (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 13 of 1965) be taken into consideration".

The motion was put and lost.

(2) *The Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill*, 1965.

MR. SPEAKER : The hon. Member Srimathi T. N. Anandanayaki who has given notice of this Bill is not in her seat. So it is deemed to have been withdrawn.

(3) *The Hindu Marriage (Madras Amendment) Bill*, 1965.

MR. SPEAKER : The hon. Member Sri S. Madhavan, who has given notice of this Bill is not in his seat. So it is deemed to have been withdrawn.

Both the lawyers (Srimathi T. N. Anandanayaki and Sri S. Madhavan) are not in their seats.



## (ii) RESOLUTIONS

(1) *Inclusion of Tamil as one of the media for the Union Public Service Commission Examinations—Discussion*—cont.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்க அலுவலர் தேர்வுக் கழகம் நடத்தும் பல்வேறு தேர்வுகளையும் எழுதுவதற்கான மொழிகளுள் தமிழையும் ஒன்றாகச் சேர்க்க வேண்டிய அவசியத்தை இந்திய அரசாங்கத்திடம் வற்புறுத்துமாறு இந்த —அவை பரிந்து உரைக்கின்றது என்று கனம் உறுப்பினர் திரு. மதியழகன் கொண்டு வந்த தீர்மானத்தை ஆதரிக்கின்ற வகையில் சில கருத்துக்களைக் கூற நான் விரும்புகிறேன். மத்திய அரசினுடைய அலுவலர் தேர்வுக் கழகம் நடத்துகிற தேர்வுகளில் தமிழும் ஒரு மொழியாக இருக்க வேண்டும் என்பதை வற்புறுத்துவதற்கான காரணங்களை இதை முன் மொழிந்து பேசிய கனம் உறுப்பினர் திரு. மதியழகன் அவர்கள் தெளிவாக எடுத்து வைத்திருக்கிறார்கள். இந்த மாநில ஆட்சி மொழி தமிழாக இருக்க வேண்டுமென்ற முறையில், மாநில அலுவலகங்களில் தமிழில் நடக்கும் வகையில் அரசினர் அலுவலர் தேர்வுக் கழகத்தில் தமிழைப் புகுத்த வேண்டுமென்று வற்புறுத்தி வந்திருக்கிறோம். மத்திய அரசினர் அலுவலர் தேர்வுக் கழகத்தினர் நடத்தும் தேர்வுகள் ஆங்கிலத்திலேயே நடைபெற்று வருகின்றன. அதிலும் தமிழிலே எழுத வாய்ப்பு ஏற்படுத்தித் தர வேண்டுமென்று வற்புறுத்துகிற முறையில்தான் இந்தத் தீர்மானம் அமைந்திருக்கிறது. தமிழகத்திலே உள்ள அவ்வளவு அலுவலகங்களும் தமிழிலேயே நடைபெற வேண்டும் என்ற ஆவல் மக்களிடத்திலே இருக்கிறது. அந்த அடிப்படையில் தமிழக ஆட்சி மொழி தமிழாக மாற வேண்டுமென்று கூறி தமிழை ஆட்சி மொழியாக ஏற்படுத்தியிருக்கிறோம். பல்வேறு துறைகளில் தமிழ் மெள்ள மெள்ள ஆட்சி மொழியாக ஆகிக்கொண்டு வருகிறது. என்றாலும் கூட எதிர்பார்த்த அளவு, விரும்பத்தக்க அளவு தமிழ் ஆட்சி மொழியாக ஆகவில்லை என்ற குறை அத்தனை பேர்களிடத்திலும் இருக்கிறது. இந்த மன்றத்திலும்கூட தமிழை அதிகமாகப் பயன்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். மசோதாக்கள், திருத்தங்கள், பல்வேறு பிரேரணைகள், ஓட்டுக்கு விடுகிற முறை அத்தனையும் மெள்ள மெள்ளத் தமிழிலேயே கொண்டுவர வேண்டும். பிற மாநில அவைகளிலே கூட அந்தந்த மாநில ஆட்சி மொழியாகிய இந்தியில் நடத்த வேண்டுமென்றும், மசோதாக்கள் ஆங்கிலத்தில் கொடுக்கப்பட்டாலும், ஆட்சி மொழியாக இருக்கிற இந்தியிலேயும் தரப்பட வேண்டுமென்ற முறை இருக்கிறது. அந்த முறையில் மேலும் தமிழகத்தைப் பொறுத்த வரையில், தமிழை ஆட்சி மொழியாக நடைமுறைப்படுத்துவதில் நாம் மிக விரைவாகப் போக கடமைப்பட்டிருக்கிறோம். தமிழை நாம் ஆட்சி மொழியாக ஆக்கிவிட்டாலும், அதை நடைமுறைப் படுத்துவதில் காலதாமதம் இருப்பதை அண்மையில் ஒரு பொதுக் கூட்டத்தில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தலைவர் சுட்டிக் காட்டியிருக்கிறார். அந்தக் குறைபாட்டை அத்தனை பேர்களும் சேர்ந்து போக்க வேண்டும் என்ற கருத்தை நாம் கொண்டவர்களாக இருக்கிறோம். தமிழகத்ல் இருக்கிற மக்கள் அத்தனை பேர்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [5th August 1965

களுக்கும் தமிழகத்தில் நடைபெறுகின்ற அலுவல்கள் நம்முடைய
தாய்மொழியில், தமிழிலேயே நடைபெற வேண்டும் என்ற உணர்வு
ஏற்பட்டிருக்கிறது. அதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கான
முயற்சிகளை தமிழக அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது. அப்படி
மேற்கொண்டு வருகிற முயற்சிகளை மேலும் மேலும் செம்மைப்
படுத்த வேண்டும், மேலும் மேலும் அந்த முயற்சிகள் வளர
வேண்டும் என்று நாம் வற்புறுத்திக் கொண்டு வருகிறோம். அதே
நேரத்தில் மத்திய அரசு அலுவலகங்கள் இங்கே பல இருக்கின்றன.
தமிழக அரசின் கீழே உள்ள அலுவலகங்களில் தமிழ் ஆட்சி
மொழியாக வேண்டும், பொது மக்கள் தாங்கள் தருகின்ற
விண்ணப்பங்களைத் தமிழிலேயே தரவேண்டும். தாங்கள் கோரு
கின்ற விடைகளைத் தமிழிலேயே பெறவேண்டும். அப்படிப் பெறு
வதற்கான வாய்ப்பு ஏற்படுகின்ற அதே நேரத்தில், தமிழகத்தில்
இருக்கிற இந்திய அரசாங்கத்தின் கீழே இருக்கிற அலுவலகங்
களில், அலுவல்கள் தமிழிலேயே நடைபெறுகிற வாய்ப்பு இருந்
தால்தான் தமிழ் மக்கள் தங்களுடைய விருப்பத்தை நிறை
வேற்றிக்கொள்வதற்கு வழிவகைகள் ஏற்பட முடியும். இங்கே மா
வட்ட ஆட்சியாளர் அலுவலகங்களில், வட்ட ஆட்சியாளர்
அலுவலகங்களில், தமிழகத்தைச் சேர்ந்த அரசின் கீழே இருக்கிற
பல்வேறு அலுவலகங்களில் தமிழை ஆட்சி மொழியாக்கிவிட்டு,
தமிழகத்தில் இருக்கிற இந்திய அரசு அலுவலகங்களில் இந்தி
அல்லது ஆங்கிலத்தைத் தொடர்ந்து ஆட்சி மொழியாக வைத்துக்
கொண்டிருக்கிற நிலைமை இருந்தால், நோக்கம் நிறைவேறுவதற்கு
வழி இல்லை. தமிழகத்தில் வருமான வரித் துறை இருக்கிறது,
அது தமிழக பொதுமக்களுடன் தொடர்பு கொள்ளக்கூடிய ஒரு
துறை. தமிழகத்தில் கலால் துறை அலுவலகம் இருக்கிறது. அது
தமிழக பொது மக்களுடன் தொடர்பு கொள்ளக்கூடிய துறை.
தமிழகத்தில் அஞ்சலகங்கள் இருக்கின்றன. மற்றும் அதைப்
போன்று பல துறைகள் இருக்கின்றன. அவை தமிழ் மக்களுடன்
தொடர்பு கொள்ளக்கூடிய துறைகள். தமிழகத்தில் புகைவண்டித்
துறை அலுவலகம் இருக்கிறது. அதுவும் தமிழகப் பொது மக்க
ளுடன் தொடர்பு கொள்ளக்கூடிய துறைதான். இந்திய அரசின்
கீழே உள்ள இந்த அலுவலகங்களில் பணிபுரிகிறவர்கள் முழுக்கத்
தமிழ் தெரிந்தவர்களாக இருந்து பணிகளை நிறைவேற்றக்
கூடியவர்களாக இருந்தால்தான், தமிழ் மக்களிடையே தொடர்பு
கொள்ளக்கூடிய நிலைமை ஏற்பட முடியும். இந்திய அரசின்கீழ்
இருக்கிற அலுவலகங்களில் பணிபுரிகிறவர்கள் தமிழ் அறிவோடு,
தமிழ் ஆற்றலோடு தங்களுடைய பணிகளைச் செய்யவேண்டியிருக்
கிறது. அந்த வேலைக்கு அவர்கள் தேர்ந்தெடுக்கப்படும்பொழுதே,
தமிழிலே அவர்கள் தங்கள் பணிகளை ஆற்றுவதற்குத் திறமை
படைத்தவர்களா என்று பார்க்க வேண்டிய அவசியம் ஏற்படு
கிறது. அந்த வகையில் தமிழகத்தில் இந்திய அரசின் கீழே
உள்ள அலுவலகங்களில் வேலை பார்க்க விரும்புகிறவர்கள் யாராக
இருந்தாலும் சரி, தமிழகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்
சரி, பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி,
போதுமான தமிழறிவு படைத்தவர்களாக இருக்க வேண்டும்.



5th August 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

அப்பொழுதுதான் கலால்துறை தலைவராக வர முடியும், தமிழக
அஞ்சலகத் தலைமை அதிகாரியாக வர முடியும் என்ற நிலைமை
ஏற்பட்டால்தான் தமிழக மக்களுடைய ஆவல் நிறைவேற
முடியும், தமிழகத்தில் ஆட்சி தமிழிலேயே நடைபெறுகிறது என்ற
நிலைமை ஏற்பட முடியும். அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட வேண்டு
மென்றால், தேர்வுக் கழகம் அதற்குரிய அலுவலர்களைத் தேர்ந்
தெடுக்கும் பொழுதே போதுமான அளவுக்கு தமிழ் படித்தவர்
களா என்று பரிட்சை செய்ய வேண்டும். எனவே, இந்திய அரசு
நடத்துகின்ற மத்திய அரசாங்க அலுவலகத் தேர்வுக் கழக தேர்வு
களிலே தமிழிலே எழுதுகின்ற வாய்ப்பு ஏற்பட்டு, தமிழிலே எழுதி
வெற்றிபெற்றவர்களைப் பார்த்து, தமிழக அலுவலகங்களில் நியமிப்
பார்கள் என்ற நிலைமை ஏற்பட்டால்தான், தமிழைப் படிக்கவும்,
தமிழிலே தேர்ச்சி பெறுவதற்குமான வாய்ப்பு ஏற்பட முடியும்.
ஆகவே, இந்த நிலைமையை உருவாக்குகின்ற முறையில் மத்திய
அரசு அலுவலகத் தேர்வுக் கழகத்தேர்வுகள் தமிழிலே நடைபெறு
வதற்கு வாய்ப்பு ஏற்படுத்தி தமிழகத்தில் இருக்கிற இந்திய அரசு
வழிவகைகள் செய்ய வேண்டும், அதே போன்று பிற மொழிகளும்
அதில் இணைக்கப்பட்டால்தான் அந்தந்த மாநிலங்களிலே உள்ள
மத்திய அரசாங்க அலுவலகங்களில் அந்தந்த மாநில மொழியில்
அலுவல்கள் நடைபெறுவதற்கு வாய்ப்பு ஏற்படும். அதைக்
காங்கிரஸ் கட்சிக் கொள்கை அளவிலே ஏற்றுக்கொண்டிருக்கிறது
என்பதைக் காங்கிரஸ் கட்சியின் செயற்குழுவின் தீர்மானமும்,
மற்றவைகளும் தெளிவுபட எடுத்துச் சொல்கின்றன. ஆளும்
கட்சிக்கும், எதிர்க் கட்சிக்கும் இந்தக் கருத்தைப் பொறுத்த
வரையில் வேறுபாடு இருப்பதாகத் தெரியவில்லை. இந்தக்
கருத்தை வற்புறுத்தி இந்த மாநில அரசாங்கத்தின் எண்ணத்
தைத் தெரிவிப்பதற்கு இந்தத் தீர்மானம் மிகவும் பயன்படக்கூடிய
ஒன்றாக இருக்கும்.

வர இருக்கின்ற பாராளுமன்றத் தொடர் கூட்டத்தில் ஆட்சி
மொழித் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்
படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்ற
செய்தி இன்றைய காலை செய்தித் தாளில் வந்துள்ளது. அதற்கான
நகல் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்றும் அந்தச் செய்தி கூறுகிறது.
இந்தக் கட்டத்தில் இப்படி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதன்
மூலம் இந்த மாநில அரசினுடைய எண்ணத்தை மத்திய அரசாங்
கத்திற்குத் தெரிவிப்பதற்கு, இந்தக் கருத்துக்கு அதிக வலுத்
தேடுவதற்கு வாய்ப்பு ஏற்படும். ஏற்கெனவே பத்திரிகையில்
வந்த செய்தியில் ஆட்சி மொழிச் சட்டம் எந்த வகையில் திருத்தப்
படும் என்று கோடிட்டுக் காட்டப்படுகின்ற முறையில் நகல்
தீர்மானம் செய்தித் தாளில் வந்திருக்கிறது. அதிலே மத்திய
அரசாங்க அலுவலகத் தேர்வுக் கழகம் நடத்தக்கூடிய தேர்வுகள்
மாநில மொழிகளிலும் நடைபெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்
படும் என்ற கருத்து இடம் பெற்றிருக்கும் என்று எதிர்பார்க்கப்
பட்டது. ஆனால், கோடிட்டுக் காட்டப்பட்ட இந்த நகல் தீர்மானம்
மத்திய அரசு அலுவலகத் தேர்வுக் கழக தேர்வுகளின் மொழிகளைப்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [5th August 1965

பற்றி எந்த முடிவும் எடுத்து, அதற்கு வழிவகை தேடாத முறையில்தான் அமைந்திருக்கிறது. அண்மையில் நடைபெற்றிருக்கின்ற பாராளுமன்றத் தொடர் கூட்டத்தில் அந்த அடிப்படையில் சட்டம் திருத்தப்பட்டு சேர்க்கப்படுமா என்பது ஐயப்பாட்டுக்கு உரியதாக இருக்கிறது. கோடிட்டுக் காட்டப்பட்ட நகல் தீர்மானத்தில் அதற்கு இடம் வகுக்கப்படவில்லை. எனவே இந்தச் சட்ட மன்றத்தின் மூலம், இந்தச் சட்டம் உருவாகும் பொழுதே இந்தக் கருத்து வலியுறுத்தப்படுமேயானால், அதிலே இந்த எண்ணத்தைச் சேர்த்துக்கொள்வதற்கு வழிவகைகள் ஏற்பட முடியும். ஆகவே, இந்தத் தீர்மானம் மிகமிக பயன்படக் கூடிய ஒன்றாகும். இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் இந்த மாநில அரசாங்கத்தின் கருத்தை நிறைவேற்றுவதற்கு வழிவகைகள் ஏற்படக்கூடும்.

எதிர்காலத்தில் இந்தியத் துணைக் கண்டத்தில் அத்தனை மொழிகளும் சம அந்தஸ்து பெற வேண்டும், சம வாய்ப்பு பெற வேண்டும் என்ற நிலைமைகள் இருந்து கொண்டு வருகின்றன. அதற்கான உணர்வுகள் நாளுக்கு நாள் வலிவுபெற்றுவரும் தன்மைகளைப் பார்க்கிறோம். தங்கள் தங்கள் தாய்மொழி ஆட்சி மொழிக்குரிய அந்தஸ்து பெற வேண்டும். இடம் பெறவேண்டும் என்று அத்தனை பேர்களும் கருத்துத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசு அலுவலகத் தேர்வுக் கழகம் நடத்துகின்ற தேர்வுகளை மாநில மொழிகளிலே எழுதுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தர வேண்டும். அப்படிப்பட்ட மக்களுடைய விருப்பத்தை நிறைவேற்றித்தரும் அளவுக்கு நிலைமைகள் ஏற்பட வேண்டும் என்ற அளவுக்கு தன்மைகள் வளர்ந்து கொண்டு வருகின்றன. தங்களுடைய தாய் மொழி உரிய இடம் பெற்றிருக்கிறது என்ற நிலைமையை உருவாக்கித் தரவேண்டும் என்ற தன்மைகள் வளர்ந்து வருவதைப் பார்க்கிறோம்.

சாதாரணமாக இந்தியத் துணைக் கண்டத்தில் பல்வேறு மதங்கள் இருந்தபோதிலும், ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சார்ந்ததாக இந்திய அரசு தன்னை ஆக்கிக் கொள்ளாமல் மதச் சார்பற்ற சர்க்காராக தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சார்ந்ததாக இந்திய அரசு தன்னை ஆக்கிக் கொள்ளுமானால், அதன் காரணமாக நாட்டிலே மாச்சரியங்கள், சண்டைகள், சச்சரவுகள் ஏற்படக்கூடும். அப்படிப்பட்ட பிளவுகள், பேதங்கள், கிளர்ச்சிகள், சண்டைகள், சச்சரவுகள் இவைகளையெல்லாம் தவிர்ப்பதற்கு தன்னை மதச்சார்பற்ற சர்க்கார் என்று இந்திய அரசு பிரகடனப்படுத்திக் கொண்டிருக்கிறது. அத்தனை மதங்களுக்கும் சம அந்தஸ்து, சம மதிப்பு கொடுப்பதன் மூலம், அத்தனை மதங்களுக்கும் ஆதரவு கொடுப்பதன் மூலம், அத்தனை மக்களுக்கும் சம வாய்ப்புக் கொடுப்பதன் மூலம், மதத்தின் காரணமாக ஏற்படும் சண்டை சச்சரவுகளைத் தவிர்த்திருக்கிறார்கள். அதே போன்று மொழிகளைப்பற்றிய சண்டை சச்சரவுகளை, மொழிகளைப்பற்றி ஏற்படுகின்ற மாச்சரியங்களைத் தவிர்க்கவேண்டு



5th August 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

மென்றால், இந்திய சர்க்கார் மொழி சார்பற்ற சர்க்கார் என்று தன்னைப் பிரகடனப்படுத்திக்கொள்ளவேண்டும். இந்தியாவில் இருக்கிற முக்கியமான மொழிகள் அத்தனைக்கும் சம அந்தஸ்து அளிக்கப்படுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்துதல் வேண்டும், இந்திய அரசு அத்தனை மொழிக்காரர்களுக்கும் திருப்தி ஏற்படுத்துவதற்கு வழிவகைகள் செய்தல் வேண்டும். ஒரு குறிப்பிட்ட மொழிக்குத் தன்னை உரியதாக இந்திய சர்க்கார் ஆக்கிக்கொள்ளக் கூடாது. இந்தி மொழிக்கு உரிய சர்க்காராக தன்னை ஆக்கிக் கொண்டு, இந்தி மொழியையே ஆட்சி மொழியாக இந்திய அரசு ஏற்றுக்கொள்ளக் கூடாது. இந்தி மொழி பெற்றிருக்கிற உரிய இடத்தை அதை விட வளம் மிக்க மொழி பேசுகிறவர்கள், அறிவு மிக்க மொழி பேசுகிறவர்கள், ஆற்றல் மிக்க மொழி பேசுகிறவர்கள், தங்கள், தங்கள் தாய் மொழியும் பெற வேண்டும் என்ற உணர்வு பெற்றவர்களாக இருக்கிறார்கள். அந்த உணர்வு அடங்கிவிடுகின்ற ஒன்று அல்ல. நாளுக்கு நாள் அந்த உணர்வு வளர்ந்து கொண்டு வருகிற நிலைமைகளைத் தான் கண்டு கொண்டு வருகிறோம். 1935, 1940, 1945-ல் இருந்த தங்கள் தங்கள் தாய்மொழி அந்த உரிய இடத்தைப் பெறவேண்டும் என்ற மக்களுடைய உணர்வின் அளவைவிட, 1950, 1955-ல் இருந்த உணர்வின் அளவைவிட, 1960, 1965-ல் அத்தகைய உணர்வு நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு வருகிற தன்மையைப் பார்க்கிறோம். அந்த உணர்வு அடங்கி, ஒடுங்கிவிடவில்லை. தாய் மொழிக்கு உரிய இடம் பெறவேண்டும் என்ற ஆவல் மக்களிடையே வளர்ந்து கொண்டுதான் வருகிறது. தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் தமிழுக்கு உரிய இடம் பெறவேண்டும் என்று விரும்புகிறார்கள். அதைப்போலவே தான் தெலுங்கர்களும், மராட்டியர்களும், வங்காளிகளும் தங்கள் தங்கள் தாய்மொழிக்கு உரிய இடம் பெற வேண்டும் என்று விரும்புகிறார்கள். மொழி சார்பற்ற ஒரு சர்க்கார் என்று இந்திய அரசு தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டு, 14 மொழிகளுக்கும் ஆட்சி மொழி அந்தஸ்து கொடுத்து, இந்திய சர்க்காரின் கீழே நடைபெறுகிற ஆட்சி, அந்தந்த மாநிலத்தைப் பொறுத்து நடைபெறுகின்ற அலுவல்கள் அந்தந்த மாநில மொழிகளிலேயே நடைபெறும் என்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தந்தால் தான் எதிர் காலத்தில் அமைதி ஏற்பட வழி ஏற்பட முடியும். அதற்கு இந்தத் தீர்மானம் உதவி செய்யும் ஒன்றாக இருக்கும். மத்திய அரசு அலுவலகத் தேர்வுக் குழுவில் அத்தனை மொழிகளுக்கும் சம அந்தஸ்து கொடுத்து, சம வாய்ப்புக் கொடுத்து அத்தனை மொழிக்காரர்களையும் திருப்தி செய்தால்தான், எதிர்காலத்தில் மொழி பற்றிய சண்டை சச்சரவுகள் இல்லாமல் இருக்க முடியும். இந்திய அரசின் கீழே இந்திக்கு உரிய இடம் இருப்பது போல், தன்னுடைய தாய்மொழியும் உரிய இடம் பெற்றிருக்கிறது. தமிழுக்கும் ஆதரவு கிடைத்திருக்கிறது என்று 3½ கோடி தமிழக மக்களுக்கு உணர்வு ஏற்பட்டால்தான், தங்களுடைய தாய்மொழி உரிய இடம் பெற்றிருக்கிறது என்ற உணர்வு 3¾ கோடி தெலுங்கர்களுக்கு ஏற்பட்டால்தான், தன்னுடைய தாய்மொழி உரிய இடம்

பெற்றிருக்கிறது என்ற உணர்வு 2¼ கோடி கன்னடியர்களுக்கு ஏற்பட்டால்தான், தன்னுடைய தாய் மொழி உரிய இடம் பெற்றிருக்கிறது என்ற உணர்வு 1¾ கோடி மலையாளிகளுக்கு ஏற்பட்டால்தான், அதே போலத்தான் தன்னுடைய தாய் மொழிக்கு உரிய இடம் கிடைத்திருக்கிறது என்ற உணர்வு 3½ கோடி வங்காளிகளுக்கு ஏற்பட்டால்தான், அமைதியான நிலை நாட்டில் ஏற்பட முடியும்; திருப்தி ஏற்பட முடியும்; எதிர் காலத்தில் அமைதி நாட்டில் நிலவ வழிவகை ஏற்படக்கூடும். அதற்கு உறுதுணை புரியும் அளவுக்கு இந்தத் தீர்மானம் அமைகின்றது. ஆகையினால் தான் இந்தத் தீர்மானத்தின் முக்கியத்துவத்தை உணரலாம். அந்த அளவுக்கு இந்தியை ஆட்சிமொழியாக வற்புறுத்துவதன் மூலமாகவே, மற்றைய மொழிக்காரர்களுடைய உணர்ச்சிகள் எந்த அளவுக்கு எழுந்து வரும் என்பதை மிக நன்றாக உணரலாம். எப்படியும் எதிர்காலத்தில் ஆற்றல் இல்லாத, போதுமான அளவுக்குத் தகுதி பெறாமல் இருக்கிற நிலையில், இந்திதான் ஆட்சிமொழியாக ஏற்படுகின்ற நிலை இருக்கின்ற காரணத்தினால், மற்ற மொழிக்காரர்களுடைய மாச்சரியங்களும், மற்றவைகளும் எழுகின்ற நிலையைப் பார்த்து வருகின்றோம். எதிர் காலத்தில் இந்தி பேசுகிறவர்கள், இந்தி வெறிகொண்டவர்கள் அவர்களை திருப்திப்படுத்திவிட்டால், இந்தியாவில் அமைதி ஏற்பட்டுவிடும் என்று இந்திய அரசு கருதினால், அது தவறு செய்ததாகும். அத்தனை மொழிக்காரர்களையும் திருப்திப்படுத்துகின்ற முறையில் மொழிச் சார்பற்ற இந்திய அரசாக அமைந்தால்தான், பல மொழிகள் கொண்ட இந்தியாவில், அமைதி நிலவும். தேவைப்படுகின்ற அளவுக்குப் பிறநாடுகளிலிருந்து பாதுகாப்பு அளிக்க, மாற்றார்களை முறியடிக்க, ஜனநாயகத்தை வலிவு பெற்றதாகச் செய்ய, ஒற்றுமை, மற்றவைகளும் நிலவும். இந்தியாவின் எதிர் காலம் இந்தி பேசும் மக்களைப் பொறுத்து மட்டுமே அமைந்து விடாது; இந்திக்காரர்களுடைய உணர்ச்சிகளை மதித்து, அவர்களுடைய வெறி உணர்ச்சிக்கு மதிப்புக் கொடுத்து, அவர்களுடைய எண்ணங்களை நிறைவேற்றி விட்டால் மட்டும், அதற்கான வகைகளில் சட்டங்களை திருத்தி அமைத்து விட்டால் போதும் என்று இந்திய அரசு கருதினால், இந்தியாவின் எதிர்காலம் அமைதியாக இருக்க முடியுமா என்றால், முடியாது. நாற்பத்து நான்கு கோடி மக்களுடைய உணர்வுகளைப் பொறுத்துத்தான் இந்தியாவின் எதிர் காலம் அமையும். அத்தனை மக்களுடைய உணர்ச்சிகளையும் புறக்கணித்துவிட்டு, ஒரு மொழிக்கு மட்டும் ஆக்கம் தரும் எந்த முயற்சியில் ஈடுபட்டாலும், அமைதியாக இருக்க முடியாது. எனவே அத்தனை மொழிக்காரர்களையும் திருப்திப் படுத்தும் முயற்சியில் ஈடுபட வேண்டும். இப்பொழுது இருக்கிற பிரச்சினை மத்தியத் தேர்வுக் குழு அலுவலர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்வில் அத்தனை மொழிகளுக்கும் சம அந்தஸ்து கொடுக்க வேண்டும் என்கிற ஒன்று. எப்படி இந்தி ஆட்சிமொழியாக, மற்றவைகளுக்கும் மொழியாக வேண்டும் என்கிற எண்ணம் உருவாகி வருகிறது என்பதற்கு உதாரணமாக, அண்மையில் அலஹாபாத்தில்





கூடிய இந்தி சாகித்ய சம்மேளனம், ஒரு மகாநாட்டைக் கூட்டி இந்தி மிக முக்கியமானது என்பது வற்புறுத்தப்பட்டிருக்கிறது. அவர்கள், இந்தி மட்டுமே ஆட்சி மொழியாக இருக்கவேண்டும், என்கிற வகையிலே சேத் கோவிந்த தாஸ் தலைமையில் கூடி அந்த மகாநாட்டில் ஒரு தீர்மானமும் நிறைவேற்றியிருக்கிறார்கள். எந்த வகையில் என்றால், இந்தி மட்டுமேதான். ஆங்கிலத்தை அகற்றி விட்டு, இந்தியாவின் மொழியாக இருக்க வேண்டும், அரசாங்கத்தின் அலுவல்கள் இந்தியில் மட்டுமேதான் நடத்தப்பட வேண்டும், இந்தி மட்டுமேதான் தேர்வு மொழியாக இருக்க வேண்டும், பிற மொழிகளைச் சேர்க்க வேண்டும் என்றால், இந்தி பெற்றிருக்கும் அளவுக்கு அந்தஸ்தைப் பெற்றதற்குப் பிறகுதான் அந்த இடத்தைக் கொடுக்கவேண்டும், அதுவரை எந்த வேறு மொழிக்கும் அந்த இடத்தைக் கொடுக்கக் கூடாது என்கிற வகையில், அந்த அளவுக்கு இப்பொழுதே இந்தி வெறியர்களுக்கு உணர்வு ஏற்பட்டிருக்கிறது. அவர்கள்

[திரு. இரா. நெடுஞ்செழியன்]

போட்டிருக்கிற ரெஸல்யூஷன், "If other Indian languages were also to be made the medium of examination for Central Services, this could be done only when these languages attain the Status of Hindi" என்பது இப்பொழுதே மற்ற மொழிகளைவிட, இந்தி உயர்ந்திருக்கிறது என்கிற உணர்வு அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது, மற்றைய மொழிகளை இணைக்க வேண்டும் என்றால், இந்தியின் அந்தஸ்து பெற்ற பிறகுதான் இணைக்க வேண்டும், அதுவரையில் இந்தி மட்டுமே தான் தேர்வு மொழியாக இருக்க வேண்டும் என்ற உணர்வு இருக்கிறது. ஆகவே, இந்த நிலையில் இந்தத் தீர்மானம் மிக்கப் பயனுள்ளதாக இருக்கும். மத்திய அரசு தேர்வுக் குழு மொழிபற்றி ஆளும் கட்சிக்கும், எதிர்க் கட்சிக்கும் கருத்து வேறுபாடு இல்லை. ஆட்சி மொழி பற்றி கருத்து வேறுபாடு இருக்கலாம். அலுவலர்கள் தேர்வில் தமிழ் மொழியையும் இணைக்க வேண்டும் என்கிற கருத்தைப் பொறுத்த வரையில் கருத்து வேறுபாடு இல்லை. இந்த சந்தர்ப்பத்திலே இந்தத் தீர்மானம், இந்திய சர்க்கார் தேர்வு மொழிபற்றி பரிசீலனை செய்துகொண்டு இருக்கும் இந்த நேரத்தில் இந்த மாநில அரசின், இந்த அவையின் கருத்தை வலியுறுத்த வழிவகை ஏற்படுத்தும். எனவே இந்தத் தீர்மானத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, இந்த அவை இதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன். ஏற்றுக் கொள்ளுவதற்கான முயற்சிகளை கனம் முதல் அமைச்சர் அவர்கள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே. .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, நாம் நல்ல சம்பிரதாயங்களை உருவாக்க வேண்டும். முதலில் தாங்கள் அழைத்த போது யாரும் பேசவரவில்லை. இப்பொழுது

[திரு. எம். பக்தவத்சலம்] [5th August 1965

கனம் எதிர்க்கட்சித் தலைவர் பேசிய பிறகு, மற்ற அங்கத்தினர்கள் பேசுவதென்பது, அவருடைய 'டிக்னிடிக்கு'ம், நம்முடைய சம்பிரதாயத்திற்கும் சரியானதாக இருக்காது. சம்பிரதாயம் பாதிக்கப்படும் என்பதைத் தாங்கள் கவனிக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : சார், சம்பிரதாயப்படி அவரும் ஒரு கட்சித் தலைவர் என்கிற காரணத்தால், அவர்களும் பேசவேண்டும். அதற்கு தாங்கள் அனுமதி கொடுக்கவேண்டும்.

MR. SPEAKER : What can we do? Rules seem to be more honoured in their breach than in their observance.

திரு. கே. ஏ. மதியழகன் : அவர்கள் கட்சித் தலைவர் என்கிற காரணத்தினால் . . .

MR. SPEAKER : I only want to ascertain the sense of the House. There is what is known as "convention" which we are expected to respect and follow. Can any hon. Member be allowed to take part in the discussion after the hon. Leader of the Opposition has spoken?

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், இந்த சபையிலே, ஆரோக்கியமான சூழ்நிலை எற்படுகிறதைப் பார்த்து சந்தோஷப்படுகிறேன். கனம் முதல் அமைச்சர் எதிர்க்கட்சித் தலைவருக்கு இவ்வளவு மதிப்புக் கொடுக்கிறார்கள். நண்பர் மதியழகன் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பேசவேண்டும் என்று கேட்கிறார்கள், அப்படி அவரவர்கள் விருப்பு வெறுப்பில்லாமல், மற்ற கட்சிக்காரர் களின் உரிமைப்பற்றி கவலை கொண்டிருப்பது, மிக்க நல்லது. ஆகவே, அதற்கு தாங்கள் கவுரவம் கொடுத்து, என்னைப் பேச அனுமதிக்கலாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். தாங்கள் கன் வென்ஷனை பிரேக் பண்ணவேண்டும் என்று சொல்லவில்லை.

MR. SPEAKER : I have no objection. Let the House decide.

THE HON. SRI R. VENKATARAMAN : The Hon. Speaker actually wanted to know whether anybody was ready to speak. There was none. Therefore the Hon. Leader of the Opposition spoke.

MR. SPEAKER : I find that there are some hon. Members rising from the other side also to speak.

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் சபாநாயகர் அவர்களே, இன்னொரு விஷயத்தையும் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்குக் கேள்வி நேரம் வெகு சீக்கிரம் முடிந்துவிட்டது. பல உறுப்பினர் கள், அந்த நேரம் 9-30 மணி வரை போகும், பின்னால் வந்து விவாதத்தில் கலந்துக் கொள்ளலாம் என்று இருந்திருக்கிறார்கள்.

கனம் சபாநாயகர் : அதற்காக இடையில் சபையை 'அட்ஜர்ன்' செய்யலாமா ?



5th August 1965]

திரு. கே. ஏ. மதியழகன் : தாங்கள் பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கனம் சபாநாயகர் : இதில் 'பரிசீலனை' செய்வதற்கு ஒன்றும் கிடையாது.

Hon. Members are expected to be here, in time to take part in the discussion.

திரு. கே. ஏ. மதியழகன் : உறுப்பினர்கள் 9-20, 9-25-க்குள் வந்துவிடலாம் என்று இருந்திருக்கிறார்கள். . . .

MR. SPEAKER : The point is this. Question-hour may be over at any time. For some questions, hon. Members might not put supplementaries at all and the question-hour may be over much earlier than the time allotted.

SRIMATHI T. N. ANANDANAYAKI : I thought the question-hour might conclude at 9-30 a.m. and so I came rushing. If the Hon. Speaker were to permit other hon. Members to speak, I request that I may also be given the privilege to move my Bill.

MR. SPEAKER : The moment I saw the hon. Lady Member, I said that there were hon. Members who wanted to speak from the other side also. If I were to permit hon. Members to speak after the hon. Leader of the Opposition had spoken, then I would have to put the whole thing in reverse gear. I do not think it is necessary. Further, the House has discussed this question several times.

* கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை பிரேரேபித்த கனம் உறுப்பினர் அவர்கள், அகில இந்தியக் காங்கிரஸ் காரியக் கமிட்டி தீர்மானத்தைப் பற்றிக் குறிப்பிட்டு, அதற்குத் தன்னுடைய பாராட்டுதலையும் தெரிவித்தார் கள். அதற்காக நான் அவர்களுக்கு முதன் முதலாக என் நன்றி யைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். 'காரியக் கமிட்டித் தீர் மானத்தை நாங்கள் ஆதரிக்கிறோம்' என்று ஒரு தீர்மானத்தைக் 9-30
கொண்டு வந்திருந்தால், அதை ஏகமனதாக, மிகுந்த மகிழ்ச்சி a.m.
யோடு ஏற்றுக் கொண்டு இருக்கலாம். நானும் அதை வரவேற்று, நன்றி தெரிவித்து, பாராட்டி இந்த மன்றம் ஏகமனதாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருப்பேன். ஆனால், காரியக் கமிட்டித் தீர்மானத்திலே ஒரு பகுதியை மட்டும் எடுத்துக் கொண்டு, அது காரியக் கமிட்டித் தீர்மானத்தில் இருக்கிறது, அதை மன்றம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று இப்பொழுது கனம் அங்கத்தினர் கொண்டு வந்து, மற்ற அங்கத்தினர்களும் பேசி கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் அதை ஆதரித்துப் பேசி இருக்கிறார்கள். ஆனால், இந்தத் தீர்மானம் அகில இந்திய உத்தி யோகத்திற்கான தேர்வுகளை எந்த மொழியில் எழுதுவது என்பது பற்றிய தீர்மானம் என்றாலும், கனம் உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்கள் பேசியபோது, "உத்தியோகத்திற்கான

[திரு. எம். பக்தவத்சலம்] [5th August 1965

தேர்வு மொழி, கல்லூரிப் பயிற்சி மொழி, ஆட்சி மொழி எல்லாம்
ஒன்றோடொன்று இணைக்கப்பட்டது" என்று கூறினார்கள். கனம்
எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், ஆட்சி மொழியையும் இதில்
இணைத்துப் பேசினார்கள். ஆனால் ஆட்சி மொழியைப்பற்றி
அரசாங்கத்திற்கும் தங்களுக்கும் அபிப்பிராய பேதங்கள் இருப்ப
தாக அவர்கள் குறிப்பிட்டார்கள். மத்திய அரசுப் பரீட்சை
களுக்கு இதுவரையில் ஆங்கிலம் இருந்து வந்தது. ஹிந்தி நாட்டு
மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பிறகு ஹிந்தியும் அவ்வாறு
இருக்கவேண்டும் என்ற யோசனை இருந்து வந்திருக்கிறது. ஆனால்,
இப்போதைய சிந்தனை—இப்போதைய முடிவு என்று கூடக்
கூறலாம்—காரியக் கமிட்டியின் முடிவு என்றும் கூறலாம்—மத்திய
அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிற முடிவு என்றும் கூறுவேன்—
மத்திய பரீட்சைக்கு ஆங்கிலத்தோடு, ஹிந்தியோடு மற்ற மாநில
மொழிகளும் இடம்பெறவேண்டும்; பரீட்சை எழுதுகிறவன், அவன்
எந்த மொழியில் எழுத விரும்புகிறானோ அந்த மொழியில் பரீட்சை
எழுதலாம்—ஆங்கிலத்தில் எழுத விரும்பினால் ஆங்கிலத்தில் எழுத
லாம்; ஹிந்தியில் எழுத விரும்பினால் ஹிந்தியில் எழுதலாம்.
அல்லது வேறு மொழியில்—தமிழ், தெலுங்கு, மராத்தி, குஜராத்தி
இன்னும் இது போன்ற வேறு எந்த மொழியில்—வேண்டுமானாலும்
எழுதலாம் என்று தான் காரியக் கமிட்டி முடிவு செய்து அதை
அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அந்த வகையிலே
வேண்டிய அளவிற்குச் சட்டமும் திருத்தப்படும்; நடவடிக்கை
களும் எடுத்துக்கொள்ளப்படும். ஆனால், அது உடனடியாகக்
கவனிக்கக் கூடியதல்ல; உடனடியாக நிறைவேற்றப்படக்கூடியது
அல்ல, கொஞ்சம் தயாரிப்பு வேண்டியிருக்கிறது என்று அகில
இந்தியக் காங்கிரஸ் காரியக் கமிட்டி உணர்ந்து அதையும் குறிப்பிட்
டிருக்கிறது. எவ்வளவு சீக்கிரத்தில் இதை நிறைவேற்ற முடியுமோ
அவ்வளவு சீக்கிரத்தில் எடுத்துக் கொள்ளலாம் என்றும
கூறியிருக்கிறது. மத்திய அரசாங்கமும் இதிலே கவனம் செலுத்தி
வருகிறது என்பதையும் நான் கூற விரும்புகிறேன். அது மட்டுமல்ல.
அதையொட்டி மாநில உத்தியோகப் பரீட்சைகளிலேகூட, இங்கே
தமிழ் தான் இருக்கும். வேறு பிரச்சினை இல்லை. இப்பொழுது
ஆங்கிலம் இருக்கிறது. தமிழிலும் பரீட்சை எழுதலாம் என்ற
யோசனையை இப்பொழுது இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்
கிறது. அது மட்டுமல்ல. நான் இதற்கு உடனடியாக நடவடிக்கை
யும் எடுத்துக்கொண்டிருக்கிறேன் என்றும் கூறுவேன். சென்னை
பப்ளிக் சர்விஸ் கமிஷன் தலைவரிடம், "இதை எப்படி நிறைவேற்று
வது என்றெல்லாம் நீங்கள் பரிசீலனை செய்யுங்கள், உடனடியாக
ஓரளவாவது இதை மாற்றலாம், இப்போதே சில பரீட்சைகளில்
தமிழிலே எழுத இடம் இருக்கிறது, மேற்கொண்டு அது விஸ்தரிக்
கப்படவேண்டும்" என்று சொன்னேன். இன்றைக்கு எல்லா
வற்றையும் செய்யலாமா என்றால், எதையும் படிப்படியாகத்தான்
செய்யவேண்டியிருக்கிறது; தயாரிப்பு எல்லாம் வேண்டியிருக்கிறது.

மற்றொன்று நான் கூற விரும்புகிறேன். "மாநில மொழியிலே
மத்திய பரீட்சையை வைத்துக் கொள்ளுவதற்குச் சில மாநிலங்
களிலே தயாராக இருக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் அந்த



5th August 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

மாநில மொழியின் மூலமே உயர் படிப்புப் படித்துப் பட்டம் பெற்
றிருக்கிறார்கள்; நம்முடைய தமிழ் நாட்டிலே அது இல்லை;
ஆகவேதான் உடனடியாக மத்திய உத்தியோகப் பரீட்சைக்குத்
தமிழிலே எழுதுவதற்கு இடம் கொடுப்பதற்குத் தடையாக இருக்
கிறது" என்று கனம் உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்களும்,
மற்றவர்களும் சொன்னார்கள். அது அல்ல நிலைமை என்று
நான் தெரிவித்துக் கொள்கின்றேன். எனக்குத் தெரிந்த வரையில்,
கல்லூரிப் படிப்பிலே கூட, ஒரு பல்கலைக் கழகம் தான்—ஒரு
மாநிலத்திலேதான்—தங்களுடைய தாய் மொழியிலே உயர்படிப்புப்
படிக்கிறது என்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மற்றவர்களுக்கும்
அந்த எண்ணம் இருக்கிறது. நமக்கு எண்ணம் இருப்பது போல
அவர்களுக்கும் இருக்கிறது. ஆனால், இதற்கெல்லாம் தயாரிப்பு
வேண்டும். மத்தியப் பரீட்சையைத் தாய் மொழியிலே எழுது
வதற்கு அது அல்ல தடை என்று நான் தெரிவித்துக் கொள்ளு
கிறேன். மத்திய சர்வீஸுக்கான பரீட்சைகளை ஆங்கிலத்தோடு
வேறு மொழியில் எழுதுவது என்றால் எல்லா மொழிகளிலும்தான்
எழுத வேண்டும், ஒரே சமயத்தில் எல்லா மொழிகளையும் கையாள
வேண்டும். அதை நாம் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். அதிலே
மாறுதல் இருக்காது. மாறுதல் வரும்போது, வேறு மொழியைச்
சேர்த்துக் கொள்ளும்போது, ஒரேயடியாக எல்லா மொழிகளுக்கும்
இடம் இருக்கவேண்டும். தமிழுக்கு இல்லாது வேறு ஒரு மொழி
அதிலே சேர்த்துக்கொள்ளப்பட மாட்டாது. ஆனால், காரியக்
கமிட்டியின் தீர்மானத்தைப்பற்றி ஒன்று குறிப்பிட்டார்கள்.
மத்திய ஆட்சியைப் பொறுத்த வரையில், கான்ஸ்டிட்யூஷனில்
குறிப்பிட்டிருக்கிறபடி ஹிந்தி தான் மத்திய ஆட்சி மொழி என்
பது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற விஷயம். கனம் எதிர்க் கட்சி
உறுப்பினர்களுக்கு அதிலே இன்னும் உடன்பாடு இல்லாமல்
இருக்கலாம். ஆனால், இன்று மத்திய அரசாங்கம் அல்லது
காங்கிரஸ் அனுசரித்து வருகிற கொள்கை என்னவென்றால், இந்தி
யாவிற்கு என்று ஒரு பொது மொழி அவசியம். அது இந்தி என்று
நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்
கிறது. ஆனால், தமிழ்நாட்டைப் பொறுத்த மட்டில் அந்த ஒரே
மொழியை ஆட்சி மொழியாகக் கொண்டுவந்தால் இங்கே உள்ள
மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற காரணத்தினாலே, தமிழ்
நாட்டைப் போன்ற ஹிந்தி பேசாத மாநிலங்கள் எவ்வளவு காலம்
விரும்புகிறார்களோ, எப்பொழுது அவர்கள் சம்மதிக்கிறார்களோ
அது வரையில் ஆங்கிலம் ஆட்சி மொழியாகத் தொடர்ந்து இருக்க
வேண்டும் என்பதுதான் முன்பே ஏற்றுக்கொள்ளப்பட்டது.
ஏற்றுக்கொள்ளப்பட்டதென்றால், சட்டம் ஒரு பக்கம்; காலஞ்
சென்ற பிரதம மந்திரி அவர்களுடைய உறுதிமொழி ஒரு பக்கம்.
இரண்டும் சேர்ந்திருந்தது. ஆனால், இப்பொழுது உறுதிமொழி
சட்டமாக்கப்படுகிறதில்தான் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.
அதற்குத்தான் மசோதா தயாரிக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு
ஆங்கிலம் இருக்கிறது. இனி ஹிந்தியும் ஆங்கிலமும் இருக்கும்
என்ற நிலையை நாம் உணர்ந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

ஆனால், பரீட்சை வேறு விஷயம். உத்தியோகப் பரீட்சைக்கு எந்த மொழி என்ற பிரச்னைக்கும், உயர் படிப்பை எந்த மொழியில் படிப்பது என்பதற்கும் சம்பந்தம் இருக்கிறது என்று கனம் உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்கள் சொன்ன அந்த அளவிற்கு ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அந்த அடிப்படையில்தான் இந்த முடிவை காரியக் கமிட்டி எடுத்திருக்கிறது. இன்றைக்கு ஆங்கிலம் மூலமாக உயர் படிப்புப் படிக்கிறார்கள். ஓரளவு தமிழ் மூலம் உயர் படிப்பில் சில பாடங்கள் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. கொஞ்சம் பேர்தான் அதிலே ஈடுபட்டிருக்கிறார்கள். நான் முன்பு தெரிவித்தது போல மூன்றாண்டுகளுக்கு முன்பு நான் இந்தக் கல்விப் பொறுப்பை என்றைக்கு ஏற்றுக் கொண்டேனோ அன்றைக்கோ அல்லது அதற்கு அடுத்த நாளோ, கல்லூரிப் பேராசிரியர்கள் கூட்டமொன்றில் நான் அப்போதே தெரிவித்தேன். என்றைக்காவது பயிற்சி மொழியைப் பொறுத்த மட்டில், கல்லூரியில் போதனா மொழியைப் பொறுத்த மட்டில் ஆங்கிலத்திற்குப் பதிலாக ஒரு மொழி வரும் என்றால் அது நம்முடைய தாய் மொழியாகத்தான் இருக்கும், வேறு மொழியாக இருக்காது என்று சொன்னேன். அப்பொழுது ஒரு கருத்து இருந்து வந்தது. கல்லூரிப் பாடங்களுக்குக் கூட ஹிந்தி போதனாமொழியாக இருக்க வேண்டும் என்ற ஒரு கருத்து அப்பொழுது நிலவிக் கொண்டிருந்தது. அப்பொழுது நான் திட்டவட்டமாக உறுதியாகக் கூறினேன். ஆங்கிலத்திற்குப் பதிலாக ஒரு மொழி வருவதென்றால் அது நம்முடைய தாய் மொழியாகத்தான் இருக்கும், அது தமிழ் தான், கல்லூரி உயர் படிப்புக்குப் போதனா மொழியாக வேறு மொழி இருக்கமுடியாது என்று கூறினேன். அதற்குரிய வகையில் இன்று கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. ஓரளவு பாடப் புத்தகங்கள் தயார் செய்திருக்கிறோம். அது போதவே போதாது. இன்னும் அதிகமான பாடப் புத்தகங்கள் வேண்டும் என்பது நான் என்னுடைய அவா. தமிழில் பாடப் புத்தகங்களை எவ்வளவு அதிகமாக ஆக்கினாலும், எவ்வளவு சிறந்த புத்தகங்களை ஆக்கினாலும், உயர் படிப்புப் படித்து உயர்ந்த அறிவைப் பெறவேண்டும் என்றால், தமிழில் உயர்படிப்புக்கான பாடங்களைச் சொல்லிக் கொடுத்தாலும் கூட, தமிழில் இல்லாத பாடப் புத்தகங்கள் ஆங்கில மொழியில் இருந்தால் அதையும் நம்முடைய மாணவ மாணவியர்கள் படித்து, அதன் மூலமாகவும் உயர்ந்த கல்வியைக் கற்கவேண்டும் என்பது தான் என்னுடைய அவா. உயர்ந்த அறிவைப் பெறவேண்டியது முக்கியம். அறிவு பெறுவதிலே நம்முடைய மாணவர்களைப் பொறுத்த வரையில், ஒரு வரம்பு இருக்கக் கூடாது என்பது என்னுடைய எண்ணம். இப்போது கூட மற்ற மாநிலங்களில் விஞ்ஞானப் பாடங்களையெல்லாம் சரியாகத் தங்கள் தங்களுடைய தாய் மொழிகளிலே சொல்லிக் கொடுப்பதற்கு போதிய அளவு தயாரிப்பு இல்லை என்று அவர்களே உணருகிறார்கள். ஹிந்தி பேசப்படுகிற மாநிலங்களில் ஆங்காங்கு விசாரித்தேன். நானும் பார்த்திருக்கிறேன். ஒரு மாநிலத்திலே கல்லூரிக்கே போய்ப் பார்த்தேன். ஹிந்தியில் சொல்லிக் கொடுக்கிறார்கள் என்றாலும், அத்துடன் ஆங்கிலத்திலும் சேர்த்து சொல்லிக் கொடுக்கிறார்கள். ஹிந்தியிலே சொல்லிக் கொடுத்தால் மட்டும் போதாது என்று ஆங்கிலத்திலும் சொல்லிக் கொடுக்கிறார்கள். அதே மாதிரிதான் நம்முடைய மாநிலத்தில் புது முக வகுப்புகளில் (ப்ரீயூனிவர்ஸிடி) சென்ற ஆண்டிலே நான் பல்கலைக் கழக வைஸ்-சான்ஸலர்களுக்குச் சொல்லி, அவர்களும் ஏற்றுக்கொண்டு, அதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். எஸ்.எஸ்.எல்.ஸி. வரையில் பாடங்களைத் தமிழில் படித்து மேலே பி.யு.ஸி.க்கு வருகிற மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் சொல்லிக் கொடுக்கும்போது அவர்களுக்கு கொஞ்சம் சிரமம் இருக்கிறது, ஆகவே, ஆங்கிலத்தில் சொல்லிக் கொடுப்பதோடுகூட, தமிழிலும் சொல்லிக் கொடுங்கள் என்று நான் கூறினேன். தமிழ் நாட்டில் உள்ள ஆசிரியர்களாதலால் எல்லோருக்குமே தமிழ் தெரியுமாதலால், தமிழிலும் சொல்லிக் கொடுங்கள் என்று நான் கூறியதன் பேரில், அது ஏற்றுக்கொள்ளப்பட்டு, நடைமுறையில் இருக்கிறது.





மற்றொன்று. ஆங்கிலத்திலே படித்து பாஸ் செய்தாலும் கூட. தமிழில் பரீட்சை எழுதக் கஷ்டம் இல்லை. தமிழிலே படித்து ஆங்கிலத்தில் கூட எழுதலாம். மொழியில் பாண்டித்தியம் இருந்தால் சிரமம் இல்லை. தமிழர்கள் ஆங்கிலத்தில் படித்தால்கூட, தமிழில் பரீட்சை எழுத சிரமம் இல்லாது இன்றைக்கு போதனா மொழி சீக்கிரத்தில் வரும். தமிழே போதனா மொழியாகும். தமிழையே நாம் இங்கே போதனா மொழியாக்கிவிட்டால் தமிழில் கற்றவர்கள் மத்திய பரீட்சைக்கு விடை அளிப்பது என்றால் ஆங்கிலத்தில் விடை அளிப்பதோ, இந்தியில் விடை அளிப்பதோ கஷ்டமாக இருக்கலாம். ஆகையால், இவர்களுக்குச் சங்கடம் ஏற்படும். நம்முடைய தமிழ் நாட்டில் இந்தி இருக்காது. தமிழ் தான் இருக்கும். எதிர்காலத்தில் தமிழ் மூலமாகப் படித்து பட்டம் பெற்றவர்கள் மத்தியப் பரீட்சையை ஆங்கிலத்தில் எழுதுவது என்றாலும், தமிழில் எழுதுவது என்றாலும் ஹாண்டிகாப்பாக இருக்கும். ஆகவே, இவர்களுடைய நன்மையையொட்டித்தான் மாநில மொழிகளிலும் மத்தியப் பரீட்சையை எழுதலாம் என்ற யோசனையே வந்தது. மாநில மொழிகளில் மத்தியப் பரீட்சை எழுதலாம் என்ற யோசனை வந்ததற்கு இதுதான் அடிப்படை.

ஆனால், இந்தி மத்திய ஆட்சிமொழியாக இருக்கிறது. ஆங்கிலமும் நாம் வேண்டும் என்கிற வரையில் இருக்கும். கனம் உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம் யூனியன் பப்ளிக் சர்வீஸ் பரீட்சைக்கு தமிழையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்பது தான். அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் முடிவு அது அல்ல. அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி செய்துள்ள முடிவு, அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிற முடிவு மத்தியப் பரீட்சைக்கு தமிழ் மூலம் விடை அளிக்கலாம். அப்படி அளிக்கின்றவர்கள் மத்திய சர்க்கார் உத்தியோகத்திற்குத் தகுதி உடையவர்களாக வேண்டுமென்றால் ஆங்கிலமும் தெரிய வேண்டும். ஆகவே, ஆங்கிலத்திலும் கம்பல்ஸரி பேப்பர் இருக்கும். ஆங்கிலத்தில் மட்டும் இருந்தால் போதாது.

காரணம் பாரத நாட்டின் ஆட்சி மொழியாக இந்தி ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஒரு பக்கத்தில் தொடர்புக்கு இந்தி மொழிவேண்டும் என்பது உணரப்பட்டு இருக்கிறது. மன்றொன்று கனம் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சொல்வதுபோல எல்லா மாநில மொழிகளும் மத்திய ஆட்சிமொழியாகவராது. போதனா மொழி விஷயம் வேறு. ஆட்சிமொழிப் பிரச்சினை வேறு. பரீட்சைக்கு எதாவது மொழியில் விடை அளிக்கலாம். ஆட்சிமொழியாகப் பதினைந்து மொழிகளையும் வைக்க முடியாது என்பதை நானே கூறிக்கொண்டு வருகிறேன். அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் முடிவும் அது தான். ஆகவே, ஆட்சிமொழியாக நாம் வேண்டுகிற வரையில் ஆங்கிலமும் தொடர்ந்து இருக்கும். இந்தி ஆட்சி மொழியாக இருப்பதினால் தமிழில் மத்திய பரீட்சை எழுதுகிறவர்களுக்கு ஆங்கிலத்தில் ஒரு கம்பல்ஸரி பேப்பர் இருப்பது போல இந்தியிலும் ஒரு கம்பல்ஸரிப் பேப்பர் இருக்கும். இவை எல்லாவற்றையும் சேர்த்துத்தான் பரிசீலனை செய்து அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி தன் கருத்தைத் தெரிவித்திருக்கிறது. இதை கனம் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ளாமல் இருக்கலாம். இந்தியையே அவர்கள் மத்திய ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால், நான் இருக்கிற நிலையை விளக்க விரும்புகிறேன். தமிழில் பரீட்சை எழுத விரும்புகிறவர்கள் இப்போது எழுதலாம். இரண்டாண்டுகளுக்கு முன்பு இருந்த நிலை வேறு. அப்போது இந்தி மட்டும் ஆங்கிலத்தோடு மத்திய பரீட்சைக்கு விடை அளிக்கிற மொழியாக இருந்தது. அப்போது இந்தியில் பரீட்சை எழுதுகிறவர்களுக்கு ஆங்கிலத்தில் கம்பல்ஸரிப் பேப்பர் இருக்கும். ஆங்கிலத்தில் எழுதுகிறவர்களுக்கு கம்பல்ஸரி பேப்பர் இல்லாமல் இருந்தது. அதை அப்போதே எடுத்து விளக்கியிருக்கிறேன். இப்போதுள்ள நிலைமை அது அல்ல. தமிழில் பரீட்சை எழுத விரும்புகிறவர்கள் தமிழில் எழுதலாம். இவர்களுக்கு ஆங்கிலத்திலும் கம்பல்ஸரிப் பேப்பர் இருக்கும். இந்தியிலும் கம்பல்ஸரிப் பேப்பர் இருக்கும். இது எல்லாம் உடனடியாக செயல்முறைக்குக் கொண்டுவரக் கொஞ்சம் காலதாமதமாகும். தமிழில் பரீட்சை எழுதுகிறவர்களுக்கு இந்தியில் கம்பல்ஸரிப் பேப்பர் எழுதுவது என்றால் எப்படி முடியும்? ஆகையால்தான் எவ்வளவு சீக்கிரம் நிறைவேற்ற முடியுமோ அவ்வளவு சீக்கிரம் நிறைவேற்றுங்கள் என்று கூறி அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது நம்முடைய மாநில ஆட்சியைத் தமிழில் கையாள்வதற்கு காலதாமதம் ஆகிறதென்று சொன்னார்கள். காலதாமதம் ஒன்றும் இல்லை. நாம் செய்கிற காரியம் செம்மையாக, சீராக இருக்கவேண்டும் என்ற கவலை அரசாங்கத்திற்கு இருக்கிறது. மற்ற மாநிலங்களில் எல்லாம் இந்தியை ஆட்சிமொழியாக வைத்துக்கொண்டு நடத்துகிறார்கள். சில மாநிலங்களில் அபிஷியல் லாங்க்வேஜ் ஆக்ட் பாஸ் செய்யவில்லை. நாம் ஆங்கிலத்தில் நடத்தலாம் என்று முடிவு எடுத்திருக்



கிறோம். அதற்காக ஆங்கிலத்தில் தான் நடத்திக் கொண்டிருக்க வேண்டுமென்பதில்லை. நாம் விரும்புகிற வரையில் மத்திய ஆட்சி மொழியாக ஆங்கிலம் நீடிக்கவேண்டும் என்று முடிவு செய்திருப்பதையும் நாம் மறுப்பதற்கில்லை. ஆகவே, ஆங்கிலத்தை நாம் புறக்கணிப்பதற்கில்லை என்பதை உணர்ந்துதான் இந்த மன்றத்தில் சட்டம் செய்திருக்கிறோம். ஆனால், மாநில ஆட்சியை சீக்கிரத்தில் தமிழில் ஏற்படுத்துவதற்குரிய வகையில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. போதனா மொழி விஷயத்தில் நல்ல வகையில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இன்னும் ஏராளமான புத்தகங்கள் வரவேண்டும். விஞ்ஞானத்திலும் சரி, மற்ற இதர துறைகளிலும் சரி ஏராளமான புத்தகங்கள் வரவேண்டும். மேல் படிப்புக்கு டெக்ஸ்ட் புக்கைத் தவிர ரெபரன்ஸ் புத்தகங்கள்தான் அதிகம் படிக்கவேண்டியிருக்கும். ஏராளமாகப் புத்தகங்களைத் தயாரிக்க தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்திக் கொண்டுதான் வருகிறோம். இதைப் பாராட்டுகிறேன். இது போதாது. இன்னும் அதிகமாக விரைவில் வந்தாகவேண்டும். நாமும் வேகமாக ஆனால் சீராகத் தமிழில் ஆட்சியை நடத்துவதற்குரிய காரியங்களை செய்து கொண்டாக வேண்டியிருக்கிறது. இதில் சரியான முறையில் கவனம் செலுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் "டைரெக்டர் ஃபார் டமில் டெவலெப்மெண்ட்" என்ற ஒரு அதிகாரியை எல்லாவற்றையும் சேர்ந்துக் கவனிக்க நியமித்திருக்கிறோம். டிரான்ஸ்பர் ஆப் ப்ராபர்டி ஆக்டை மொழி பெயர்ப்பது பற்றிக் கூடக் கேட்டிருக்கிறார்கள். இந்த மாநிலத்திற்கென்றே தனியாக லாங்க்வேஜ் கமிஷன் ஒன்று வைத்துக்கொள்ளலாம் என்ற நிலைமையும் இருக்கிறது. ஆகவே தான் "டைரக்டர் ஃபார் டமில் டெவலெப்மெண்ட்" என்பதாக நல்ல நிபுணத்துவம் உள்ள, தகுதி உள்ள ஒருவரை நியமித்து தனியே இதைக் கவனிக்கவேண்டுமென்ற ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. இது கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும். ஆகவே, நம்முடைய ஆட்சிமொழியாகத் தமிழைக் கொண்டுவருவதற்குத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும், வேகமாக ஆனால் சீராகக் கொண்டு வந்து கொண்டிருக்கிறோம்.

ஆனால், இந்த விவாதத்தில் கலந்து கொண்டு அங்கத்தினர்கள் பேசியதிலே இந்தி மொழி மத்திய ஆட்சிமொழியாக இருக்கக் கூடாது என்பது பற்றியும் பேசினார்கள். கனம் எதிர்க்கட்சித் தலைவர் அது வேறு விஷயம், பரீட்சைக்கு எந்த மொழியில் விடை அளிப்பது என்பது வேறு விஷயம் என்கிற கருத்தைக் குறிப்பிட்டார்கள். தமிழிலே பரீட்சைக்கு விடையளிக்கக்கூடியவர்களின் நிலை என்ன? தமிழிலே விடையளிக்கக்கூடியவர்கள் இந்தியிலும் விடையளிக்கவேண்டும். ஆங்கிலத்திலும் விடையளிக்க வேண்டும். இதுதான் நம்முடைய அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் தீர்மானம். இந்த அடிப்படையை வற்புறுத்துகின்ற மும்மொழிக் கொள்கை ஏற்கெனவே இருந்து வருகிறது. இப்பொழுது மீண்டும் அதை வற்புறுத்தியிருக்கிறது அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி. இந்தியை இரண்டு விஷயங்களுக்காக நாம்

[திரு. எம். பக்தவத்சலம்] [5th August 1965

கற்க வேண்டும். ஒன்று, அகில இந்தியத் தொடர்புக்காக அது வேண்டும். மற்றொன்று ஆட்சிமொழிக்காகவும் அது வேண்டும். தாய்மொழிதான் முக்கியமானது, அதை நன்றாகக் கற்க வேண்டுமென்றாலும் அத்துடன்கூட பாரத நாட்டின் ஆட்சிமொழிக்காக இந்தி வேண்டியிருக்கிறது. அது மட்டுமல்லாமல் தொடர்புக்காகவும் வேண்டியிருக்கிறது. அதோடு ஆங்கிலத்தையும் வைத்துக்கொள்ள வேண்டுமென்றுதான் நாம் சொல்கிறோம். உலகத் தொடர்பு மொழியாக வைத்துக் கொள்வதற்கும், உலக அறிவைப் பெருக்கிக் கொள்வதற்காகவும் ஆங்கிலம் வேண்டியிருக்கிறது. இந்த அடிப்படையிலேதான் மும்மொழிக் கொள்கை வற்புறுத்தப்பட்டு வருகிறது. நம்முடைய தாய்மொழி தமிழ்; அகில இந்திய ஆட்சி மொழியான இந்தி, உலக மொழியான ஆங்கிலம், ஆகிய இம் மூன்று மொழிகளையும் நாம் கற்கவேண்டுமென்றுதான் வற்புறுத்தப்படுகின்றது. அதையும் சீரான வகையிலே நிறைவேற்றவேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இப்பொழுது 'டைரக்டரேட் ஃபார் டமில் டெவலப்மெண்ட்' அமைத்திருக்கிறோம். அதனுடைய நோக்கமும் இதுதான். அன்னிய மொழி, அது இது என்று எந்த மொழியையும் சொல்வதற்கில்லை. ஆங்கிலத்தை யாரும் குறை சொல்ல முடியாது. ஆங்கிலத்தை நாம் புறக்கணிக்கவில்லை. எது வெறுக்கத்தக்க மொழி, எது அரக்கி, என்றெல்லாம் நாம் பேசுவது சரியல்ல. நாம் எந்த மொழியையும் வெறுக்கவேண்டியதில்லை. நாம் கையாள வேண்டியது மூன்று மொழிகள் என்றால் உலகத் தொடர்பிற்காக ஆங்கிலத்தையும், நம்முடைய நாட்டு ஆட்சி மொழிக்காக இந்தியையும், தாய் மொழியையும் கற்கவேண்டுமென்று சொல்கிற நேரத்தில் நாம் எந்த மொழியையும் வெறுத்தோ அல்லது குறைவாகப் பேசுவதோ சரியல்ல என்று தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

புலவர் கோவிந்தன் அவர்கள் பேராசிரியர் இலக்குவனார் மீது நடவடிக்கை எடுத்துக் கொண்டதைப்பற்றிக் கூறினார்கள். அவர்கள் ஏதோ கல்லூரியிலே தமிழ் போதனைமொழியாக வேண்டுமென்று புறப்பட்டார்; அதற்காக அவரைக் கைது செய்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். கல்லூரியிலே தாய்மொழி போதனை மொழியாக இருக்கவேண்டுமென்ற அவர் நோக்கத்தை நான் வரவேற்கிறேன். ஆனால், அவர் அதை யாரிடம் சொல்லவேண்டும்? படிக்கின்றவர்களிடம் சொல்ல வேண்டும்; பெற்றோர்களிடம் சொல்லவேண்டும். அதை விட்டுவிட்டு அவர் மார்ச் செய்யப் போகிறேன் என்று அனௌன்ஸ் பண்ணிவிட்டு மார்ச் செய்ய ஆரம்பித்தார். அப்படி அவர் மார்ச் செய்தால் அதனால் விபரீதங்கள் ஏற்படலாம் என்று எண்ணி அதைத் தவிர்ப்பதற்காகத்தான் அவர் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டதே தவிர, அவர் கல்லூரியிலே போதனை மொழியாக தமிழ் இருக்கவேண்டுமென்று சொன்னதற்காக அல்ல. அப்படி அவர் சொல்வதற்கு ஆட்சேபணையில்லை—அவர்மீது அதற்காக நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படவில்லை. இதுதான் அரசாங்கத்தைப் பொறுத்தமட்டிலும் இருக்கக்கூடிய நிலை. ஆகவே மீண்டும் கூற விரும்புகிறேன். மத்தியத்



5th August 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

தேர்வு மொழியாக தமிழும் மற்ற மொழிகளும் இருக்கவேண்டும் என்பதோடு மும்மொழிக் கொள்கையின் அடிப்படையில் இந்தியிலும், ஆங்கிலத்திலும் தேர்வு எழுதுவதற்குத் தயாராக இருக்க வேண்டும். இதை நிறைவேற்றவேண்டுமென்றுதான் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி வற்புறுத்துகிறது. ஆகவே, அதன்படி கல்லூரிகளிலே போதனை மொழியாகத் தாய் மொழியும் மாநில ஆட்சியை நடத்துவதற்கு தாய் மொழியும் வேண்டுமென்ற முறையிலே எவ்வளவு சீக்கிரத்திலே இவற்றை நிறைவேற்ற முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக நிறைவேற்றி வருகிறோம். ஆனால் நிறைவேற்றும்பொழுது கட்டாயம் கூடாது; திணிப்புக் கூடாது. ஏனென்றால், சிறுபான்மையோர் பாதிக்கப்படக்கூடாது. ஆகவே, அந்த வகையிலே கவனம் செலுத்திக் கொண்டு வரப்படுகிறது. இருந்தாலும் அங்கத்தினர் அவர்கள் கொண்டுவந்துள்ள தமிழையும் யு.பி.எஸ்.ஸி. பரீட்சை எழுத அனுமதிக்கும் மொழிகளில் ஒன்றாகச் சேர்க்க வேண்டுமென்ற தீர்மானத்தை—நடைபெற்ற விவாதத்தையும் நான் கூறிய விளக்கத்தையும் இரண்டையும் வைத்துக் கொண்டு பார்த்தால்—ஏற்றுக்கொண்டால் அது தவறான தீர்மானத்தை ஏற்றுக்கொண்டதாக ஆகிவிடும். ஆகவே, இந்தத் தீர்மானத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்தத் தீர்மானத்தினை அவர்கள் வாபஸ் பெறவில்லையென்றால் நான் அதை எதிர்க்க வேண்டியிருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* **திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் சபாநாயகர் அவர்களே, நான் கொண்டுவந்திருக்கிற இந்தத் தீர்மானத்தைப்பற்றி நம்முடைய கனம் முதலமைச்சர் அவர்கள் தம்முடைய தனிப்பட்ட கருத்துரையை எடுத்துரைத்தார்கள். அவர்கள் நம்முடைய தனிப்பட்ட கருத்துரையை எடுத்துரைத்தார்கள் என்று நான் சொல்வதற்குக் காரணம் எனக்கு ஒரு பலத்த சந்தேகம் இருக்கிறது. நான் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானம் தமிழையும் ஒன்றாகச் சேர்க்கவேண்டியதன் அவசியத்தை இந்திய அரசாங்கத்திடம் வற்புறுத்த வேண்டுமென்ற சிபாரிசுத் தீர்மானம்தான். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தீர்மானம் போட்டு மற்ற வட்டாரங்களிலிருந்தும் இதைப்போன்ற தீர்மானங்கள் வரலாம்—அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியும் இதற்காகத் தீர்மானம் போட்டு, இன்றைக்கு அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருக்கக்கூடிய திரு. காமராஜ் அவர்கள் இதைத் தாம் எடுத்துக் கொண்ட பெரு முயற்சியாகவும், புனிதமான லட்சியமாகவும் கருதிக் கொண்டிருக்கிற நேரத்தில், இந்த மன்றத்தில் உள்ள காங்கிரஸ் அங்கத்தினர்களும் சட்ட சபைக் காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருக்கக்கூடிய கனம் முதலமைச்சர் அவர்கள் பின்னாலே இருக்கக்கூடியவர்களும் இந்த விவாதத்திலே கலந்துகொண்டு இதை எதிர்க்கவில்லை. இதனை ஆதரிக்கிறார்கள். ஒரு தனிமையான புது வழியை, ஒரு குறுக்கு வழியை நியமித்துக்கொண்டு விவாதங்களை நான் எடுத்துச் சொல்வதாகச் சொன்னார்கள். சட்டசபை

ஏகமனதாக ஒன்றுசேர்ந்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றலாம். அப்படி நிறைவேற்றப்பட்ட தீர்மானம் டெல்லிப் போகக்கு எட்டவேண்டுமென்ற காரணத்திற்காகத்தான் நான் இந்தத் தீர்மானத்தைக் கொடுத்தேன். நாளைக்கு மறு நாளே இது அமலுக்கு வந்துவிடும் என்ற கருத்துடன் நான் கொடுக்கவில்லை. கனம் சபாநாயகர் அவர்களே, பத்திரிகைகளிலே செய்திகளைப் பார்த்திருப்பீர்கள். நான் இந்தத் தீர்மானத்தை மொழிந்து விவாதம் நடைபெறும் இதே நேரத்தில் உத்திரப் பிரதேசத்தில் உள்ளவர்கள், இந்தியைத்தான் யூ.பி.எஸ்.ஸி. யினுடைய பரீட்சை மொழியாக கொண்டுவர வேண்டுமென்று பலத்த ஆர்ப்பாட்டங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. இன்று காலையிலே டெல்லியிலேயிருந்து தகவல்கள் வந்திருக்கின்றன. இன்றைக்கு மத்திய மந்திரி சபை, அடுத்த மாதத்திலே நிறைவேற்ற இருக்கிற ஆட்சிமொழி நகலைப்பற்றி விவாதிக்கின்றது. ஆட்சி மொழி நகலிலே உள்ள சில விஷயங்கள் அபாயகரமான போக்கில் இருக்கிறது என்ற தகவல்கள் கூறப்படுகின்றன. இன்றைக்கு மத்திய அரசாங்க இலாகாக்களிலே உள்ள ஏதாவது ஒரு இலாகாவிலே இந்தி பேசுகின்றவர்கள் பெரும்பான்மையோராக இருந்தால், பெரும்பான்மையான ஊழியர்கள் இந்தி பேசக்கூடியவர்களாக இருந்தால், அங்கு அமுலாகும் மொழியாக இந்தி இருக்கலாம் என்ற விஷயம் வரப்போவதாகத் தெரிகிறது. மத்திய ஆட்சி இலாகாக்களிலே இருக்கின்ற இந்தி பேசாத ஊழியர்களுக்கு இது பெரும் பாதகம் செய்யக்கூடியதாக இருக்கிறது. இந்த நகலை இன்று மாலையோ நாளையோ மந்திரி சபை ஏற்றுக் கொண்டால் அதனால் பயங்கர விளைவுகள் ஏற்படலாம். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் இதைப்பற்றி மிகத் தெளிவாக, விளக்கமாக எடுத்துக்கூறினார்கள். இன்றைக்கு நாம் டெலிபோன் டைரக்டரியை எடுத்துக்கொண்டு பார்த்தால், சில ஸ்தாபனங்கள் எண்கள் நீல வர்ணத்திலேயும், சில ஸ்தாபனங்கள் எண்கள் ரோஜா வர்ணத்திலேயும் அச்சடிக்கப்பட்டிருக்கின்றன. மத்திய அரசாங்கத்தின் ஸ்தாபனங்கள் சம்பந்தப்பட்ட வரையில் ரோஜா வர்ணத்திலேயும், நம்முடைய அரசாங்கத்தின் சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்கள் எல்லாம் நீல வர்ணத்திலேயும் அச்சடிக்கப்பட்டிருக்கின்றன. இதில் நீல வர்ணத்தைக் காட்டிலும் ரோஜா வர்ணம் அதிகமாக இருக்கிறது. இதன் பொருள் என்ன? மாநில அரசு அலுவலகங்களைவிட மத்திய அரசு அலுவலகங்கள், இங்கே, தமிழகத்திலேயே அதிக இருக்கின்றன என்பதுதான். இங்கே இருக்கக்கூடிய சாதாரண கடைநிலை ஊழியர்கள் நான்காம்தர ஊழியர்கள் இவர்கள் கூட இந்தி படித்தாக வேண்டும். குறைந்தது ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக அவர்கள் படிக்காவில்லையென்றால் அவர்களுக்கு சம்பள உயர்வு கிடையாது, உத்தியோக உயர்வு கிடையாது என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு இந்தி இன்னும் ஆட்சி மொழியாகவில்லை என்று சொல்லமுடியாது, இந்தி ஆட்சிமொழியாகி விட்டது. அதிலே கோட்டை விட்டுவிட்டீர்கள். இந்தி மட்டும் ஆட்சிமொழியாக



கூடாது, தமிழும் ஆட்சி மொழியாக வரவேண்டும். இந்தி மட்டுமல்ல, தமிழும் வேண்டுமென்று சொல்கிறோம். இந்தி வரலாம் என்று நாங்கள் சொல்வதால் நாங்கள் இந்தி ஆதரவாளர்கள் என்று பொருள் இல்லை. இந்தப் பெரிய பூபாகத்திற்கு இந்தியுடன், மற்ற மொழிகளும் ஆட்சிமொழிகளாக வரவேண்டுமென்ற காரணத்தின் அடிப்படையில்தான் இந்தத் தீர்மானம் எழுந்தது. டெல்லியிலே இருந்து தகவல் வருகிறது, நேருவினுடைய உறுதிமொழியைக்கூட நிறைவேற்றப்போவதில்லை என்று.

இந்தி பேசாத மக்களுக்கு பாதகம் ஏற்படக் கூடிய அளவிலே ஒரு முடிவை இன்று டெல்லியிலே எடுக்கப் போகிறார்கள். அதற்கான ஆயத்தங்கள் அங்கே இன்று நடைபெறுகின்றன. கனம் முதலமைச்சர் அவர்கள் பேசும்போது ஏதோ தம்முடைய நில புலங்களைப் பற்றிப் பேசுவதைப் போல், ஏதோ சிறப்புச் சொற்பொழிவு போல் பேசினார்களே தவிர, நியாயத்தை அவர் எடுத்துப் பேசவில்லை. அவருடைய வாதம் சாரமான வாதமாக இல்லை. அவருடைய பேச்சு வேண்டுமானால் மொழி இயல் ஆராய்ச்சிக்கு உகந்ததாக இருக்கலாம். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மிகத் தெளிவாக தமிழ் வளர்ச்சி குறித்து எடுத்துக் கூறினார்கள். இதைப் பற்றிக் கேட்டால் டைரக்ட்ரேட் ஏற்படுத்தி இருக்கிறோம் என்பார்கள்; சட்ட அகராதி தயாரிப்பதற்காகக் குழு அமைக்கப் பட்டிருக்கிறது என்று கூறுவார்கள். அதே நேரத்தில் வேடிக்கையாக அவர்கள் இரண்டு வார்த்தைதான் இதுவரை தயாரித்திருக்கிறார்கள் என்பார்கள். தமிழ் வளர்ச்சிக் குழு அமைத்திருக்கிறோம் என்று கூறுவார்கள். இப்போது ஆரம்ப வகுப்புகளிலும், செகண்டரி வகுப்பு வரையிலும் தமிழைப் பாட மொழியாக வைத்திருக்கிறார்கள். ஆனால் கல்லூரியிலே புகுமுக வகுப்பில் இரண்டுங்கெட்டான் நிலையாக ஆங்கிலத்தை வைத்திருக்கிறார்கள். இந்திய அரசியல் சட்டத்திலே என்ன சொல்லியிருக்கிறது? நான் இவ்வாறு எதையாவது சொன்னால் நான் சொல்வது தவறு என்று கூடச் சொல்வார்கள். அந்த அளவுக்குச் சொல்லக்கூடியவர்கள். அரசியல் சட்டத்தில் 344-வது பிரிவிலே என்ன சொல்லியிருக்கிறது.

'Have due regard to the just claims and the interests of persons belonging to the non-Hindi speaking areas in regard to the public services'

ஆட்சிமொழி, பரிட்சை மொழி மாறுகின்ற நேரத்தில்—

'Shall have due regard to the just claims and interests of the persons belonging to the non-Hindi speaking areas'

என்று இருக்கிறது. விதி 344 (3)-லே அவ்வாறு இருக்கிறது. நம்முடைய நியாய உரிமைகள், நலன்கள் ஆகியவற்றிலே தமிழர்களுக்கு உத்திரப் பிரதேசக்காரனுக்கு இருப்பதைப் போன்ற உரிமைகள் இல்லையா? இந்தி தொடர்பு மொழியாக இருக்கும் என்ற வகையில் குழப்பமும், மழுப்பலும் நிறைந்த வாதமாகத்தான் இருக்கிறதே தவிர, உண்மையிலே நீங்கள் எங்கோ சென்று கொண்டிருக்கிறீர்கள். இதற்கான காரியங்களைத் தெளிவாக்கியே

[திரு. கே. ஏ. மதியழகன்] [5th August 1965

திரவேண்டும். மூன்றாவது திட்டத்திலே 300 கோடிக்கு அதிகமாக கூடச் செலவு செய்திருக்கிறார்கள். ஆனால் தமிழுக்கு என்று ஒதுக்கப்பட்டது எவ்வளவு? ஐந்து லட்ச ரூபாய். அந்த ஐந்து லட்ச ரூபாயில் 2,000 ரூபாயைத்தான் கடந்த நான்கு வருஷ காலத்தில் வட்டார மொழி வளர்ச்சிக்கு என்று செலவழித்திருக்கிறார்கள். இதற்குப் பெயர் தமிழ் வளர்ச்சியா? இதனால் இந்த மாநில மக்களின் நலன்கள் காப்பாற்றப்பட்டு விட்டதாகுமா? இந்த மாநிலத்தின் உரிமைகள் காப்பாற்றப்படவில்லை. மத்திய சர்க்கார் அலுவலகங்களிலே ஒரு பிரிவிலே இந்தி பேசுபவர்கள், இந்தி தெரிந்தவர்கள் மிகுதியாக இருந்தால் அங்கே இந்தியிலே தான் எல்லா காரியங்களும் நடக்கும். நம்முடைய மாநிலத்திலே இந்தி கற்றுக் கொடுக்கப்படவில்லை. அதற்காக இந்தியை ஆதரிக்கிறேன் என்று பொருள் அல்ல. இந்தி கூடாது. இந்தி வேண்டுமென்று சொல்லவில்லை. இனி மன்னார்குடியில் இருக்கக்கூடிய தபால் தந்தி ஆபீசில்கூட இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள்தான் இடம் பெற முடியும். பல்லடத்தில் இருக்கக்கூடிய சுங்க இலாகாவிலும் இந்திக்காரன்தான் வருவான். பரமக்குடியில் ரயில்வே வேலைக்கும் அவன்தான் வருவான். இப்படி அவர்களுக்குச் சாதகமாகவும், நமக்குப் பாதகமாகவும் இருக்கிறது. ஆகவே, தமிழை வற்புறுத்துவதற்காகத்தான் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆட்சியினரிடமிருந்து இதைவிட அதிகம் எதிர் பார்ப்பதை மறந்து விட்டேன். அமைச்சர் அவர்கள் இந்திதான்' என்று வரப்போகிறது. அதே சமயத்தில் தமிழகத்திலே தமிழுக்கான தீர்மானத்தைத் தோற்கடித்து விட்டார்கள் என்றும் வரப்போகிறது. அவர்கள் தமிழகத்தைப் பற்றி என்ன கருதுவார்கள்? இந்த மன்றத்திலே இருக்கின்ற எண்ணிக்கையை வைத்துக்கொண்டு நீங்கள் இந்தக் காரியங்களைச் செய்து விடலாம். ஆனால் தமிழகத்திலே ஏற்பட்ட உணர்வு வெள்ளத்தைத் தடுத்து நிறுத்திவிட முடியாது. கான்யூட் மன்னன் கடல் அலையே நில் என்றானும், மயிலே மயிலே இறகை விரித்து ஆடாதே, குயிலே குயிலே பாடாதே, தென்றலே தென்றலே வீசாதே என்று சொன்னாலும் நடக்காது. சில உணர்வுகள் மந்திரிகளின் கட்டளைக்கு அடிபணியாது. அவற்றிற்கு தனி நியதி, போக்கு உண்டு. மக்கள் வாக்குச் சீட்டுகளை எல்லாம் கொடுத்து எதற்காக இவர்களை இந்த ஆட்சி பீடத்தில் ஏற்றி வைத்தார்கள்?

**Mr. SPEAKER**: I wish to remind the hon. Member that he is only replying to the discussion and so, he must confine his speech to what the Hon. Chief Minister has stated. I trust he know the difference between an initial speech and a reply. At this stage hon. Member must confine his remarks to the points raised by the Hon. Chief Minister.

**திரு. கே. ஏ. மதியழகன்**: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்திலே வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்வேன். என்னுடைய உரிமையைப் பாதிக்கின்ற விவகாரத்தைப் பற்றிக்கூற



5th August 1965] [திரு. கே. ஏ. மதியழகன்]

விரும்புகிறேன். நான் பொருத்தமாகத்தான் பேசுகின்றேன், விதி முறைகளுக்கு உட்பட்டுத்தான் பேசுகின்றேன். நான் விவகாரத்தையொட்டிப் பேசவில்லை என்று காட்ட வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் பத்திரிகைகளில் போடுகின்ற அளவுக்கு . . . .

**Mr. SPEAKER**: Why does the hon. Member take notice of it? Let us see that our remarks are relevant to the matter under discussion. We are not concerned with what is published in the newspapers.

**திரு. கே. ஏ. மதியழகன்**: இர்ரெலவன்ட் ஆக மதியழகன் பேசுகிறார் என்று துஷ்பிரயோகம் செய்கின்ற அளவுக்குப் பத்திரிகைகளில் போடப்பட்டிருப்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இவ்வளவு நேரம் பேசியது பூராவும் இர்ரெலவன்ட் என்று, தங்களுடைய அதிபுத்திசாலித் தனத்திற்கு தெரிந்தது போல் பத்திரிகைகளிலே போடுவார்கள். நேற்றைக்குக் கூடப் போட்டிருக்கிறார்கள். 'மதியழகனுக்கு சபாநாயகர் கண்டனம்' என்ற அளவிலே நவமணி என்ற பத்திரிகையிலே போட்டிருக்கிறார்கள். இவ்வாறு தங்களுடைய தீர்ப்பைத் துஷ்பிரயோகம் செய்வது இந்த மன்றத்தின் உறுப்பினர் நியாயமாக ஆற்றவேண்டிய பணியின் தன்மையை குறைப்பதாக, உரிமையைப் பாதிப்பதாக ஆகாதா? நவசக்தி என்ற பத்திரிகையும் போட்டிருக்கிறது.

**Mr. SPEAKER**: Let the hon. Member come to the point.

**திரு. கே. ஏ. மதியழகன்**: இப்படித் தவறான முறையிலே பத்திரிகைகளிலே செய்திகள் வெளியிடப்படுகின்றன . . . .

**Mr. SPEAKER**: Again the hon. Member is reverting to another matter which we may consider separately as a matter of Privilege.

**திரு. கே. ஏ. மதியழகன்**: இதையெல்லாம் கூறுகின்ற இந்த நேரத்தில் தமிழ் மொழியையும் யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வு மொழிகளுள் ஒன்றாகச் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்ற நோக்கத்தில்தான் இந்தத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். இந்திக்காரனுக்கு இந்தி தாய் மொழி என்ற காரணத்தால் அவனுக்கு அது சாதகமாக இருக்கிறது. ஆனால் நமக்குப் பாதகம் ஏற்படுகிறது. இந்தக் காரணத்தால் இதை ஒத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது. கனம் அமைச்சர் அவர்கள் நான் சொன்ன கருத்துக்களைப் புனராலோசனை செய்யவேண்டும். இந்தத் தீர்மானம் அவர்களுக்கு விரோதமானது அல்ல. என் தமிழையும் சேர்க்க வேண்டுமென்று தீர்மானம் போட்டார்கள் என்று உத்திரப் பிரதேசத்துக்காரனோ, அஸ்ஸாம்காரனோ விசாரணை வைக்கமாட்டான்.

இதன் மூலம் இந்த மாநிலத்தின் எண்ணத்தை தெரியப்படுத்த கடமைப்பட்டிருக்கிறோம். கடைசியாக நான் சொல்லிக் கொள்வேன், தமிழ் உணர்வு எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு

இன்று தழைத்து ஓங்கி நிற்கிறது. தமிழ் உணர்வு வெற்றி பெற்றே தீரும். அதை இந்த சட்டமன்ற தீர்மானங்களினால் நிறுத்த முடியாது. டெல்லிப் போரசில் 14 மொழிகளும் ஆட்சி மொழியாக அமையப் போவது உறுதி. குறிப்பாக டெல்லிப் போரசின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக நமது அன்னை மொழி தமிழ் மொழி ஆகியே தீரும். அதுவரையில் தமிழ் மக்கள் ஓயமாட்டார்கள் என்று வற்புறுத்திக் கூறிக்கொண்டு இன்றைக்கு காங்கிரஸ் உறுப்பினர்கள் அத்தனை பேர்களும்—இன்னும் நான் நம்பிக்கொண்டிருக்கிறேன்—முதல் அமைச்சர் அவர்கள் கருத்தை ஆதரித்துப் பேசுமுன் வாதத்தின்மூலம் என்னை மறைமுகமாக ஆதரித்திருக்கிறார்கள். வாக்களிக்கிற நோக்கிலும் அவர்கள் இதை ஆதரிக்க வேண்டுமென்று கோரி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் தீர்மானத்தைப் பிரேரேபித்து மிக உருக்கமாக இன்று விடை அளித்த உறுப்பினர் அவர்கள் அன்று அகில இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டி செய்த முடிவைப் பாராட்டி விளக்கமாக எடுத்துக் கூறினார்கள். அதற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு நம் காங்கிரஸ் தலைவர் அவர்களைப்பற்றியும் பாராட்டிப் பேசினார்கள். அதற்கும் நான் மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இனி அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வது அல்லது பாராட்டுதல்கள் தெரிவிப்பது இதுபற்றி மட்டும்தான் பேசுகிறேன். அவர்கள் வாதத்தில் குறுக்கிட்டுப் பேசினால் அதை தவறுதலாக எடுத்துக் கொள்கிறார்கள். அவர்கள் வாதத்தை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்று ஒரே வார்த்தையில் சொல்லி விட்டு அதோடு நிறுத்திக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். மேலே பேசினால் தவறுதலாக எடுத்துக் கொள்கிறார்கள். அப்படி தவறாக எடுத்துக் கொள்கிறார்களே என்று மேலும் விளக்கம் கூறினால் அதையும் தவறுதலாக எடுத்துக் கொள்கிறார்கள். கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நம் காங்கிரஸ் தலைவா அவர்களைப் பற்றி குறிப்பிட்டார்கள். நம் தாய் மொழிகள் மத்திய பரீட்சைகளில் எவ்வாறு இடம் பெற வேண்டும் என்பதுபற்றி அவர்கள் எவ்வாறு கூறியிருக்கிறார்கள், மாநில ஆட்சியை தமிழில் நடத்த வேண்டும் என்று அவர்கள் குறிப்பிட்டிருப்பது இவற்றைப் பற்றி பாராட்டி பேசினார்கள். அதற்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நம் காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் மும்மொழிக் கொள்கையையும் வற்புறுத்திக் கொண்டு வருகிறார்கள். இந்தி கற்க வேண்டிய அவசியம் பற்றியும் அவர்கள் வற்புறுத்திக்கொண்டு வருகிறார்கள். இந்தி நம் பாரத நாட்டில் ஆட்சிமொழியாகத்தான் இருக்கும், அதை தவிர்க்க முடியாது என்பதையும் விளக்கிக் கொண்டு வருகிறார்கள். அதையும் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் ஏற்றுக் கொண்டால் இந்த மொழிப் பிரச்னையே இருக்காது. தீர்ந்து போய் விடும். ஆனால் நம் காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் மொழிப் பிரச்னையில் தீர்வு கண்டிருக்கிறார்கள், சிறந்த தீர்வு கண்டிருக்கிறார்கள், நாடு





ஒப்புக் கொள்ளக் கூடிய தீர்வு அது, எல்லோரும் ஒப்புக் கொள்ளக் கூடிய தீர்வு அது என்றாலும் கனம் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. மொழிப் பிரச்னையில் அவர்கள் வேறு தீர்வைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதுதான் இன்றைய நிலை. இந்த பரீட்சைகளைப் பொறுத்தமட்டில் நான் முன்பே விளக்கியிருக்கிறேன். காங்கிரஸ் தலைவர் அவர்களோ, காரியக் கமிட்டியோ, நம் அரசாங்கமோ வற்புறுத்திக் கொண்டு வருவதெல்லாம் மத்திய உத்தியோக பரீட்சைகளில் மாறுதல் ஏற்படும் என்றால் காரியக் கமிட்டி எவ்வாறு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறதோ அதை முற்றிலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில்தான் மாறுதல் வேண்டும். ஒவ்வொன்றாக, ஒவ்வொரு மொழியாக எடுத்துக் கொள்வது என்பதில்லை. ஏதோ ஒரு மாநிலதில் சொல்லியிருக்கலாம், உற்சாக மிகுதியால் சொல்லியிருக்கலாம். அதை ஒருக்காலும் ஏற்றுக் கொள்ள மாட்டோம்; மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவும் நாம் இடம் கொடுக்க மாட்டோம். எல்லா மொழிகளும் மத்திய அரசாங்க உத்தியோகப் பரீட்சைகளுக்கு ஒரே சமயத்தில்தான் வரும். இப்போது ஆங்கிலம் இருக்கிறது. மராத்தியை எடுத்துக் கொண்டால் அது தமிழை விட ஒன்றும் தயாராயில்லை. வேறு எந்த மொழியும் தமிழைவிட தயாராயில்லை என்று நான் உறுதியாகக் கூறுவேன். தெரிந்து சொல்கிறேன். எல்லாம் ஒரே சமயத்தில் வரவேண்டுமென்றுதான் காங்கிரஸ் தலைவர் அவர்களும் வற்புறுத்தியிருக்கிறார்கள், காரியக் கமிட்டியும் வற்புறுத்துகிறது, இந்த அரசாங்கமும் வற்புறுத்துகிறது. ஆகவே இதில் ஐயப்பாட்டிற்கு சிறிது கூட இடமேயில்லை. ஆனால் நாம் இந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அகில இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டியின் முடிவை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அதை மத்திய அரசாங்கத்தினிடம் வற்புறுத்தியும் வருகிறோம் என்ற நிலையில் இது காங்கிரஸ் கட்சியின் ஒரு கொள்கை, காங்கிரஸ் கட்சியின் நிலை என்பதை நாம் மனதிலே வைத்துப்பார்க்கவேண்டும். கனம் உறுப்பினர் மதியழகன் இந்தியைப் பற்றி எல்லாம் சொன்னார்கள், அதைப் பற்றி குறிப்பிட வேண்டியதில்லை. அது பொதுவான கொள்கை. இப்போது விவாதத்தில் இருப்பது என்னவென்றால் மத்திய அரசாங்க உத்தியோகப் பரீட்சைகளுக்கு தமிழையும் வைத்துக் கொள்ளலாம் என்பது. இத்தீர்மானத்தை நானோ அல்லது காங்கிரஸ் கட்சியோ ஏற்றுக் கொண்டால் முன்பே நான் ஏற்றுக் கொண்டிருக்கிற தீர்மானம், அகில இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டித் தீர்மானம், காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் வற்புறுத்தி வருவது. இவை இருக்க அதை மென்டல் ரிசர்வேஷன் வைத்துக் கொண்டு மாறி விட்டோம் என்று நிலை வரும். இத்தீர்மானத்திற்கு ஆட்சேபனை இல்லை என்றாலும் பொறுப்புணர்ச்சியோடு நாம் ஒரு முடிவு செய்ய வேண்டும், தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். எதுவும் முழுமையாக இருக்க வேண்டும். பார்ட்டாக இருக்கக் கூடாது; கம்ப்ளீட்டாக இருக்க வேண்டும். நாம் மொழிக் கொள்கையில் ஒரு கொள்

[திரு. எம். பக்தவத்சலம்] [5th August 1965

லகயை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அதை மத்திய அரசாங்கத்தினிடம் வற்புறுத்திக்கொண்டு இருக்கிறோம். மத்திய அரசாங்கமும் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். அதற்குரிய சட்டங்கள் இயற்றவும் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறார்கள். கனம் உறுப்பினர் திரு. மதியழகன் அவர்களின் தீர்மானத்தை நான் ஏற்றுக்கொள்வதாக இருந்தாலும் அல்லது காங்கிரஸ் கட்சி ஏற்றுக்கொள்வதாக இருந்தாலும் அல்லது இந்த மன்றம் ஏற்றுக் கொள்வதாக இருந்தாலும் அது தவறுதலான கருத்தை ஏற்படுத்தும், முன்பே ஏற்றுக்கொண்ட முடிவு இருக்கிறது. இது அதற்கெல்லாம் சிறிது குந்தகத்தை விளைவிக்கும். அது நம் தமிழ் நாட்டுக்கு நல்லதல்ல. ஒரு முடிவை வற்புறுத்தியிருக்கிறோம். காங்கிரஸ் தலைவர் அவர்கள் ஒரு சிறந்த வழி காட்டியிருக்கிறார்கள். அதை ஏற்று அகில இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டி நல்லதொரு வழி காட்டியிருக்கிறது. அதை ஏற்றுக் கொள்வதுதான் தமிழ் நாட்டுக்கு காலச் சிறந்தது என்பதை உணர்ந்துதான் அதை வற்புறுத்துகிறோம். அந்த நிலையில் திரு. மதியழகன் அவர்கள் கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தை ஏற்றுக் கொள்வது என்றால் அது தமிழ் நாட்டிற்கு, தமிழ் நாட்டு மக்களுக்கு, குறிப்பாக தமிழ் நாட்டு இளைஞர்களுக்கு உகந்ததல்ல என்று தெரிவித்துக் கொண்டு இந்தத் தீர்மானத்தை நான் ஆதரிக்க முடியாமைக்கு வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டு இதை எதிர்க்கிறேன் என்று கூறி என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** முதல் அமைச்சர் அவர்கள் இன்று ஒரு வாக்கு சொல்கிறார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இதே மன்றத்தின் முன்னால் 14 மொழிகளையும் மத்திய ஆட்சி மொழிகளாக கொண்டு வர வேண்டுமென்று நான் ஒரு தீர்மானம் கொண்டு வந்து விவாதிக்கிற நேரத்தில் அவர்கள் அன்றைக்கு குறிப்பிட்டார்கள், மதியழகன் தமிழை மட்டும் மத்திய ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று ஒரு தீர்மானம் கொண்டு வந்தால் . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அது ஆட்சி மொழி, இது பரீட்சை மொழி. 14 மொழிகளும் ஆட்சிமொழிகளாக இருக்க வேண்டும் என்பது சாத்தியப்படாது. அதை ஏற்றுக் கொள்ள முடியாது. ஆங்கிலம் இருக்கட்டும்; இந்தி இருக்கட்டும், தமிழ் இருக்கட்டும் என்று சொன்னால் சரி.

**திரு. கே. ஏ. மதியழகன் :** அப்படி ஒரு தீர்மானம் கொண்டு வந்தால், தமிழை ஆட்சிமொழியாக ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று தீர்மானம் கொண்டு வந்திருந்தால் அதை ஏற்றுக்கொண்டிருப்பேன், இல்லாவிடில் நடு நிலைமையாக இருப்பேன் என்று கூறினார்கள். அதற்கும் இத்தீர்மானத்திற்கும் பலத்த வித்தியாசம் கிடையாது. நீடிப்புத்தான் இந்த விவகாரம். ஆகவே, இதை



5th August 1965] [திரு. கே. ஏ. மதியழகன்]

அவர்கள் ஆதரிக்காவிட்டாலும், அவர்களுக்குள்ள சங்கடத்தில், இந்தத் தீர்மானத்திற்கு நடுநிலைமை வகிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இத்தீர்மானத்தை வலியுறுத்துகிறேன்.

MR. SPEAKER : The question is—

'That this House recommends to the Government to urge on the Government of India the need to include Tamil also as one of the media for writing the various competitive examinations conducted by the Union Public Service Commission'.

The Resolution was put and declared lost.

A poll was demanded and the House divided thus :—

*Ayes.*

Sri V. R. Neduncheziyan
„ K. A. Mathialagan
„ M. Kalyanasundaram
„ A. P. Dharmalingam
„ Rama. Arangannal
„ V. S. S. Mani
„ Kanchi Manimozhiar
„ KR. RM. Kariamanicka Ambalam
„ K. Cheemaichamy
„ M. Shanmugam
„ N. Rajangam
„ T. P. Alagamuthu
„ P. Murugaiyan
„ A. Duraiyarasan
„ P. V. Sriramulu
„ M. Kamalanathan
„ S. Muthulingam
Pulavar K. Govindan
Sri C. Manickam
„ T. Chinnasamy
„ M. R. Krishnamurthy
„ A. Thangavelu
„ S. Murugaiyan
„ P. U. Shanmugam
Srimathi Jagadambal Velayudham
Sri M. S. Mani
„ K. Thirupathy
„ C. K. Chinnaraji
„ M. P. Vadivelu
„ R. Nallamuthu
„ S. Arumugham
„ A. G. Balakrishnan
„ R. Narayanan
„ R. Sampangi

*Noes.*

Sri K. Parthasarthy
„ S. Chinnayyan
„ M. Alagiriswamy
„ L. Anandan
„ S. Angamuthu Naicker
„ P. Appavoo
„ A. Appavoo Thevar
„ A. Arumugam
„ V. S. Arunachalam
„ A. B. Balagan
„ A. M. B. S. Balagangadharan
Hon. Sri M. Bhaktavatasalam
„ P. Kakkan
Sri P. Ramachandran
„ R. Krishnaswamy Naidu
„ A. S. Dhakshinamoorthy Gounder
„ A. Doraiswamy
„ T. P. Elumalai
„ G. Gomathisankara Dikshithar
„ K. Gopala Gounder
„ R. Govindarajulu Naidu
„ K. S. G. Haja Sheriff
„ T. Kadambavana Sundaram
„ A. K. Kaliappa Gounder
„ T. Karcha Gowder
„ R. Krishnaswami Gopalar
„ M. Kulandaiswamy Gounder
„ T. Manavalan
„ M. Maruthanayagam Pillai
„ J. Matha Gowder
„ T.M. Nallaswamy
„ S. Nanjunda Row
Hon. Sri Nallasenapathi Sarkarai Manradiar
„ G. Bhuvarahan
„ S. M. A. Majid
Srimathi T. N. Anandanayaki
„ A. Suares
„ P. K. Lakshimikantham
„ A. S. Ponnammal
„ Lakshminarasamma
„ Rajathi Kunchithapatham
„ N. K. Ranganayaki
Kumari D. Sulochana.
Sri K. Narayanaswamy Pillai
„ K. S. Nataraja Gounder
„ N. Duraipandian
„ K. P. Palanisamy
„ R. Ponnappa Nadar
„ S. Ponnusamy
„ R. Rajagopalaswamy Naicker
„ P. Ragagopal
„ G. Rajaram
„ A. Ramachandra Rayar
„ N. Ramachandra Reddy
„ A. L. Ramakrishna Naidu
„ S. Ramalingam
„ S. Sadasivam
„ B. Parameswaran
„ R. V. Swaminathan
„ K. T. Kosalram
Dr. B. Natarajan
Sri D. N. Vadivel
„ V. Sankaran

*Noes*—cont.

| | |
|---|---|
| Sri M. S. Selvarajan | Sri R. Subramaniam |
| „ R. Sengalliappan | „ K. S. Subramania Gounder |
| „ N. Shanmugasundaram | „ R. Thangavelu |
| „ SV. SM. Sivaramanambalam | „ M. D. Thiagaraja Pillai |
| „ S. Sivasubramaniam | „ K. Thiruvengadam |
| „ A. P. Soundravel Servai | „ O. Venkatasubba Reddy |
| „ A. R. Subbiah Mudaliar | „ M. William |

Ayes : 34 ; Noes : 77 ; Neutral : Nil.

The Resolution was lost.

## (2) *Provision of a separate constituency for Elementary School Teachers in the Legislative Council.*

**புலவர் கா. கோவிந்தன் : கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே,**

" தூவக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு சட்டமன்றத்தில் ஒரு தனித் தொகுதி ஏற்பாடு செய்வதற்காக அரசியலமைப்புச் சட்டத்தின் 171 (2) விதியின் கீழ் அவசியமான சட்டம் இயற்ற அல்லது அரசியலமைப்புச் சட்டத்தின் 171-வது விதியைச் சேர்ந்த (3) பகுதியின் (இ) உட்பகுதியைத் திருத்துவதற்கு இந்திய அரசாங்கத்தை நடவடிக்கை எடுக்கச் செய்யும்படி இச்சபை இந்த அரசாங்கத்திடம் பரிந்துரைக்கிறது."

என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்.

The Resolution was duly seconded.

MR. SPEAKER : Resolution moved—

" That this House recommends to the Government to move the Government of India to bring in necessary legislation under article 171 (2) of the Constitution or amend sub-clause (c) of clause (3) of article 171 of the Constitution to provide a separate Constituency for Elementary School Teachers in the Legislative Council ".

**புலவர் கா. கோவிந்தன் :** கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, நமது தமிழகத்தில் ஆசிரியர்களுக்கு நல்ல பெருமையை நாம் கொடுத்திருக்கின்றோம். சாதாரணமாக 'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்' என்று ஆசிரியரை இறைவனுகவும் கொண்டு நாம் மதித்துக்கொண்டிருக்கிறோம். 'மாதா, பிதா, குரு, தெய்வம்' என்ற நிலையிலும் தெய்வத்திற்கு ஒப்ப ஆசிரியர்களை நாம் மதித்து வந்திருக்கிறோம். அது மட்டுமல்ல; நம் பிள்ளைகளை பள்ளிகளில் ஆரம்பத்தில் படிப்புக்கு வைக்கின்ற நேரத்தில் 'ஹரி ஓம். . . குருவே துணை' என்ற அளவுக்கு ஆசிரியர்களுக்கு பெருமையை கொடுத்திருக்கிற தமிழகத்தில், இப்போது ஆசிரியர்களுடைய நிலைமை மிக மிக மோசமாகி வருகிறது என்பதை நான் கூறி இந்த நாடு தெரிந்து கொள்ளவேண்டியதில்லை. நாம் அனைவரும் ஜனநாயகத்தில் இருக்கிறோம். மக்கள் ஆட்சியில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகள், மக்கள் சரியான நிலைமையில் வாழ்வதற்கான நிகழ்ச்சிகள்,





நாடு வளம்பெற வளருவதற்கான நிகழ்ச்சிகள், அதற்கு எதிரிடையாக நடைபெறக்கூடிய செயல்கள், இவைகளை எல்லாம் அறிந்து, நாடு நலம்பெற வாழ்வதற்கான நிலைமையை ஏற்படுத்துவதற்கான செயல்களை ஆற்றவேண்டிய தலைவர்களை தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கிறது. அவ்விதம் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் இதற்கான போதிய அறிவு பெற்றவர்களாக இருக்கவேண்டும். ஆக, மக்கள் நல்ல அறிவு பெறாத நிலையில் இருந்து விடுவார்களானால், 'வல்லவன் வகுத்ததே வாய்க்கால்' என்ற முறையில் ஆட்டு மந்தைக் கூட்டம் போல பணத்திற்கும் மற்ற இனத்திற்கும் அடிமைப்பட்டு வாக்களித்து நாட்டிலே மக்களாட்சி நல்ல முறையில் மலர வழி இல்லாமல் செய்து விடுவார்கள். மக்கள் நல்ல அறிவுடையவர்களாக இருப்பது மக்களாட்சிக்கு அவசியம். அது ஆசிரியர்களால்தான் ஆகும். ஆகவே, மக்களாட்சி நல்ல முறையில் மலரவேண்டுமென்றால் ஆசிரியர்கள் நிலை நல்ல முறையில் உயரவேண்டும் என்பதை நாட்டிலே இருக்கிற அத்தனை பேர்களும் ஒப்புக்கொள்வார்கள். இன்றைக்கு ஆசிரியர்கள் நிலை எப்படி இருக்கிறது என்று எண்ணிப் பார்க்கவேண்டும். மருத்துவக் கல்லூரிக்கு மனுச் செய்து இடம் கிடைக்கவில்லை என்றால், பொறியியல் கல்லூரிக்கு மனுச் செய்து இடம் கிடைக்கவில்லை என்றால், விவசாயக் கல்லூரிக்கு மனுச் செய்து இடம் கிடைக்கவில்லை என்றால், விலங்கின இயல் கல்லூரிக்கு மனுச் செய்து இடம் கிடைக்கவில்லையென்றால், கடைசியிலே ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கு மனுப் போடுகிற நிலையிலே நாடு இருக்கிறது. ஏன் இப்படிப்பட்ட அவல நிலை இருக்கிறது என்று எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட நிலை இல்லாமல் ஆசிரியர் துறைக்கு நல்லவர்கள், திறமையானவர்கள் வரக் கூடிய நிலையை உருவாக்கவேண்டும். ஆனால் அந்த நிலை ஆசிரியர்களுக்குச் சம்பளத்தை அதிகப்படுத்தி விடுகிற ஒன்றிலேயே முடிந்து விடாது. ஆசிரியர்களை மதிப்பதை மறுத்து விட்டு பணத்தைக் கொடுத்து விட்டால் ஆசிரியர் தொழிலுக்கு வந்து விடுவார்கள் என்று எண்ணிப் பார்க்க முடியாது. ஆசிரியர்களை நல்ல நிலைக்குக் கொண்டுவரவேண்டுமென்று சொன்னால் பணம் கொடுப்பது மட்டுமல்ல, வேறு பல காரியங்களும் செய்ய வேண்டும். அரசு ஆணை இடலாம், " இத்தனை பேர்கள் ஆசிரியர் தொழிலுக்கு வர வேண்டும் " என்று. ஆணையிட்டு இத்தனை மணிநேரம் வேலை செய்ய வேண்டுமென்று சொல்லலாம். ஆனால் ஆசிரியர்கள் விரும்பி மாணவர்களை உருவாக்கும் நிலை இருக்கவேண்டுமே தவிர, ஆணையிட்டு இந்த அரசு காரியத்தைச் சாதித்துக்கொள்ள முடியாது. ஆசிரியர்களிடமிருந்து நல்ல பணிகளைப் பெறுவது என்பது ஆணையிட்டால் முடியாது. ஆணையிடுவதால் வேறு விதமான விளைவுகூட வரும். நல்ல மாணவர்களை உருவாக்குவதை விட்டு தீயவர்களாக உருவாக்கும் நிலையில், அரசு ஆணையிடுகிறது, அந்த அரசை அழிக்கத் தக்க மாணவர்களை உருவாக்கவேண்டுமென்று அப்படிப்பட்ட நிலையைக் கூட உருவாக்க முடியும்.

ஆகவே, வள்ளுவர் வாக்குப்படி—

"வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லேருழவர் பகை"

என்று முறையில் அரசு ஆசிரியர்களைத் தங்களுடைய அதிகாரத்தைக் காட்டி பணியவைப்பது என்ற நிலையை உருவாக்கக் கூடாது. ஆகவே ஆசிரியர்களை ஆணையிட்டும் பெற முடியாது, அதிகச் சம்பளத்தைக் கொடுத்தும் பெற முடியாது என்றால், எப்படிப் பெற முடியும்? ஆசிரியர்கள் தாங்களாகவே விரும்பித் தங்களிடத்தில் இருக்கிற அறிவுச் செல்வங்களை மாணவர்களுக்கு வழங்குகிற நிலையை உருவாக்க வேண்டும். ஆசிரியர்களை உயர்ந்த நிலையில் வைத்து அவர்களைக் கொண்டாட வேண்டும். ஆசைக்கு அடிபணியாதவர்களும், ஆணைக்கு அடங்காதவர்களும் கூட புகழை விரும்புவார்கள். இன்றைய தினம் அரசாங்கம் ஓரளவுக்கு அந்த முறையில் செய்கிறது. ஆசிரியர்களுக்கு விருதுகள், பட்டங்கள், வழங்குகிறார்கள். இந்தக் காரணத்தினால் ஆசிரியர்களுக்குப் பெருமை செய்கிறோம் என்று சொன்னால், அது மட்டிலும் போதாது. இப்போதைய நிலைமையில், இப்போதைய சூழ்நிலையில் சட்ட மன்றங்களில் ஆசிரியர்களை அமர்த்துவது, மற்றவர்களை அமர்த்துவது அவர்களுக்குச் செய்கிற பெருமையாகக் கருதப்படுகிறது. ஆசிரியர்களை அந்த முறையில் சட்ட மன்றத்தில் உட்காரச் செய்யவேண்டும் என்ற என் கருத்தை முதலிலே சொல்லிக் கொள்கிறேன். ஆசிரியர்களுக்குப் பெருமை செய்ய வேண்டும். அதற்காகச் சட்ட மன்றத்தில் அவர்களை உட்காரச் செய்யவேண்டும் என்று சொன்னால், பாம்பு அறியும் பாம்பின் கால் என்று சொல்லுவார்கள். இப்போது உயர் நிலைப் பள்ளிகளில் இருக்கிற ஆசிரியர்கள், ஆரம்பப் பள்ளிகளில் இருக்கும் ஆசிரியர்கள், கல்லூரிகளில் இருக்கும் ஆசிரியர்கள் கணக்கை எடுத்துப் பார்த்தால், சரி பாதிக்கு மேல் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அந்த ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்குத் தான் ஆரம்பப் பள்ளிகளில் இருக்கக்கூடிய இடர்பாடுகள், ஆரம்பப் பள்ளிகளை எப்படி வளர்க்கலாம் என்ற நிலைமை எல்லாம் தெரியும். ஆகவே அவர்களுக்கு வாய்ப்பு அளித்தால் எதிர்காலத்தில் ஆரம்பக் கல்வி எந்த அளவில் அமையவேண்டுமென்ற முறையில் அவர்களுடைய முதிர்ந்த அனுபவத்தைப் பெற வாய்ப்பாக இருக்கும் என்றுதான் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்குச் சட்ட மன்றத்தில் இடம் அளிக்கவேண்டும் என்று கூறுவதற்கு முக்கிய காரணம் ஆகும். பாராளுமன்றத்தில் ஒரு தீர்மானம் கொண்டு வந்து விவாதிக்கப்பட்டது. இப்போது இருக்கிற தொகுதிகளிலே ஆசிரியர்கள் தொகுதி என்று இருந்தாலும் வாக்களிக்கும் உரிமை உயர் நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு மட்டும் தான் இருக்கிறதே தவிர ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு இல்லை. ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கும் வாக்களிக்கும் உரிமை இருக்கவேண்டும் என்ற தீர்மானம் பாராளுமன்றத்தில் கொண்டு வந்து விவாதிக்கப் பட்டது. அது கூடத்தான் வேண்டும். என்னுடைய தீர்





மானம் அவர்களுக்கு மேலவையில் ஒரு இடம் கொடுக்கவேண்டும் என்பது தான். அதை உண்டாக்க நமது அமைச்சர் அவை முயற்சி செய்யவேண்டும். இன்றைக்கு ஆசிரியர் சட்டமன்றத்தில் அமர முடியுமா என்றால் முடியாது. மருத்துவர்கள் இடம் பெறலாம், வழக்கறிஞர்கள் இடம் பெறலாம், தொழில் அதிபர்கள் இடம் பெறலாம், தொழிலாளிகள் இடம் பெறலாம், கலைஞர்கள் இடம் பெறலாம். சட்ட மன்றத்தில் இடம் பெறுகிற நேரத்தில் மருத்துவர்கள் சட்ட மன்ற அங்கத்தினர்களாக இருந்து கொண்டிருக்கும்போது அவர்கள் தொழிலைவிட வேண்டிய நிலை இல்லை. வழக்கறிஞர்களாக இருந்துகொண்டே சட்ட மன்றத்தில் இடம் பெறலாம். தொழில் அதிபர்களாக இருந்துகொண்டே சட்ட மன்றத்தில் இடம் பெறலாம். இந்த மன்றத்திலே கூட பல தொழில் அதிபர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தொழிலை விடாமல் சட்ட மன்ற உறுப்பினராக இருக்க முடியும். தொழிலாளிகள் அதே மாதிரி தங்கள் தொழிலை விடாமல் சட்டமன்ற உறுப்பினராக இருக்க முடியும். அதே மாதிரி கலைஞர்கள் இருக்க முடியும். ஆனால் ஆசிரியர் தொழிலை விடாமல் சட்ட மன்றத்தில் இடம் பெற முடியுமா என்றால் முடியாத நிலை இருக்கிறது. அவர்கள் சட்ட மன்றத்தில் இடம் பெற வேண்டுமென்றால் தங்கள் தொழிலை விட வேண்டிய நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு நிலை இருப்பதால் ஆசிரியர்களுக்கு தனி இடம் இருக்க வேண்டுமென்ற இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன்.

இப்போது பட்டதாரிகளுக்கு சட்ட மன்றத்தில் இடம் இருக்கிறது, ஆசிரியர்களுக்கு இடம் இருக்கிறது. பட்டதாரிகள் தொகுதியை உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் தொகுதியாக ஆக்கிவிட்டு, இப்போது இருக்கிற ஆசிரியர்கள் தொகுதியை ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் தொகுதியாக ஒதுக்கி அவர்கள் சட்ட மன்றத்தில் இடம் பெறச் செய்யவேண்டுமென்பது கருத்து. ஆகவே, இந்தத் தீர்மானம் இந்த மன்றத்திலே இருக்கிற அத்தனை உறுப்பினர்களும், ஆளும் கட்சி, எதிர்க்கட்சிகளிலுள்ள அத்தனை பேரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்மானம். யாருக்கும் மனம் நோகக் கூடிய தீர்மானம் அல்ல. நாட்டிலே இருக்கிற அத்தனை பேரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்மானம். இந்த தீர்மானத்திற்கு உருக்கொடுத்து நிறைவேற்றித் தரவேண்டுமென்று முதல் அமைச்சரையும் ஆளும் கட்சியில் இருக்கிற அங்கத்தினர்களையும் கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

*** திரு. ஜே. மாதா கவுடர்:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் புலவர் கோவிந்தன் கொண்டு வந்திருக்கும் இந்தத் தீர்மானம் தற்போது அவசியம் இல்லை என்று கருதுகிறேன். இந்தத் தீர்மானத்திலே 'ஆசிரியர்களுக்குச் சட்ட மன்றத்திலே இடம் ஒதுக்கக் கேட்டோம், அதற்கு மறுக்கிறார்கள், வேண்டாமென்று சொல்லுகிறார்கள், எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள்' என்று வெளியிலே சொல்ல, தேர்தல் சமயத்திலே அல்லது அரசியல் கண்ணோட்டத்தோடு வெளியில் பேசுவதற்கு உகந்த

[திரு. ஜே. மாதா கவுடர்] [5th August 1965

தாக இருக்கும். ஆனால் நடைமுறையில் பார்க்கும்போது ஆசிரியர்களுக்குச் சட்ட மன்றத்திலே தனித் தொகுதி ஒதுக்குவது அவசியமா என்பதை நல்ல கண்ணோட்டத்தோடு, அரசியல் நோக்கம் இல்லாமல் பார்த்தால் அது அவசியம் இல்லை என்று தான் நான் கருதுகிறேன். உயர்நிலைப் பள்ளியில் இருக்கக் கூடிய ஆசிரியர்களுக்கும், பட்டதாரிகளுக்கும் தனித் தொகுதி இருக்கிறதே அது போல ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு மாத்திரம் ஏன் வேண்டாம் என்றால், என்னைப் பொறுத்த வரையில், உயர் நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு இருக்கக் கூடிய தனித் தொகுதியைக் கூட எடுத்து விடுவது நல்லது என்று தான் நான் கருதுகிறேன். பட்டதாரிகளுக்கு என்று தனியாகத் தொகுதி வைத்திருப்பதைக்கூட நாளடைவில் எடுத்து விடுவது நல்லது என்று நான் கருதுகிறேன். ஜனநாயக நாட்டிலே மக்கள் எல்லோருக்கும் வாக்குரிமை கொடுத்திருக்கிறோம். அதே நிலையில் மக்கள் எல்லோரும் வாக்குக் கொடுத்து ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு சட்ட மன்றத்திற்கு வருவது தான் ஜனநாயக மரபு. அப்படி இருக்கும்போது படித்தவர்கள், படிக்காதவர்கள், ஆசிரியர்கள், ஆசிரியர்களல்லாதவர்கள் என்று இனவாரியாகப் பிரிக்கப்பட்டு வாக்களிப்பது என்பது ஜனநாயக நாட்டிலே ஒவ்வாதது என்ற கருத்திலேதான் நாளடைவிலே இது போன்ற தொகுதிகளை ஒழித்து விடவேண்டும் என்று சொல்லுகிறேன். அந்த நிலையில் அந்தத் தொகுதிகள் அவசியம் இல்லை, அவைகளைப் படிப்படியாக ஒழிக்க வேண்டும் என்று பேசக் கூடிய நேரத்தில், புதிதாக ஆரம்ப ஆசிரியர்களுக்குத் தனியாகத் தொகுதி வைக்கவேண்டும் என்று சொல்வது அவ்வளவு சிறந்ததல்ல. நாட்டு மக்கள் அத்தனை பேர்களுக்கும் கொடுக்கப்பட்ட அந்த வாக்கிலே அத்தனை பேர்களும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய முறையில் இருக்கவேண்டுமேயல்லாது குறிப்பிட்ட இனத்தவர், படித்தவர், படிக்காதவர் என்று வாக்குக் கொடுத்து தேர்ந்தெடுக்கப்படுவது முறையாகாது. 10-15 ஆண்டுகளுக்கு முன் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களுக்குத் தான் வாக்குரிமை என்ற அந்த முறையில் தேர்தல் நடந்தது மாறி இப்போது படித்தவர், படிக்காதவர், ஆண்கள், பெண்கள் எல்லோருக்கும் சம வாக்குரிமை அளித்துவிட்டு தனிப்பட்டவர்களுக்கு அளிக்கும் முறையில் தனியாகத் தொகுதிகள் வைப்பது நியாயமா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். இன்று ஆரம்ப ஆசிரியர்களுக்குத் தனியாகப் பிரித்துக் கொடுத்து அவர்களுக்குத் தொகுதி ஏற்படுத்தி சட்டமன்றத்தில் இடம் பெற வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று சொன்னால், பிறகு வேறு கோரிக்கைகளும் வரும். பெண் ஆசிரியர்களும் தங்களுக்கு தனியாக தொகுதி வேண்டும் என்று கேட்பார்கள். ஆண் ஆசிரியர்களோடு பெண் ஆசிரியர்கள் போட்டி போட முடியாது; தங்களுக்கும் தனித் தொகுதி வேண்டும் என்று அவர்கள் கேட்பார்கள். இப்படி எல்லா அலுவலர்களும் பிரிந்து தனித்தனியாக தங்களுக்கு ஒரு தொகுதி வேண்டும், கலைஞர்களுக்கு ஒரு தொகுதி வேண்டும், ஆசிரியர்களுக்கு ஒரு தொகுதி வேண்டும் என்று கேட்கக்கூடிய



5th August 1965] [திரு. ஜே. மாதா கவுடர்]

நிலைமைதான் ஏற்படும். ஜனநாயக நாட்டில் அப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்படுவது நன்மை தரக்கூடியதா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். நாளடைவில் இருக்கக்கூடிய தனித் தொகுதிகளை ஒழித்துவிடவேண்டும். இந்த நாட்டில் எல்லோருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அத்தனை பேர்களும் தேர்தலுக்கு நிற்பதற்கும் உரிமை வழங்கவேண்டும். இன்றைக்கு எல்லோருக்கும் வாக்கு அளிப்பதற்கு அதிகாரத்தைக் கொடுத்துவிட்டு, மக்கள் விரும்பியவர்களை தேர்ந்தெடுப்பதற்கு அதிகாரத்தைக் கொடுத்துவிட்டு, அவர்களை தேர்தலில் நிற்கக்கூடாது என்று சொல்லுவதில் எந்தவிதமான அர்த்தமும் இல்லை. பாரத நாட்டில் படித்தவர்களுக்கும், படிக்காதவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், ஆசிரியர்கள் அல்லாதவர்களுக்கும், அத்தனை பேர்களுக்கும் சம அந்தஸ்துள்ள வாக்குரிமையை காங்கிரஸ் ஆட்சி வழங்கியிருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில், அவரவர்கள் தேர்தலுக்கு நிற்பதற்கு தனியாக தொகுதி கொடுக்கவேண்டும் என்று கேட்பது அவ்வளவு உசிதம் அல்ல. அது மாத்திரமல்ல.

ஆசிரியர்களை தேர்தலில் ஈடுபடுத்துவது சரியா என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். எதிர்காலத்தில் வரக்கூடிய பிரஜைகளை உருவாக்குவதில் அவர்கள் கண்ணோட்டம் இருக்க வேண்டும். ஆரம்ப ஆசிரியர்கள் சிறிய பாலகர்களை 5 வயதிலிருந்து 10 வயதிற்குள்ளாக இருக்கக்கூடிய பாலகர்களை நாட்டின் எதிர்கால பிரஜைகளாக உருவாக்கக்கூடியவர்கள், அவர்களுக்கு போதித்து வரக்கூடியவர்கள். அப்படிப்பட்டவர்களை அரசியலில் கொண்டுவந்து புகுத்துவது நல்லதா? சட்டமன்றத்தில் அங்கத்தினராக வருவது என்றால், அரசியல் அல்லவா என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். என்றைக்கு சட்டமன்றத்தில் வந்து உட்கார்ந்தாரோ அன்றைக்கே அரசியல் வந்து புகுந்துவிடும். அதுவும் தனியாக ஆசிரியர் தொகுதி என்று சொல்லக் கூடிய நேரத்தில், ஆசிரியர்களின் வாக்குகளைப் பெற்று தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த ஆசிரியரை இங்கே தொடர்பு கொண்டு அவரவர்கள் கட்சிக்கு இழுக்கப் பார்ப்பார்கள். ஆகவே, ஆரம்ப ஆசிரியர்கள் தேர்தலுக்கு நிற்கவேண்டும் என்றால், அவர்கள் வாக்குகளுக்காக அலைந்துகொண்டிருக்கிற நேரத்தில் அங்கு அரசியல் நிச்சயம் வந்து புகும். இதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். பல ஆசிரியர்கள் ஊர்வலம் வருவதை நாம் பார்க்கிறோம். அவர்கள் பேரில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் ஈடுபட்டு தமிழ் பேராசிரியர் என்று சொல்லக்கூடியவர்கூட கோர்ட்டுக்கு வரக்கூடிய நிலையைப் பார்க்கிறோம். ஆகவே, ஆசிரியர்கள் அரசியலில் ஈடுபடமாட்டார்கள் என்று நாம் திட்டவட்டமாகச் சொல்வதற்கில்லை. அவர்கள் அப்படிச் செய்வது உசிதம் அல்ல. அவர்களை அரசியலுக்கு இழுத்துக் கொண்டுவருவது நல்லது அல்ல. படிப்பு சொல்லிக் கொடுக்கக் கூடியவர்களை அரசியலில் கொண்டு வந்து சேர்க்கக் கூடிய நிலையிலேதான் இந்தத் தீர்மானம் அமைந்திருக்கிறது. அவர்களை அரசியலிருந்து ஒதுக்குவதுதான் சாலச் சிறந்தது.

புலவர் கோவிந்தன் அவர்கள் பேசும்பொழுது, எல்லோருக்கும்
அவரவர்கள் உத்தியோகத்திலிருந்துகொண்டு சட்ட மன்றத்திற்கு
வருவதற்கு உரிமை இருக்கிறது, ஆசிரியர்களுக்கு மாத்திரம்
அந்த உரிமை கொடுக்கப்படவில்லை என்று குறை கூறினர்கள்,
ஆசிரியர்களுக்கு மாத்திரம் ஏன் அந்த உரிமை மறுக்கப்படுகிறது
என்று புரியவில்லை என்று சொன்னர்கள். ஆசிரியர்கள் போதிக்
கக்கூடியவர்கள், அவர்களுக்கு அரசியலில் இடம் இருக்கக்கூடாது,
அரசியலில் அவர்கள் இருப்பது தவறு என்பதற்காகத்தான்
அப்படிச் சொன்னேம். அவர்கள் ஏதாவது நமக்கு ஆகாதவர்
களா, வேண்டாதவர்களா ? அதற்காக நாம் ஆசிரியர்கள் தொகுதி
யை எடுத்துவிடுவதில்லை. அந்த எண்ணத்தில் அவர்களுக்கு
தொகுதி கொடுக்காமல் இல்லை. அவர்கள் குழந்தைகளுக்கு
படிப்பு சொல்லிக் கொடுக்கக்கூடியவர்கள், எதிர்காலத்து
பிரஜைகளை உருவாக்கக்கூடியவர்கள், அவர்களைக் கொண்டு வந்து
அரசியலில் சேர்க்கக்கூடாது என்பதுதான் கருத்து. இந்தி
எதிர்ப்பு கிளர்ச்சியின் காரணமாக, மாணவர்கள் கிளர்ச்சியில்
ஈடுபட்டதன் காரணமாக, பல உயர்நிலைப் பள்ளிகளில் அவர்கள்
சரியாக வேலை செய்யாததினுல் தேர்ச்சி பெற்ற மாணவர்களின்
சராசரி எண்ணிக்கை குறைவாக இருப்பதைக் காணலாம்.
இந்தக் கிளர்ச்சியில் ஈடுபடாத உயர் நிலைப் பள்ளிகளில் சராசரி
தேர்ச்சி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்
பதையும் காணலாம். ஆகவே, இதையெல்லாம் பார்த்துவிட்டு
ஆசிரியர்களை மறுபடியும் அரசியலில் இழுப்பது அவ்வளவு உசிதம்
அல்ல. ஆரம்ப ஆசிரியர்களாக இருந்தாலும் சரி, உயர்நிலைப்
பள்ளி ஆசிரியர்களாக இருந்தாலும் சரி, பட்டதாரிகளாக இருந்
தாலும் சரி, அவர்களுக்கென்று ஒரு தனித் தொகுதி வைப்பது
உசிதமல்ல, அவர்களை அரசியலில் இழுப்பது நியாயமல்ல என்பது
பற்றி திட்டவட்டமாக முடிவு எடுத்துக்கொண்டு, கூடிய சீக்கிரம்
பட்டதாரிகளுடைய தொகுதியை, உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்
களுடைய தொகுதியை ஒழித்துவிடவேண்டும் என்ற முறையில்
அரசாங்கம் இந்த மன்றத்தில் ஒரு தீர்மானம் கொண்டுவர
வேண்டும். எல்லா தனித் தொகுதிகளையும் ஒழித்துவிடவேண்டும்
என்று நான் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.
இந்தத் தீர்மானத்திற்கு இப்பொழுது அவசியம் இல்லை. இதற்கு
அவசியம் இருக்கிறது என்ருல் அரசியலுக்குத்தான் அவசியம்
இருக்கிறது அல்லாது வேறு காரணம் ஒன்றுமில்லை. நாங்கள்
கொண்டு வந்தோம் என்று சொல்வதற்காக எதிர்க்கட்சிக்காரர்கள்
இதைக் கொண்டு வந்திருக்கிருர்கள். ஆசிரியர்களுக்கு தனித்
தொகுதி வேண்டும் என்று நாங்கள் கேட்டோம், அம்மாதிரி
தனித் தொகுதி கொடுக்க முடியாது என்று காங்கிரஸ் ஆட்சி
மறுத்துவிட்டது என்று வெளியே போய் சொல்லுவார்கள்.
தங்களுக்கு தொகுதி கொடுப்பதை வேண்டாம் என்று சொன்
னர்கள். என்று 'அ, ஆ' சொல்லிக்கொடுக்கக்கூடியவர்கள் மனதை
மாற்றி அவர்களை அரசியலில் கொண்டு வந்து சேர்ப்பதுதான்



எதிர்க் கட்சியின் நோக்கம் என்று நான் கருதுகிறேன். இது சரி
யல்ல, ஜனநாயக நாட்டிற்கு உகந்தது அல்ல. ஆகவே, இந்தத்
தீர்மானத்தை நான் எதிர்க்கிறேன்.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் சபாநாயகர் அவர்களே,
புலவர் கோவிந்தன் அவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய
தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன். ஹைஸ்கூல் ஆசிரியர்களுடைய
பிரதிநிதிக்கு மேல் சபையில் சட்டபூர்வமாக இடம் ஒதுக்கப்பட்
டிருக்கிறது. பட்டதாரிகள் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்
பட்ட பிரதிநிதியும் மேல் சபையில் அங்கம் வகிக்க சந்தர்ப்பம்
இருக்கிறது. ஆசிரியர் பணியில் ஈடுபட்டிருக்கக்கூடியவர்களில்
50 சதவிகிதத்தினர் ஆரம்ப ஆசிரியர்களாக இருக்கிருர்கள்.
அவர்கள் தங்களுக்குள்ள பலாபலன்களைப் பற்றியும், தங்களுக்
குள்ள குறைகளைப் பற்றியும் அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு
உரிய முறையில் கொண்டுவருவதற்கு ஒரு சந்தர்ப்பம் கொடுப்
பதிலே என்ன தவறு இருக்கிறது. பாராளுமன்றத்திலும் சரி,
மேல் சபையிலும் சரி, அவ்வப்பொழுது இதுபோன்ற
சர்ச்சைகளெல்லாம் வந்திருக்கின்றன. இதுபோன்ற தீர்மானங்
களும் வந்திருக்கின்றன. ஆசிரியர்கள் மாணவர்களை பராமரிக்
கக்கூடிய மிகப் பெரிய பொறுப்பில் இருக்கக்கூடியவர்கள் அவர்
களுடைய கண்காணிப்பின் கீழே இருக்கக்கூடிய குழந்தைகள்
திசை மாறி சில சந்தர்ப்பங்களில் சில சம்பவங்களில் ஈடுபட்டு
விடுகிருர்கள் என்ற மனக்குறை பலருக்கும் இருக்கலாம். இருந்
தாலும்கூட, ஆசிரியர்களில் ஒருவர் சட்ட மன்றத்தில் அவர்க
ளுடைய பிரதிநிதியாக வந்துவிடுவதனுல் மாத்திரம் அவர்களுக்கு
அரசியல் நோக்கம் வந்துவிடுகிறது என்ற வாதத்தை என்னுல்
ஏற்றுக்கொள்வதற்கு முடியவில்லை. ஆசிரியர்கள் படித்தவர்கள்,
விவரம் அறிந்தவர்கள். அவர்கள் மேல் சபையில் ஒரு
அங்கத்தினராக வருவதன் மூலம் மட்டும் அரசியல் நோக்கம்
கொண்டவர்களாக ஆகிவிடுவார்கள், அரசியல் வாதியாக மாறி
விடுவார்கள் என்று சொல்வது பொருத்தமல்ல. இருக்கிற இடத்தி
லிருந்து உணர்கிற உணர்ச்சியோடு தெரிந்துகொள்வதற்கு
முடியும் அவர்களால். ஆனுல், பல இடங்களில் பலர் நினைப்பது
போல ஆசிரியர்கள், ஆசிரியர் சமூகமே பெரும்பாலும் தேசியத்
தைப்பற்றி தவருக புரிந்துகொண்டிருக்கிருர்கள், அல்லது தேச
விரோத சக்தியோடு இணைந்துகொண்டிருக்கிருர்கள் என்ற
அனுமானத்திற்கு நாம் வந்து விடுவது தவறு. அம்மாதிரி
தீர்மானத்திற்கு வருவதற்கு அவசியம் இல்லை. ஆசிரியர்கள் நாடு
விடுதலை அடைவதற்கு, தேச பக்தி உணர்ச்சியை ஊட்டக்கூடிய
வர்களின் பரம்பரையைச் சேர்ந்தவர்கள். அவர்களில் பலர்
தேச பக்தர்களாக இருந்து, சிறை சென்று கஷ்டத்தை அனுப
வித்திருக்கிருர்கள். அப்படிப்பட்ட ஆசிரியர்கள் அன்றும் இருந்
தார்கள், இன்றும் இருக்கிருர்கள். தேசிய மணத்தைப் பெருக்கிக்
கொண்டிருப்பவர்கள் பல பேர்கள் இன்று ஆசிரியர்
தொழிலில் ஈடுபட்டிருக்கிருர்கள், ஆசிரியர்களாக பணிபுரிந்து

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [5th August 1965

வருகிறார்கள் என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. அந்த அளவுக்கு அவர்கள் வந்து மேல் சபையில் அங்கம் வகித்தால் அவர்களுக்கு அரசியல் நோக்கம் வந்துவிடலாம் என்று நினைப்பது சரியில்லை. எனக்கு ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. 10 வருடத்திற்கு முன்பு, தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி, ஆசிரியர்களுடைய எமால்யுமெண்ட்ஸ், வசதிகள் பற்றி விசாரிக்க ஒரு குழுவை அமைத்தார்கள். நான் இங்கே பத்து, பன்னிரண்டு வருஷங்களாக இந்த சபையில் அங்கம் வகித்து வருகிறேன். ஆசிரியர்களுக்கு இருக்கும் பொறுப்பு, அந்தத் துறையில் இருக்கும் நல பலன்கள் இவற்றையெல்லாம் அவர்களேதான் நன்கு அறிந்திருப்பார்கள். அவர்கள் கையில் எதிர்கால வல்லவர்களும் நல்லவர்களும் உருவாகும் பொறுப்பு இருக்கிறது. அந்தத் துறையிலிருந்து வந்தவர்கள் மேல் சபையில் பங்கு கொள்ளும் விவாதங்களைப் பார்த்தால், அவற்றைக் கேட்டுக் கொண்டிருக்கிற நேரத்திலே, ஆசிரியர்கள் பிரதிநிதியாக வந்திருக்கிறவர்கள் அந்தத் துறை சம்பந்தமாக, எஜுகேஷன் சம்பந்தமாக, அவர்கள் விவரங்களை திரட்ட இருக்கும் சந்தர்ப்பங்கள் அதிகம், புத்தகங்களை ரெபர் செய்ய சந்தர்ப்பங்கள் அதிகம் இருக்கிறது அவர்களுக்கு. ஆகவே, மேல் சபையில் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு என்று ஒரு இடம் ஏற்படுத்துவது நலமாக இருக்கும். அவர்களுடைய ஆலோசனைகள் பயன்படக்கூடியதாக இருக்கும்.

அவர்களுக்கு வோட்டு அளிக்கும் அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும் என்பது முன்பு பரிசீலிக்கப்பட்டது. எப்பொழுது வாக்குக் கொடுக்க அதிகாரம் வருகிறதோ, அதை ஒட்டியே தேர்தலில் நிற்கும் சந்தர்ப்பமும் வரும். ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு என்று தனியாக அவர்கள் வாக்களித்து அவர்களே அங்கம் வகிக்கும் வகையில் வழிவகை செய்ய வேண்டும். அப்பொழுதுதான், அவர்கள் நிச்சயமாக வரக்கூடிய வாய்ப்பு ஏற்படும். அப்பொழுதுதான் அவர்கள் தங்களுடைய நல்பலன்களை எடுத்துச் சொல்ல, அந்தத் துறையில் இருக்கும் கஷ்ட நஷ்டங்களை எடுத்துக் காட்ட சந்தர்ப்பம் ஏற்படும். அவர்களுக்கு அது ஒரு 'போரமாக' அமையும். அப்பொழுது அவர்களும் திருப்தியோடு, தங்கள் வசம் இருக்கும் குழந்தைகளை நல்ல முறையிலே எதிர்கால சிற்பிகளாக, நல்லவர்களாக உருவாக்கச் சந்தர்ப்பம் கிடைக்கும். ஆகவே, இந்தத் தீர்மானத்தை மத்திய சர்க்காருக்கு சிபாரிசு செய்து, அரசியல் அமைப்புச் சட்டத்தில் ஒரு திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். இது நீண்ட நாள் கோரிக்கை. காலமெல்லாம் கேட்டுக் கொண்டு இருக்கிற கோரிக்கை. இதை நிறைவேற்றுவது அவசியம் என்று சொல்லி இந்த தீர்மானத்தை ஆதரிக்கிறேன்.

* **திரு. காஞ்சி மணிமொழியார்:** கனம் மன்றத் தலைவர் அவர்களே, இன்றைய தினம், புலவர் கோவிந்தன் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற தீர்மானத்தை நான் முழு மனதோடு ஆதரிக்கிறேன், நாட்டிலே பிறந்திருக்கிற ஒவ்வொரு மனிதனுக்கும்,



5th August 1965] [திரு. காஞ்சி மணிமொழியார்]

தன்னுடைய நாட்டைப் பற்றியும், மக்களைப் பற்றியும், மொழியைப் பற்றியும், நிச்சயமாக அக்கறை இருக்கத்தான் செய்யும். அப்படி அக்கறை இருப்பதால் அரசியலில் ஈடுபடுவார்கள் என்று சொல்லிவிட முடியாது. ஆரம்பக் கல்வி ஆசிரியர்களும் இந்த நாட்டில் பிறந்தவர்கள். இங்கு ஏற்படுகிற நன்மை நிலைகளை மற்றவர்களோடு ஒன்றாக இருந்து அனுபவிக்க வேண்டியவர்கள். சாதாரணமாகக் கல்வித் துறையில், இவர்கள்தான் ஆதாரக் கல்வியைக் கொடுப்பவர்கள். 'ஆதாரக் கல்வி' பற்றி இப்பொழுது நாம் வேறு வகையில் அர்த்தம் செய்துகொண்டிருக்கிறோம். கல்விக்கு ஆதாரமான, அடிப்படையாக இருக்கக்கூடிய, தொடக்கக்கல்வியை கல்வியை போதிக்கின்றவர்கள், சிறு குழந்தைகளுக்கு நல்ல எதிர்காலத்தை உண்டாக்கக்கூடியவர்கள், இவர்கள் தங்களுடைய எதிர்காலத்தை சீர் அமைத்துக் கொள்வதற்கு, அந்தத் தொழிலுக்கே ஏற்படுகிற தனித் தொகுதியில் நின்று உறுப்பினராகி தங்கள் துறைபற்றிச் சொல்ல வேண்டியது அவசியமே. எனக்கு முன்பு பேசிய கனம் உறுப்பினர் செல்ராஜ் அவர்கள் ஆசிரியர்கள் தனித் தொகுதி ஏற்படுத்திவிட்டாலே, அவர்கள் தங்கள் தொழிலை மறந்துவிட்டு அரசியலில் ஈடுபட்டுவிடுவார்கள் என்பது சரியில்லை என்பதை விளக்கினார்கள். அவர்களில் ஒருவரை, அவர்களுடைய பிரதிநிதியாக அனுப்ப ஒரு சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும் என்பதுதான் கோரிக்கை. அதனால் அவர்கள் தொழிலை மறந்துவிடக்கூடும் என்பது பொருத்தமல்ல. எனவே, அவர்களுக்கு என்று தனிப் பிரதிநிதி இருந்தால், அவர்களுடைய கஷ்ட நஷ்டங்களை எடுத்துச் சொல்ல முடியும். இன்றைக்கு உயர்நிலை ஆசிரியர் தொகுதி இருக்கிறது. அதைக்கூட நீக்கிவிடுவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இந்த நேரத்திலே ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு என்று ஒரு தனித் தொகுதி தேவைதானா என்று கேட்கக் கூடும். அதே நேரத்தில் அரசியலைப் புகுத்திவிடுவார்கள் என்றும் சொல்லப்படுகிறதையும் யோசித்துப் பார்க்க வேண்டும். அவர்கள் கீழே, ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் வசத்தில் இருக்கும் மாணவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அங்கே அவர்கள் அரசியலைப் புகுத்திவிடக் கூடிய நிலைமை இருக்கிறதா என்றும் பார்க்க வேண்டும். மேல் துறைக் கல்வியில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்கள் தங்கள் கருத்துக்களை மாணவர்களிடம் புகுத்த முடியும். அவர்கள் கீழே இருக்கும் மாணவர்களாலே அப்படிப்பட்ட வாதங்களைப் புரிந்து கொள்ள முடியும். ஆனால், இந்த ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் வசம் இருக்கும் மாணவர்கள், சிறு குழந்தைகள்தான். அவர்களை அரசியலில் புகுத்தி விடுவார்கள் என்று சொல்லுவது சரியில்லை.

**கனம் உறுப்பினர் திரு. மாதா கவுடர்:** அவர்கள் சொன்னார்கள், வாக்கு அளிக்க யார் யார் உரிமை பெற்று இருக்கிறார்களோ அவர்களெல்லாம் பொதுத் தொகுதியில் தேர்தல்களில் நிற்க வாய்ப்பு இருக்க வேண்டும் என்று. அப்படி நிற்பதற்கு ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு வாய்ப்பு இல்லை. அவர்கள் தொழிலைச் செய்து

[திரு. ஜே. மாதா கவுடர்] [5th August 1965

கொண்டே சட்ட சபைகளில் நுழைய முடியாது. அதற்குத் தடை இருக்கிறது. ஆகையினால் அந்தத் தடையை நீக்க வேண்டும். ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுப்பதற்கு வழிவகைகள் செய்யப்பட வேண்டும். அந்த எண்ணத்தில்தான் புலவர் கோவிந்தன் அவர்களின் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆரம்பக் கல்வி சம்பந்தமாக பல பிரச்சினைகள் இருக்கின்றன. பல உத்தரவுகள் போடப்பட்டு அவர்களுடைய தொழிலில் பல இடையூறுகள் ஏற்படுகின்றன. உதாரணமாக, சென்ற மாதம் மூன்றாந்தேதி, பாட புத்தகங்களின் ஸிலபஸ் வெளியிடப்பட்டிருக்கிறது. இம்மாதம் 31-ந் தேதிக்குள் ஆரம்பக் கல்வி சம்பந்தமாக புத்தகங்கள் தயார் செய்து, டெக்ஸ்ட் புக் கமிட்டிக்கு ஸப்மிட் செய்யவேண்டும் என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது. நல்ல முறையில் பாடபுத்தகங்களை எழுதி அச்சிட்டு 1½ மாத காலத்தில் கொடுத்துவிட முடியுமா? பாட புத்தகங்கள் எழுதுவதில் உள்ள கஷ்ட நஷ்டங்கள் பற்றி ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள்தான் கூற முடியும். ஆகையால், ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு நிச்சயமாகத் தனித் தொகுதி ஏற்படுத்த வேண்டும். அப்படி ஏற்படுத்துவதனால் அவர்கள் அரசியலிலே புகுந்துவிட மாட்டார்கள். அவர்களுக்குத் தனித் தொகுதி இருந்தால்தான் அவர்கள் குரலை ஒலிப்பதற்கு யாரையாவது அனுப்பி வைக்க முடியும். அவர்களே வருவதற்கு வாய்ப்பு இருக்கலாம் அல்லது யாரையாவது அனுப்பி வைக்கலாம் என்ற நிலைமை ஏற்படுத்துவதற்கு இன்றையதினம் இந்தத் தீர்மானத்தைப் புலவர் திரு. கோவிந்தன் அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள். ஆகவே, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், இந்தத் தீர்மானத்தை முழுமனதோடு வரவேற்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆளுங்கட்சியைச் சேர்ந்த கனம் உறுப்பினர் திரு. செல்வராஜன் அவர்கள் இதை முழு மனதோடு ஆதரித்திருக்கிறார்கள். உண்மையாகவே நாட்டில் எதிர்காலச் சந்ததி நல்ல நிலைமைக்கு வரவேண்டும் என்ற ஆசை இருக்கிற ஒவ்வொருவரும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்குச் சட்ட மன்றத்தில் இடம் கொடுப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட இந்தத் தீர்மானத்தை ஆதரிப்பார்கள் என்ற நம்பிக்கையோடு இந்தத் தீர்மானத்தை எல்லோரும் ஏக மனதாக ஏற்று ஆதரிக்க வேண்டும் என்று கேட்டு நான் என்னுடைய உரையை முடிக்கிறேன்.

**திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்:** கனம் தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் புலவர் கோவிந்தன் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்தத் தீர்மானத்தை நான் வன்மையாக எதிர்க்கிறேன். முக்கியமாக நான் எதிர்ப்பதற்குக் காரணம், அரசியலில் ஆசிரியர்கள் பங்கெடுத்துக் கொள்ளக் கூடாது என்ற ஒரு எண்ணம் தீவிரமாக, அதிலும் தற்கால அரசியலிலே, இருந்து வருகிற ஒரு நிலையில் இம்மாதிரியான ஒரு தீர்மானம் நிறைவேற்றப்படுமேயானால், அதை மேலும் மோசமாக்குகிற நிலைதான் வரும். என்பதைக் கருதித்தான் நான் இந்தத் தீர்மானத்தை எதிர்க்கிறேன்.



5th August 1965] [திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்]

தமிழ் நாட்டில் ஆரம்ப ஆசிரியர்கள் லட்சத்திற்கும் மேலாக இருக்கிறார்கள். அந்த ஆசிரியர்களுக்குப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்று இந்தத் தீர்மானத்தில் கோரியிருக்கும் போது, அந்த ஆசிரியர்களை வரவொட்டாமல் தடுக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் எங்கள் பக்கத்தில் இருக்கிறவர்கள் பேசுகிறோமே, அதன் காரணமாக ஆசிரியர் சமுதாயம் தங்களுடைய நலனைக் கருதுகிற தீர்மானத்தைக் காங்கிரஸே எதிர்க்கிற நிலைமை வந்துவிட்டதே, அதனால் ஆசிரியர்களுடைய அதிருப்தியைச் சம்பாதிக்கிறோமே என்ற வருத்தம் ஒரு பக்கம் எங்களுக்கு இருந்தாலும் கூட, நாட்டின் நலத்தைக் கருதி, மாணவர் உலக நலத்தைக் கருதி, இம்மாதிரியான இந்தத் தீர்மானத்தை எதிர்க்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

முக்கியமாக, இந்த ஆரம்பக் கல்வியை எடுத்துக்கொண்டால், அநேகமாக ஆரம்பக் கல்வி அத்தனையும் இனிமேல் அரசாங்கமே எடுத்து நடத்தக்கூடிய ஒரு எதிர்காலத்தைத்தான் நாம் இன்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். எய்டெட் ஸ்கூல்ஸ், ப்ரைவேட் மானேஜ்மெண்ட் ஸ்கூல்ஸ் ஆகியவற்றுக்கெல்லாம் இனி எதிர்காலத்தில் ரிகக்னிஷன் கொடுக்க முடியாத நிலைமை வளர்ந்து கொண்டு வரும்போது ஆசிரியர்களுக்குத் தனித் தொகுதி வைத்து, அவர்களுக்கும் தனியாகப் பிரதிநிதித்துவம் இந்தச் சபையில் கொடுக்க வேண்டும் என்று நண்பர்கள் பேசினார்கள் என்றால் அவர்கள் இங்கு வந்து வாக்கெடுப்பில் கலந்துகொள்ளும் போது, எந்தக் கட்சிக்கு அவர்கள் ஓட்டுச் செய்வார்கள் என்று நான் கேட்க விரும்புகிறேன். காலையிலே கூட ஒரு 'பாலட்' வந்தது. அவ்வாறு வரும்போது ஒரு பக்கத்தில் சார்ந்து நிற்க வேண்டிய ஒரு நிலை அவர்களுக்கு வந்து விடும். அம்மாதிரி வரும்போது அவர்கள் எந்த அரசியல் கட்சியையாவது சாராமல் இருக்க முடியாது என்ற நிலை வந்துவிடும். 'ஆசிரியர்கள் முக்கியமாக அரசியலில் பங்கெடுக்கக் கூடாது,' ' நாட்டிலே இருக்கும் கல்வித் தரம் குறைந்துவிட்டது' என்று சொல்கிறோம். இதற்குக் காரணம், ஆசிரியர்களா, மாணவர்களா என்று நிச்சயிக்கக்கூடிய நிலையில் இல்லாமலிருக்கிறோம். காரணம், இருக்கும் ஆசிரியர்கள் அத்தனை பேருமே துரோணாச்சாரியாராக இல்லை; இருக்கும் மாணவர்கள் அத்தனை பேருமே ஏகலைவர்களாகவும் இல்லை. ஆகவே தரம் நாட்டிலே உயர்த்தப்பட வேண்டும் என்ற நிலைமையில் மேலும் ஆராய்ச்சி செய்யப்படவேண்டிய நிலைமையில் நாம் இருக்கிறபோது மேலும் ஆசிரியர்களுக்கு இம்மாதிரி தொகுதி நிர்ணயித்து, அரசியலில் அவர்களுக்குப் பங்கு கொடுத்து வெளிப்படையாகப் பகிரங்கமாக ஆசிரியர்கள் அரசியலில் ஈடுபடக்கூடிய நிலையை இந்தத் தீர்மானம் கொண்டு வந்துவிடும் என்ற பயத்தினாலேதான் நான் இந்தத் தீர்மானத்தை எதிர்க்கிறேன். ஆசிரியர்கள் நாட்டில் மாணவ சமுதாயத்தின் எதிர்காலத்தை வடித்தெடுக்கக்கூடிய சிற்பிகளாக இருக்கிறார்கள். கைதேர்ந்த சிற்பியின் கையில் ஒரு சிறு உளி இருந்தால் கடும் பாறையிலிருந்து அழகான சிலையாக வடித்தெடுத்துக் கொடுத்து விடக்கூடும். அது போல், நாட்டின் எதிர்கால சமுதாயத்தை வடித்தெடுத்துக் கொடுக்கக்கூடிய ஒரு

சக்தி இந்த ஆசிரியர் சமுதாயத்தினிடம்தான் இருக்கிறது. அவர்கள்தான் நாட்டிலே உள்ள மாணவர்களை நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் எதிர்காலத்தில் உருவெடுத்துக்கொடுக்கக்கூடிய பிரும்மாவாக இருக்கிறார்கள். அவர்கள் கட்சிப் பற்றற்றவர்களாக இருக்க வேண்டும். அரசியலில் ஈடுபாடு இல்லாதவர்களாக இருக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடுதான் இந்தச் தீர்மானம் வேண்டாம் என்று நான் எதிர்க்கிறேன். ஆசிரியர்கள் மாணவர்களை நல்லதொரு நிலைமைக்குக் கொண்டுவரக் கூடியவர்கள், திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதிலே அவர்களுக்கும் பொறுப்பு இருக்கிறது, ஆகவே, ஆசிரியர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும் என்று எல்லாம் காரணம் காட்டித் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். நாட்டிலே மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிந்து நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் வரப் போகிறது. அந்தச் சமயத்தில் பொறுப்பு என்.ஜி.ஓ.-க்களுக்குக் கூட அதிகமாக இருக்கிறது. என்.ஜி.ஓ.-க்கள் அத்தனை பேருக்கும் இந்தத் திட்டங்களில் பெரும் பங்கு இருக்கிறது. திட்டங்களை நிறைவேற்றுவதிலே ஆளும் கட்சியிலே உள்ள அமைச்சர்களுக்குப் பொறுப்பு இருக்கிறது என்றாலும்கூட, அந்த நிர்வாகத்திலே நித்தம் நித்தம் பாடுபட்டு உழைக்கிற என்.ஜி.ஓ.-க்களுக்கும் பொறுப்பு இருக்கிறது. ஆகவே, என்.ஜி.ஓ.-க்களுக்குத் தனித் தொகுதி வேண்டும் என்று கேட்க முடியுமா? அதற்கு ஒருபடி மேலே நான் சென்று நாட்டில் ஜனத்தொகையில் பெண்கள் அதிகமாக இருக்கிறார்கள். பெண்கள் பிற்பட்ட நிலையில் இருக்கிறார்கள், அவர்களுடைய நலனையும் உரிமையையும் பாதுகாத்துக் கொள்வதற்காக பெண்களுக்கும் தனித் தொகுதி வேண்டும் என்று கூட நாங்கள் கேட்க முடியும். இப்படியெல்லாம் கேட்டுக்கொண்டே போக முடியுமா? நகராட்சி மன்றங்களிலே பார்த்தால் பெண்களுக்குத் தனித் தொகுதி இருக்கிறது. ஆனால் சட்டசபையில் பெண் எம்.எல்.ஏ-க்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வரக்கூடிய அளவிற்குத் தனித் தொகுதி இல்லை. காரணம், எல்லோருக்கும் வாக்குரிமை கொடுக்கப்பட்டிருக்கும் நிலையில், படித்தவர்கள், படியாதவர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், ஆண்கள், பெண்கள் அத்தனை பேருக்கும் வாக்குரிமை கொடுத்திருக்கும் நிலையில் பொதுவாக அத்தனை பேருடைய நலனையும் பாதுகாக்கும் வகையில் எடுத்துப் பேசக் கூடிய நிலையில் நாம் வீற்றிருக்கும்போது, ஆசிரியர்களுக்கு என்று தனித் தொகுதி வேண்டிய அவசியம் இல்லை, அரசியலில் ஆசிரியர்களை இழுக்க வேண்டாம், பொதுவாக இருந்து பணியாற்றுவார்களானால் நாட்டினுடைய எதிர்காலம் பிரஜைகளை நல்ல வகையில் வடித்தெடுத்துக் கொடுக்கக்கூடியவர்களாக இருப்பார்கள் என்று கூறிக்கொண்டு இந்தத் தீர்மானத்தை நான் எதிர்த்து என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

* திரு. ஆ. தங்கவேலு : கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, ஆரம்ப ஆசிரியர்களுக்குச் சட்ட மன்றத்திலே தனித் தொகுதி ஒதுக்க வேண்டும் என்று கனம் உறுப்பினர் புலவர் கோவிந்தன்





அவர்கள் கொண்டுவந்திருக்கும் தீர்மானத்தை நான் மகிழ்ச்சியோடு வரவேற்று ஆதரிக்கின்றேன். ஆரம்ப ஆசிரியர்கள் எவ்வளவு முக்கியமான பணியை ஆற்றிக்கொண்டு வருகிறார்கள் என்பதை எனக்கு முன்னால் பேசிய கனம் உறுப்பினர்கள் விரிவாகக் கூறினார்கள். ஆரம்ப ஆசிரியர் சமுதாயம்தான் எல்லாவற்றுக்குமே மிகவும் முக்கியமானது. இங்கேயிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களானாலும், அமைச்சரவையானாலும், அத்தனை பேர்களையும் உருவாக்கியவர்கள் ஆரம்ப ஆசிரியர்கள் என்று சொல்லலாம். கட்டடத்தைக் கட்டுகிறபோது, அஸ்திவாரத்தை போடுபவர்கள் எப்படி முக்கியமானவர்களோ அப்படித்தான் மாணவர்களைக் கல்வியறிவு பெறச் செய்வதற்கு அஸ்திவாரமிடுகிற பணியைச் செய்கிறவர்களாக ஆரம்ப ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஆரம்ப ஆசிரியர்கள் மாணவர்களைச் சந்தித்து அவர்களுக்குப் பாடங்களைப் பயிற்றுவிக்கின்றபோது முக மலர்ச்சியோடு இருந்து பாடங்களைக் கற்றுக் கொடுக்கவேண்டுமானால், அவர்களுடைய மனம் மகிழ்வோடும், நிம்மதியோடும் கூடியதாக இருக்கவேண்டும். அப்படி இருப்பதற்கு ஆரம்ப ஆசிரியர்களுடைய குறைகள் போக்கப்பட வேண்டும். அவர்களுடைய குறைகளைப் போக்கிக்கொள்வதற்கு அவர்கள் மற்றவர்களை நாடவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் மற்றவர்களை நாடுகிறபோதுதான் அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று அவர்கள் குற்றம் சாட்டப்படுகிறார்கள். இங்கே பேசிய கனம் உறுப்பினர் திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் அவர்கள் கூட, 'அரசியலில் ஆரம்ப ஆசிரியர்கள் ஈடுபடுகிறார்கள். ஆகவே அவர்களுக்குத் தனித் தொகுதி கூடாது' என்று வன்மையாகக் கண்டித்தார்கள். ஆரம்ப ஆசிரியர்கள் அரசியலில் ஈடுபடுவது கிடையாது. அவர்களுடைய நன்மையைக் கருதி, அவர்களுடைய குறைகளை எடுத்துச் சொல்வதற்கு வேண்டிய வழிவகை செய்து கொள்வதற்கு மற்றவர்களை நாட வேண்டியிருக்கிறது. அப்படி நாடுகிறபோதுதான் அவர்கள் அந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லப்படுகிறார்கள். அவர்களுக்குத் தனித் தொகுதி ஒதுக்கப்பட்டுவிடுமேயானால், அவர்களுடைய குறைகளை சட்ட மன்றங்களிலே எடுத்துக் கூற, எந்த அரசியல் கட்சியையும் நாடாமல் தனியாகவே இருந்து பணி புரிவதற்கு மிகவும் வசதியாக இருக்கும். அதையொட்டித்தான் இங்கே பேசிய கனம் காங்கிரஸ் உறுப்பினர் திரு. செல்வராஜன் அவர்கள், ஆரம்ப ஆசிரியராக இருந்த அனுபவத்தையொட்டி, ஆசிரியர்களுடைய குறையை அவர்கள் நன்றாக உணர்ந்ததன் காரணமாகத்தான் ஆரம்ப ஆசிரியர்களுக்குத் தனி இடம் இருந்தால்தான் நல்ல முறையில் அவர்கள் பணியாற்ற முடியும். அவர்களுடைய குறைகளை அவர்கள் எடுத்துச் சொல்ல முடியும். அவர்கள் அரசியலில் ஈடுபடுவதற்கு வேண்டிய சந்தர்ப்பம் இல்லாமல் போகும் என்று விளக்கினார்கள். ஆகவே, ஆரம்ப ஆசிரியர்களுக்குத் தனி இடம் ஒதுக்குவது தான் நல்லது. அதிலே எந்த அரசியல் கலப்பும் இருக்காது. அவர்களுக்குத் தனி இடம் கொடுக்கப்படாததால்

தான் அவர்கள் மற்றவர்களை, நாடவேண்டியிருக்கிற காரணத்தினாலேதான், இந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள், அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ற பழி அவர்கள் மீது சுமத்தப்படுகிறதே தவிர, உண்மையிலேயே அவர்கள் எந்தக் கட்சியையும் சேர்ந்தவர்கள் அல்ல என்ற காரணத்தினாலே இந்தத் தீர்மானம் மிகமிக முக்கியமானது என்பதை வலியுறுத்தி, இந்தத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

**திரு. நா. ராசாங்கம் :** மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, இன்று புலவர் கோவிந்தன் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை ஆதரித்து மற்றத் தொகுதிகளுக்குத் தனிப் பிரதிநிதித்துவம் வழங்க இருப்பதுபோல ஆரம்ப ஆசிரியர்களுக்கும் தனிப் பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் என்ற கருத்தை வற்புறுத்துகிறேன். இன்றைக்கு நாட்டிலே லட்சக்கணக்கான ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு என்று தனித் தொகுதி இல்லாத காரணத்தினால், சட்டமன்றத்திலே தனியாக— அவர்களுடைய பிரதிநிதி என்று அவர்களுடைய கருத்தை எடுத்து வைக்க உறுப்பினர்கள் இல்லாத காரணத்தினால் அவர்கள் தங்கள் குறைகளை எடுத்துச் சொல்ல மற்ற பல உறுப்பினர்களை நாட வேண்டியதாக இருக்கிறது. அப்போதுதான் யார், யார் யாரை நாடுகிறாரோ அவரைக் கொண்டு அந்த ஆசிரியர் இன்ன கட்சிக்காரரோ என்று சந்தேகிக்க இடமேற்படுகிறது. இன்றைய தினம் எந்தக் கட்சிக்காரரும் யாரையும் தங்கள் கட்சிக்கு இழுத்துக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும் என்பதில்லை. காரணம் இன்றைக்கு அரசியலைப்பற்றி யாருக்கும் சொல்லிக் கொடுக்க வேண்டிய தேவை இல்லை. அவரவர்களுக்கே புரிகிறது. அந்த அளவுக்கு நாட்டில் அரசியல் விழிப்பு ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு நாட்டில் லட்சக்கணக்கான ஆசிரியர்கள் இருக்கிறார்கள். வருங்காலச் சந்ததியினரின் அறிவையே வளர்க்கின்றவர்கள் அவர்கள் தாம். பாட திட்டம் எந்த வகையில் அமைய வேண்டும் என்று சொல்லக் கூடிய தகுதி அவர்களிடம் இருக்கிறது. குறிப்பாகச் சொல்லப்போனால் இன்றைக்கு ஒன்று முதல் ஐந்தாவது வரையில் உள்ள பாடப் புத்தகங்களை எடுத்துப் பார்த்தால் 3-ஆவது வகுப்புப் பாடப் புத்தகம் கடினமாக இருக்கிறது. 5-ஆவது சுலபமாக இருக்கிறது. இதுபோன்ற தாரதம்மியங்களை அவர்களுடைய பிரதிநிதிகள் என்று இங்கே யாராவது இருப்பார்களேயானால் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர முடியும். அரசாங்கமும் அவர்களுடைய யோசனைகளின்பேரில் ஆசிரியப் பெருமக்களுக்கு இன்று இருக்கக் கூடிய சங்கடங்களை நிவர்த்தி செய்து கல்வியின் தரத்தை உயர்த்தவும் வாய்ப்பு ஏற்படும். இன்றைக்கு அவர்களுக்கு என்று பிரதிநிதித்துவம் இல்லாத காரணத்தினால்தான் அவர்கள் சங்கங்களை வைத்துக் கொண்டு ஆண்டுதோறும் மகாநாடு நடத்துவதும், கூட்டங்கள் போடுவதும், தீர்மானங்கள் நிறைவேற்றி அதைச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்புவது— அதைப் பார்க்கும்போது அவர்கள் ஏதோ ஒரு கட்சியைச் சேர்ந்தவர்களைப் போலக் கருத இடமேற்படுகிறது.



இதில் கட்சிப் பிரச்சினைக்கு இடமில்லை. முதல் அமைச்சர் அவர்களும் கூட ஆசிரியர்களுக்கு என்று தனித் தொகுதி இருப்பதை ஏற்கக் கூடும். நம் நாட்டில் அடிப்படைக் கல்வி ஆரம்பக் கல்வி நல்ல முறையில் வளரவேண்டும், நம்முடைய குழந்தைகளுக்குக் கல்வி போதிக்கின்ற ஆசிரியர்கள் எவ்விதக் குறைகளும் இன்றி தொழில்பட வேண்டும், அரசாங்கமும் அவர்களுடைய குறைகளை அவ்வப்போது களையவேண்டும் என்றால் ஆசிரியர்களுக்கென்று தனித் தொகுதி வேண்டும். அவர்கள் சார்பில் சட்ட மன்றத்தில் பிரதிநிதி தேவை என்பதை அரசாங்கமும், மற்ற உறுப்பினர்களும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கின்றேன்.

**திரு. என். துரைபாண்டி :** கனம் சபாநாயகர் அவர்களே, நான் இந்தத் தீர்மானத்தை எதிர்க்கின்றேன். எதிர்ப்பதற்குக் காரணம் ஆசிரியர்கள் நல்லவர்கள் அல்ல, அல்லது அவர்கள் இந்த நாட்டுக்குச் செய்கிற பணி நல்ல பணி அல்ல என்ற நோக்கம் இல்லை. உண்மையில் எல்லா அங்கத்தினர்களும் பேசியதுபோல இந்த நாட்டின் வருங்காலச் சிற்பிகளை உருவாக்குகின்றவர்கள் அவர்கள் தாம் என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்த வேலையை அவர்கள் கடமையுணர்ச்சியோடு, நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பயன்தரத்தக்கவகையில் செய்தால் போதுமானது. ஆரம்ப ஆசிரியர்களுடைய குறைகளை எடுத்துச் சொல்ல இந்த மன்றத்தில் ஆட்கள் இல்லை. அதற்காகத் தனித் தொகுதி வேண்டும் என்கிறார்கள். இன்றைய தினம் இந்த மன்றத்தில் உள்ள உறுப்பினர்களிலேயே பலர் ஆரம்ப ஆசிரியர்களாகப் பணியாற்றி வந்தவர்கள் தாம். அதை ராஜீநாமாச் செய்துவிட்டு அரசியலில் குதித்து இந்த மன்ற அங்கத்தினர்களாக வந்திருக்கிறார்கள். இவர்களுக்கு ஆரம்ப ஆசிரியர்களுடைய குறைகள் என்ன என்பது தெரியாது என்று சொல்ல முடியாது. இத்தகையவர்களைக் கொண்டு அவர்கள் தம் குறைகளை நீக்கிக் கொள்ள முடியும். இன்றையதினம் அந்த ஆசிரியப் பெருமக்களின் ஊதியத்தை உயர்த்த வேண்டும் என்பதாக இந்த மன்றத்தில் உள்ள எதிர்க் கட்சி உறுப்பினர்களும் சரி, ஆளும் கட்சி உறுப்பினர்களும் சரி வற்புறுத்தித்தான் வந்தார்கள். அரசாங்கமும் அவர்களுக்குப் பல சலுகைகளைத் தந்து வருகிறது. ஆசிரியர்களுடைய பிரதிநிதி என்று இருந்தாலும் இல்லாவிட்டாலும் இந்த மன்றம் அவர்களுக்குப் போதுமான மதிப்புக் கொடுத்துத்தான் வருகிறது. ஆகவே, அவர்களுக்கு என்று தனித் தொகுதி தேவை இல்லை. இன்றைக்கு அவர்களுக்குத் தனித் தொகுதி வேண்டும் என்றால் லட்சக்கணக்கில் அரசாங்க சிப்பந்திகள் இல்லையா? அவர்களுக்கென்று தனித் தொகுதி வேண்டும், அப்புறம் கெஜெடெட் ஊழியர்களுக்கென்று தனித் தொகுதி வேண்டும், அதே மாதிரி போலீஸ்காரர்களுக்கென்று தனித் தொகுதி வேண்டும், இன்னும் ரெவின்யூ டிபார்ட்மெண்டுக்காரர்களுக்கென்று தனித் தொகுதி வேண்டும். அப்புறம் ஹோட்டல் தொழிலாளர்கள் இருக்கிறார்கள்.

"அரசாங்கமே எங்களுடைய குறைகளைக் கேளுங்கள்" என்பதாக இன்றைய தினமே பல போர்டுகளைப் போட்டுக் கொண்டு போராடுகிறார்கள், அவர்களுக்கென்று தனித் தொகுதி வேண்டும், இப்படி ஒவ்வொன்றாகப் பார்ப்போமானால் இந்தச் சபையிலேயே இடம் இருக்குமோ, இருக்காதோ என்ற சந்தேகம் வந்துவிடும். இன்றைய தினமே ஆசிரியர்களுக்குத் தனிச் சங்கங்கள் இருக்கின்றன. அவர்கள் தீர்மானம் போடுகிறார்கள். அதன் நகல்களை சட்டசபை உறுப்பினர்களுக்கும், அரசாங்கத்திற்கும் அனுப்பி வைக்கிறார்கள். நாமும் அவர்களுடைய குறைகளைக் கவனித்து வருகிறோம். அவர்களுக்கென்று தனித் தொகுதி வேண்டியதில்லை என்று சொல்ல விரும்புகிறேன்.

அதோடு இந்தச் சந்தர்ப்பத்தில் மேல்சபை வேண்டுமா, அதற்கு அவசியம் உண்டா, இல்லையா என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும். முன்னால் நம்மை ஆண்டவர்கள் சில முறைகளை வைத்திருந்தார்கள். அந்த முறைகளின்படி மேல்சபை இருந்தது. காபி சூடாக இருந்தால் அதை ஆற்றிச் சாப்பிடுவதற்கு கப் அண்டு சாசர் தேவை என்பது போல கீழ்சபை கப், இங்குள்ள சூட்டை ஆற்றுவதற்கு மேல்சபை இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. என்னைப்பொறுத்த வரையில் சபை முன்பு உள்ள தீர்மானத்தை எதிர்ப்பது போலவே மேல் சபையும் வேண்டாம் என்று கூறிக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**கனம் சபாநாயகர்** : கப் அண்டு சாசர் இல்லாமல் கனம் அங்கத்தினர் காபி குடித்துவிடுவார்களா ? (சிரிப்பு).

*** திரு. எம். எஸ். மணி : கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே**, ஆரம்ப ஆசிரியர்களுக்குத் தனித்தொகுதி வேண்டும். அவர்களுடைய பிரதிநிதிகளுக்கு இந்தச் சட்டமன்றத்தில் இடம் வேண்டும் என்ற தீர்மானத்தை எங்கள் கட்சியின் சார்பாக புலவர் கோவிந்தன் அவர்கள் கொண்டு வந்ததை நான் பலமாக ஆதரிக்கிறேன். அதை ஆதரிப்பதற்குப் பல காரணங்களை நான் இங்கே சொல்ல முடியும். குறிப்பாக மேல் சபை என்று ஒன்றை வைத்திருப்பதன் நோக்கமே படித்த பல வல்லுநர்கள் பல மொழி தெரிந்தவர்கள், பல கலை வல்லவர்கள் தேர்தலில் நின்று தான் இந்த மன்ற நடவடிக்கைகளில் பங்குகொண்டு தங்கள் கருத்தை எடுத்து வைக்கவேண்டும் என்றால் அதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடும். எல்லாவற்றிலும் வல்லவர்களாக இருப்பவர்களுக்கு மக்களுடன் நேரடித்தொடர்பு அதிகம் இல்லாமல் இருக்கக் கூடும். அதனால் தேர்தலில் நின்று வெற்றி பெற்று வர முடியாது. இன்றைக்குத் தேர்தலில் நின்று பலர் வந்திருக்கிறார்களே என்றால் சிலர் சாதியின் அடிப்படையில் வந்திருக்கிறார்கள். சிலர் செல்வாக்கின் அடிப்படையில் வந்திருக்கிறார்கள். பலர் ஆள் பலத்தில் வந்திருக்கிறார்கள். பலர் பண பலத்தில் வந்திருக்கிறார்கள். இது போல அறிஞர் பெருமக்களும் வரட்டுமே என்று விட்டுவிட்டால் அவர்களுடைய நல்ல பல கருத்துக்களை





நாம் அறிந்துகொள்ள வாய்ப்பு இல்லாமல் போய்விடும், ஆகவே மேல் சபை என்று வைத்து—அறிஞர் திரு. லட்சுமணசுவாமி முதலியாரைப் போன்ற கல்வி நிபுணர்கள்—பட்டதாரித் தொகுதி வழியாகவாவது வரட்டும் என்று செய்திருக்கிறோம். அவருடைய அறிவு நமக்குத் தேவைப்படுகிறது. அதுபோலத்தான் இன்றைய தினம் நம்முடைய குழந்தைகளுக்கு அடிப்படைக் கல்வியைப் போதிக்கின்ற, வருங்காலச் செல்வங்களை உருவாக்குகின்ற ஆரம்ப ஆசிரியர்களுக்கு என்றே தனித்தொகுதி ஏற்படுத்தினால் அவர்கள் இங்கே வந்து தங்கள் குறைகளை, கோரிக்கைகளை எந்த அரசியல் கட்சியின் தொடர்பும் இல்லாமல் அரசாங்கத்தினிடம் எடுத்து வைக்க முடியும். அவர்கள் கேட்பது போல தனிப் பிரதிநிதித்துவம் கொடுப்பதில் என்ன தவறு இருக்க முடியும் என்பதை நமது அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அது மட்டுமல்ல. இதனால் அரசியல் புகுத்தப்பட்டுவிடுமோ என்று அஞ்சுகிறார்கள் நான் கேட்டுக்கொள்கிறேன், அஞ்சவேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் 18 வயதிற்கு மேற்பட்டவர்களுக்குத் தான் ஓட்டுரிமை உண்டு. ஆரம்பப் பள்ளிகளில் படிக்கின்ற இளைஞர்களுக்கு 5 வயது முதல் 12 வயது வரை தான் ஆகும். எனவே, அவர்களிடம் என்ன அரசியலைப் புகுத்திவிட முடியும் ? ஓட்டுப்போடக் கூடிய உரிமையும் அவர்களுக்குக் கிடையாது. ஆகவே அரசியலைப் புகுத்தி விடமுடியும் என்று அஞ்சத் தேவையில்லை. மேலும் அப்படிப்பட்ட இளைஞர்களுக்குக் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் இங்கே வந்தால், அவர்கள் அந்தப் பிள்ளைகளுடைய கல்வியைப் பற்றியும், தங்களுடைய குறைகளைப்பற்றியும் இங்கே எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கும். மேல்சபை கூடத் தேவையில்லை என்ற வாதம் இங்கே கொண்டுவரப்பட்டது. இப்பொழுது மாவட்டத்திற்கு ஒரு மந்திரி கொடுத்திருக்கிறோம். ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள 20 எம்.எல்.ஏக்களின் பிரதிநிதியாக ஒரு மந்திரி இருக்கிறார். என்னுடைய மாவட்டத்திற்கு ஒரு மந்திரி இருக்கிறார் என்று பெருமையாகச் சொல்லிக் கொள்ளலாம். ஆனால் மாவட்டத்திற்கு ஒரு மந்திரி இருக்கிறார் என்ற காரணத்தால் அவர்மூலம்தான் குறைகளைச் சொல்லி நிறைவேற்றிக்கொள்ள முடியும் என்பதில்லை. அப்படிப் பார்க்கும்பொழுது சேலம் மாவட்டத்திற்கு மந்திரி இல்லையே என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். சேலம் மாவட்டத்திற்கு ஒரு மந்திரி இருப்பதால் அந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய ஒவ்வொருவருக்கும் ஏதாவது கிடைக்கப்போகிறதா என்றால் ஒன்றுமில்லை, ஆனால் ஒவ்வொருவரும் தன் மாவட்டத்திற்கு ஒரு பிரதிநிதியாக ஒரு மந்திரி இருக்கிறார் என்று பெருமைப்பட்டுக் கொண்டு குறைகளைச் சொல்ல முடியும். ஆளுங்கட்சி ஜாதிகளைக் கணித்துத்தான் மந்திரிகளைப் போட்டிருக்கிறது. அப்படியிருக்கும் பொழுது, இந்த ஆரம்ப ஆசிரியர்களுக்காக ஏன் ஒரு பிரதிநிதித்துவம் கொடுக்கக்கூடாது என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். பெண்களையும் கௌரவிக்கவேண்டுமென்பதற்காக பெண்களுக்காக ஒரு பெண் மந்திரியும் போடப்பட்டிருக்கிறது.

**கனம் சபாநாயகர் :** சீட் மட்டுமல்ல, மந்திரியும் வேண்டும் என்று சொல்கிறீர்களா ?

**திரு. எம். எஸ். மணி :** உதாரணத்திற்காகச் சொன்னேன். மந்திரி கொடுக்காவிட்டாலும், ஒரு பிரதிநிதித்துவமாவது இருக்க வேண்டுமென்பதற்காகதான் சொன்னேன். பெண்களுடைய எண்ணிக்கையைப் பார்க்கும்பொழுது ஆண்களைவிடப் பெண்கள் தான் அதிகமாக இருக்கிறார்கள். ஆகவே அந்த முறையில் அவர் களுக்காக ஒரு பெண் மந்திரி கொடுத்திருக்கிறோம். ஆரம்ப ஆசிரியர்களுக்கு ஒரு தொகுதியைக் கொடுத்தால் அவர்கள் எந்தக் கட்சிக்கு ஓட்டளிப்பார்கள் என்று ஒரு பெண் அங்கத்தினர் ஒரு பிரச்னையைக் கிளப்பினார்கள். எந்தக் கட்சிக்கு ஓட்டளிப்பார்கள் என்று என்று கேட்காமல் எந்தக் கருத்துக்கு, ஓட்டளிப்பார்கள் என்று கேட்டிருந்தால் மிகவும் நன்றாக இருந்திருக்கும். ஏனென்றால் கட்சியை விட, ஒரு கட்சி சொல்லுகின்ற கருத்துத்தான் முக்கிய மானது. திரு. செல்வராஜன் அவர்கள் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், அவர் இந்த ஆசிரியர் தொழிலிலே இருந்த காரணத்தாலே எதிர்க்கட்சி உறுப்பினராகிய திரு. கோவிந்தன் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய தீர்மானத்தை ஆதரித்திருக்கின்றார். ஆகவே, ஆரம்ப ஆசிரியர்களுக்கு ஒரு தனித் தொகுதி வேண்டுமென்பதைச் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். இப்பொழுது தாழ்த்தப்பட்ட மக்களுக்கென்று ஒரு தொகுதி கொடுத்திருக்கிறோம். ஏன் கொடுத்திருக்கிறோம் ? அவர்கள் ஊர்க் கோடியிலே இருக்கிறார்கள், அவர்களுக்கு அரசியல் அறிவு இல்லை, படிக்க வசதியில்லை, அவர்கள் விவசாயத்தையே செய்துகொண்டிருக்கிறார்கள் என்ற காரணத்தால் அவர்களும் உயர்நிலைக்கு வரவேண்டுமென்று அவர்களுக்குக் கல்வி வசதி யளித்து, அவர்கள் படித்து ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக இன்றைக்கு வரக்கூடிய நிலைமை இருக்கிறது. அவர்கள் இன்னும் உயர் நிலைக்கு வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. இன்றைக்கு இந்தப் பக்கத்தில் 10 பேர்கள், அந்தப்பக்கத்திலே 10 பேர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அதேமாதிரி இந்த ஆரம்ப ஆசிரியர்களுக்கும் தனித் தொகுதி தரப்பட வேண்டும். 10, 15 வருடங்களுக்கு முன்பு பள்ளிக்கூடப் புத்தகங் களைப் பார்த்தால் 'பானை செய்பவன் குயவன்' என்றும், 'முடி வெட்டுபவன் அம்பட்டன்' என்றும் தான் இருக்கும். 'ர்' என்ப தற்குப்பதிலாக 'ன்' என்றுதான் இருந்து வந்தது. ஆனால் அதை எதிர்த்து ஆசிரியர்களிடமிருந்து கோரிக்கைகள் வந்த காரணத்தால் தான், 'ன்' என்பது போய் 'ர்' என்று வந்திருக் கிறது, இப்பொழுது பானை செய்பவர் குயவர் என்று தான் இருக் கிறது. ஆகவே, அவர்களுடைய குறைகளைச் சொல்வதற்கும், அவர்கள் தங்களுடைய நிலையை உயர்த்திக்கொள்வதற்கும் அவர் களுக்கு ஒரு தனித் தொகுதி மிகவும் அவசியமாகும். அது மாத்திரம் அல்ல. எதிர்காலத்திலே பெரிய அரசியல் தலைவர் களாக, அமைச்சர்களாக, திறமை மிக்கவர்களாக மாணவர்களை உருவாக்கவேண்டியவர்களாக ஆசிரியர்கள் இருப்பதால் அவர்கள்



மனநிறைவோடு இருந்தால்தான் தங்கள் பணியைச் செவ்வனே செய்ய முடியும், அவர்கள் அப்படி நல்ல முறையிலே பயிற்சி அளித்தால்தான் எதிர்காலத்தில் நல்ல வல்லுநர்களை நாம் பெற முடியும். அவர்களுக்கு ஒரு சீட் கொடுக்கிற காரணத்தால் எதையும் அவர்கள் செய்துவிட முடியாது. எந்த தீர்மானத்தையும் அவர்கள் தோற்கடித்துவிட முடியாது. எனவே அவர்களுக்கு ஒரு தனித் தொகுதி கொடுக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டு கடைசியாக ஒரு உதாரணத்தை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய தமிழ்நாட்டிலே ஒரு பழமொழி உண்டு. 'சும்மா இருந்த சங்கை ஊதிக்கெடுத்தான் ஆண்டி' என்று. அதைப்போன்று நாம் இன்று ஆரம்ப ஆசிரியர்களுக் காக ஒரு தனித் தொகுதி கேட்கின்ற நேரத்திலே, மேல் சபையே வேண்டாமென்று சொல்லி அங்கே உள்ள பட்டதாரிகளின் தொகுதி வேண்டாமென்று ஆளுங்கட்சியினர் சொல்லக்கூடிய நிலையைப் பார்க்கின்றபொழுது மிகவும் பரிதாபமாக இருக்கிறது. ஆரம்ப ஆசிரியர்களுக்கு ஒரு தனித் தொகுதி கொடுக்கிற நிலையை உண்டாக்கக்கூடிய அதே நேரத்தில், பட்டதாரித் தொகுதியை நீக்கவேண்டுமென்று சொல்வது மிகவும் பரிதாபகரமானதாக இருக்கிறது. ஆகவே, நான் புலவர் கோவிந்தன் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*** திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** கனம் சபாநாயகர் அவர் களே, கனம் அங்கத்தினர் புலவர் கோவிந்தன் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தை எதிர்த்து நான் ஒன்றிரண்டு வார்த் தைகள் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆரம்ப ஆசிரியர்கள் செய்யக்கூடிய பணி, மிகவும் புனிதமான பணி; இந்த நாட்டின் சிறந்த தலைவர்களையெல்லாம் உருவாக்கக்கூடிய புதனிமான பணி. இப்படிப்பட்ட சிறந்த ஒரு பணியிலே ஈடுபட்டிருக்கக்கூடியவர்களை நாமாக வலுவாக அரசியலுக்கு—அதுவும் அரசியல் சூது, வஞ்சகம் நிறைந்ததாக எங்களுக்கெல்லாம் தெரிகிறது—இதில் ஆசிரியர்களை இழுத்துவிட வேண்டாம் என்ற காரணத்தால் நான் இந்தத் தீர் மானத்தை எதிர்க்கிறேன். முன்பு பேசிய கனம் உறுப்பினர் கூறியதைப் போன்று கிராஜுவேட்ஸ் தொகுதி இருக்கவேண்டும், அது அவசியந்தான். ஏனென்றால் அவர்கள் படித்து மேலே வந்துவிட்டவர்கள். அவர்களுடைய பிரச்னையைச் சொல்வதற்காக அது இருக்கவேண்டியதுதான். கிட்டத்தட்ட 300 பேர்கள் ஜனத்தொகை இருக்கிற ஒவ்வொரு ஊரிலேயும் ஆரம்ப ஆசிரியர் களாகப் பணியாற்றிக்கொண்டிருக்கக் கூடியவர்களுடைய பிரச்னை களை எடுத்துச்சொல்வதற்காகத்தான் நாம் எல்லாம் இங்கே வந் திருக்கிறோம். ஆகவே, அவர்களுக்கென்று தனித் தொகுதி தேவையில்லை. அப்படி அவர்களுக்குத் தனித்தொகுதி கொடுக் கும் பொழுது, நிச்சயமாக வியாபாரிகள் அவர்களுக்கென்று ஒரு தொகுதி வேண்டுமென்று கேட்பார்கள். வியாபாரிகள் இப் பொழுதே ஒரு தனித் தொகுதி வேண்டுமென்று கேட்டுக்கொண்டு தான் இருக்கிறார்கள், அதேமாதிரி தொழில்களிலே ஈடுபடுகிறவர்

கள் அவர்களுக்கென்று தனித்தொகுதி வேண்டுமென்று கேட்பார்கள். அதேபோல திருமதி ராஜாத்தி அவர்கள் சொல்லியபடி தொழிலில் ஈடுபடக்கூடிய பெண்கள் அவர்களுக்கென்று தனித் தொகுதி வேண்டுமென்று கேட்பார்கள். அதே மாதிரி செகரட்டரியேட்டில் வேலை பார்க்கக்கூடிய அதிகாரிகள் அவர்களுக்கென்று ஒரு தொகுதி வேண்டுமென்று கேட்பார்கள். ஆகவே, இப்படியே ஒவ்வொருவரும் தனித் தொகுதி வேண்டுமென்று கேட்கக்கூடிய பிரச்னை கிளம்பிவிடும். இதைக்கொண்டு வந்த அங்கத்தினர் அவர்களே, உண்மையிலேயே ஆசிரியர்களுடைய பணி எப்படியிருக்கிறது, அவர்களை அரசியலிலே இழுக்கலாமா என்பதை யோசித்துப்பார்க்க வேண்டும். அவர்களை அரசியலில் தேர்தல் சமயங்களில் பயன் படுத்தக்கூடிய சூழ்நிலை நாட்டிலே உருவாகிக்கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தப் புனிதமான பணியிலே ஈடுபட்டிருக்கிறவர்களை அரசியலுக்கு இழுத்தால் இந்தப் புனிதமான பணியை அவர்கள் செய்யமுடியாமல் அதற்கு இடைஞ்சல் செய்யக்கூடியதாகத்தான் அது இருக்கும். ஆகவே, அப்படியிருக்கிற இந்தத் தீர்மானம் நல்லதாக இருக்காது என்பதால் அதை ஏற்றுக்கொள்ளவேண்டாமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. மு. கருணாநிதி** : கனம் தலைவரவர்களே, எங்கள் கட்சியைச் சேர்ந்த புலவர் கோவிந்தன் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இங்கு நான் கூற விரும்புகிறேன்.

இந்தத் தீர்மானம் ஆங்கிலத்திலேயும், தமிழிலேயும் மொழி பெயர்க்கப்பட்டு இந்த மன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிறது. இந்த மொழிபெயர்ப்பிலே இருக்கின்ற ஒரு சிறு குழப்பத்தை நான் இந்த மன்றத்திலே எடுத்துரைப்பது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். ஆங்கிலத்தில் இருக்கும் தீர்மானத்தில் கவுன்சில் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. தமிழில் இருப்பதில் சட்டமன்றம் என்று குறிக்கப்பட்டிருக்கிறது இதைப்பற்றி முதலமைச்சர் அவர்களிடம்கூட நான் குறிப்பிட்டுச் சொன்னேன். அவர்களும் அதனை ஓரளவு ஒத்துக்கொண்டார்கள் என்றே கருதுகிறேன். ஏற்கனவே இந்த மன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்களை சட்ட மன்ற உறுப்பினர்கள் என்று அழைப்பது இன்றைய தினம் வழக்கத்திலே இருந்துவரும் ஒன்றாகிவிட்டது. ஆகவே, இந்த மன்றம் சட்டமன்றம் என்று அழைக்கப்படுகிற நேரத்தில் கவுன்சிலை மேல் சபையை சட்டமன்றம் என்று அழைப்பதால் ஒரு புதிய குழப்பம் ஏற்பட ஏதுவாகிறது. நம்முடைய அரசாங்க புத்தகங்களில் சட்ட மன்றம் மேல் சபையையும், சட்ட சபை கீழ்சபையையும் குறிக்கும்படி இருக்கிறது. மேல் சபை, கீழ் சபை என்று இருப்பதுகூட அவ்வளவு பொருத்தமாகத் தெரியவில்லை. ஆகவே, நமது மன்றமே சட்டமன்றம் என்று நாட்டிலே வழங்கப்படுகின்ற காரணத்தால் இதனைத் தொடர்ந்து சட்ட மன்றம் என்று அழைப்பதற்கும், மேல் சபைக்கு வேறு ஒரு





பெயரை வைத்துக் கொள்வதற்கும் இந்த மன்றமும், முதலமைச்சர் அவர்களும் தக்க முடிவினை மேற்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். அந்த முடிவை மேற்கொள்கின்ற நேரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைக் கலந்து ஆலோசிப்பார்கள் என்று கருதுகிறேன். எங்களுடைய தலைவரால் தெரிவிக்கப்படுகின்ற கொள்கைகளைப் பொறுத்த வேறுபாடான கொள்கை இருக்கலாமே தவிர, அவருடைய தமிழ் அறிவிலும் தமிழ்ப் பயிற்சியிலும் கனம் முதலமைச்சர் அவர்களுக்கு நிச்சயமாக நம்பிக்கை இருக்குமென்ற காரணத்தால் அவரையும் கலந்து ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பெயர்த் திருத்தத்தை நிச்சயமாகக் கொண்டு வரவேண்டும். சட்ட மன்றம் எது, சட்ட சபை எது என்ற குழப்பம் மேலும் மேலும் முற்றாமல் இருக்க இது வழி கோலுவதாக அமையும் என்று கருதுகிறேன். நண்பர் கோவிந்தன் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை ஆளுங்கட்சியிலிருந்து திரு. செல்வராஜன் அவர்களும் ஆதரித்திருக்கிறார்கள். அவர் ஆதரித்ததைப் போலவே ஆளுங்கட்சியிலுள்ள மற்றவர்களும் அதை ஆதரிப்பார்கள் என்று நம்பினோம். ஆனால் அதை எதிர்த்து ஆளுங்கட்சித் தரப்பைச் சார்ந்தவர்கள் பேசினார்கள். ஆசிரியர்கள் அரசியலில் ஈடுபடுவதைத் தடுப்பதற்காகத்தான் இதை எதிர்க்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். ஆசிரியர்கள் அரசியலில் ஈடுபடுவது கூடாது, மாணவர்கள் அரசியலில் ஈடுபடுவது கூடாது என்று ஆளுங்கட்சியினர் கூறுகின்ற நேரத்தில் அவர்கள் கூறுகின்ற 'அரசியலுக்கு' முன்பு தொக்கி இருக்கும் வார்த்தைகள் 'திராவிட முன்னேற்றக் கழக அரசியலில் ஈடுபடக்கூடாது' என்பதுதான். ஆசிரியர்கள், மாணவர்கள் காங்கிரஸ் தரப்பிலே அரசியலில் ஈடுபடுவார்களேயானால் அவர்கள் அதை மனதார எதிர்ப்பார்களா? இல்லையென்பதைத்தான் பல நிகழ்ச்சிகள் தெளிவாகக் காட்டுகின்றன. எத்தனையோ மேடைகளில், அமைச்சர்கள் கலந்து கொள்கின்ற அரசியல் மேடைகளில் காங்கிரஸ் சார்பாக ஆசிரியப் பெருமக்கள் கலந்து கொண்டு பேசியிருப்பதற்கான பல ஆதாரங்களை என்னால் காட்ட முடியும். என்னுடைய தொகுதியில் இருந்தே கூடப் பல ஆதாரங்களைக் காட்ட முடியும்.

மாணவர்கள் அரசியலில் கலந்து கொள்ளக்கூடாது என்ற கருத்து இதே மன்றத்தில் எடுத்து வைக்கப்பட்டு, எங்களுடைய தலைவர் அண்ணா அவர்கள் இங்கு இருந்த நேரத்திலே, நிதியமைச்சராக கனம் சுப்பிரமணியம் அவர்கள் இருந்த நேரத்திலே 'மாணவர்களை அரசியலிலே ஈடுபடுத்தக்கூடாது' என்பதிலே ஒரு ஒருமைப்பாடான கருத்து மேற்கொள்ளப்பட்டது. அது எல்லாக் கட்சிக்காரர்களாலும் ஒப்புக் கொள்ளப்பட்டது. அந்தக் கருத்து அடுத்த எட்டாவது மாதம் மீறப்பட்டது. கன்னையில் நடைபெற்ற காங்கிரஸ் மாணவர்கள் மாநாட்டில் அப்போது நிதி மந்திரியாக இருந்த கனம் சுப்பிரமணியம் அவர்கள் பங்கு பெற்று அந்த மாநாட்டை நடத்தி வைத்தார்கள். இப்போது மாணவர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது என்று தீவிரமாகப்

[திரு. மு. கருணாநிதி] [5th August 1965

பேசப்படுகின்ற நேரம். அந்த மாணவர்கள் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டத்தில் கலந்து கொண்டால் அது அரசியலாகும். அதே நேரத்திலே அகில இந்தியக் காங்கிரஸ் கட்சித் தலைவர் காமராஜர் அவர்களுடைய ஜோதியைத் தூக்கிக் கொண்டு ஓடியது 63 மாணவர்கள்தான் என்று பத்திரிகையில் போட்டிருக்கிறார்கள், எதிர்க்கட்சி அரசியலில் கலந்துக் கொள்ளக் கூடாது, காங்கிரஸ் அரசியலிலே கலந்து கொள்ளலாம் என்பதை மனதிலே வைத்துத்தான் பேசப்படுகிறது என்ற காரணத்தால் . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மாணவர்கள் தனி ஹோதாவிலே அரசியல் ஞானம் உள்ளவர்களாக இருக்கவேண்டும். அதிலே ஒன்றும் ஆட்சேபம் இல்லை. தனி ஹோதாவில் அரசியலில் அக்கறை செலுத்துவதிலே தவறில்லை. ஒரு கட்சிக்கு அவர்களைப் பயன்படுத்தக்கூடாது ; அவர்கள் ஒரு அரசியல் கட்சியில் சேர்ந்து கொள்ளக்கூடாது என்பதுதான் பொதுவான கருத்து. எப்போது இந்த உடன்பாடு ஏற்பட்டதோ, எப்போது இந்த மன்றத்திலே பேசப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டதோ அதற்கு சில மாதங்களுக்குப் பிறகு நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குப் போயிருந்தேன். அங்கு ஒரு கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். அப்போது என்னிடம் சில காகிதங்களை மாணவர்கள் கொடுத்தார்கள். அவற்றோடு தவறுதலாக ஒரு காகிதத்தையும் என்னிடம் கொடுத்து விட்டார்கள். அந்தக் காகிதத்தை அப்போதைய கல்வியமைச்சர் சுப்பிரமணியம் அவர்களுடைய பார்வைக்கு அனுப்பினேன். அது ஒரு ரசீது. சிதம்பரம் திராவிட முன்னேற்றக் கழக மாணவர்களை மன்றத்திற்கு சந்தாவாக 25 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக அந்த மாணவன் ரசீதைப் பெற்றிருக்கிறான். அதைத் தான் நான் கல்வியமைச்சருடைய கவனத்திற்கு அனுப்பினேன்.

**திரு. மு. கருணாநிதி :** 25 ரூபாய் சந்தா வசூலிக்கின்ற அளவுக்கு உள்ள அவ்வளவு பணக்கார இயக்கம் அல்ல திராவிட முன்னேற்றக் கழகம். மெம்பராகச் சேர எட்டணாக் கொடுக்கவே மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். நான் சொல்ல வந்தது—இந்த மன்றத்தில் பகிரங்கமாக அறிவிக்கப்பட்டு எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட பிறகு, திரு. சுப்பிரமணியம் அவர்கள் காங்கிரஸ் மாணவர்கள் மாநாட்டை நடத்திய மாணவர்களை, அந்த மாநாட்டிலே கலந்து கொண்டு ஊக்குவித்தார்கள் என்பதைத்தான் குறிப்பிட விரும்பினேன். மாணவர்கள் நேரடியாக அரசியலில் ஈடுபடாமல் அரசியல் அறிவு பெறவேண்டுமென்ற அமைச்சர் அவர்களுடைய வாதத்தை நாங்கள் முழுக்க முழுக்க ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் மாணவர்கள் காமராஜர் ஜோதியை எடுத்துக் கொண்டு சென்றதைப் போல் வேறு ஒரு எதிர் கட்சியைச் சேர்ந்த தலைவருடைய ஜோதியை எடுத்துக்கொண்டு சென்றிருந்தால் அவர்கள் இன்று பள்ளிக் கூடத்திலா இருப்பார்கள் ? பாளையங்கோட்டைச் சிறையில் அல்லவா இருப்பார்கள். ஆகவேதான் அதைப் பற்றிக் குறிப்பிட்டுக்கொண்டு வந்தேனே



5th August 1965] [திரு. மு. கருணாநிதி]

யல்லாமல் வேறு அல்ல. மாணவர்கள் அரசியலில் கலந்து கொள்ளக்கூடாது என்பது பொதுவான கருத்து ; எல்லாக் கட்சிகளுக்கும் ஏற்புடைய கருத்து. ஆனால் ஆசிரியர்களுக்குத் தனித் தொகுதி ஒதுக்கப்பட்டு, அந்தத் தொகுதியின் சார்பாக அவர்கள் மேலவையிலே இடம் பெற்றுத் தங்களுடைய பல்வேறு நிலைமைகளுக்காக, ஊதிய உயர்வு வாழ்க்கை வசதிகளுக்காக, அவர்களுக்குத் தரப்படவேண்டிய வாய்ப்புக்களுக்காக வாதாடவும், சட்டமன்றத்திலே எடுத்துச் சொல்லவும் பெறுகின்ற உரிமை அறுக்கப்படாமல் மேலும் அந்த உரிமை அளிக்கப்பட வேண்டுமென்பதற்காகத்தான் புலவர் கோவிந்தன் அவர்கள் இந்தத் தீர்மானத்தை வைத்திருக்கிறார்கள். தங்களுடைய உரிமைகளுக்காக வாதாடவும், தங்களுடைய கோரிக்கைகளை எடுத்துச் சொல்லவும் வழி வகுக்கின்ற முறையில் இந்தத் தீர்மானத்தை ஆளுங்கட்சியினர் ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER : The hon. Leader of the Opposition.

Sri V. R. Nedunchezhiyan rose . . .

Srimathi T. N. Anandanayaki also rose.

(Mr. Speaker sounded the gong.)

MR. SPEAKER : The hon. Leader of the Opposition may please resume his seat. When I say there is no time, hon. Members feel dissatisfied about it. But, they do not give me their names earlier. The hon. Member, Srimathi T. N. Anandanayaki has been sitting here till now and she could have given her name to me earlier. Now when I called the hon. the Leader of the Opposition to speak, the hon. Member also rose to speak. Then I had to ring the bell and request the hon. the Leader of the Opposition to resume his seat. All such inconveniences can be avoided if only hon. Members co-operate with the Chair.

SRIMATHI T. N. ANANDANAYAKI : Even now I am prepared to co-operate, if it is inconvenient.

MR. SPEAKER : So the hon. Member will co-operate in the sense that she does not want to speak.

SRIMATHI T. N. ANANDANAYAKI : Yes, Sir.

MR. SPEAKER : Inconvenience has already been caused. Already the hon. Leader of the Opposition had risen from his seat to speak and I had to request him to resume his seat.

SRIMATHI T. N. ANANDANAYAKI : Sir, I am so sorry for the inconvenience caused, if any . . . .

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, if the hon. the Leader of the Opposition has already started to speak, it is not right that we should permit the hon. Member to speak or intervene. . .

MR. SPEAKER : The hon. the Leader of the Opposition may now speak.

**திரு. இரா. நெடுஞ்செழியன்** : கனம் அவைத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கின்ற வகையில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். சட்ட மன்ற மேலவையில் துவக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கென்று தனித் தொகுதி அமைக்கப்படுதல் வேண்டும்; அது நீக்கப்படக்கூடாது என்பதை வலியுறுத்தும் வகையில் இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. சட்ட மன்ற மேலவை அவசியந்தானா இல்லையா என்ற கருத்துக்கள் பல இடங்களில் பரிமாறப்பட்டு வருகின்றது. சில மாநிலங்களில் சட்ட மன்ற மேலவை இல்லாமல் சட்ட மன்றம் மட்டுமே பணியாற்றுகின்ற நிலைமை இருக்கிறது. சில மாநிலங்களில் சட்ட மன்ற மேலவையும், கீழ் அவையும் வைத்துப் பணியாற்றி வருகின்றார்கள். மேலவை இருக்க வேண்டிய அவசியம் என்ன என்று கூற வருகின்றபோது சட்ட மன்றத்திற்குப் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த மன்றத்திற்கு வருகை தருகின்றவர்கள் போக, அரசாங்கத்திற்கு அனுபவம் மிக்க பலருடைய ஆலோசனைகள் தேவைப்படுகின்ற காரணத்தால் பல்வேறு துறைகளில் அனுபவம் பெற்ற வல்லுனர்களாக விளங்குகின்றவர்கள் வேறு ஒரு அவையில் அமைவார்களானால் அவர்களுடைய ஆலோசனைகள் தக்க முறையில் பயன்படும் என்ற கருத்திலேதான் மேல் அவை வைக்கப்பட்டிருக்கிறது.

சாதாரணமாக கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொல்லக் கூடும், இந்த மன்றங்களில் ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள், தொழிலாளர் தலைவர்கள் இதுபோன்று பல்வேறு துறைகளில் உள்ளவர்கள் வரமுடியும். அவர்கள் தங்கள் தங்கள் கருத்துக்களை இந்த மன்றத்தில் கூட எடுத்து வைக்க முடியும், அவர்கள் அப்படி ஆலோசனைகள் கூறுவதின் மூலம் அரசாங்கம் தக்க வழிவகைகளை மேற்கொள்ளக் கூடும் என்று எடுத்துச் சொல்லலாம். ஆனால் மேல் அவை என்று ஒன்று இருப்பதற்குக் காரணமே நேரடியாக மக்களிடம் சென்று, ஒரு லட்சம் வாக்காளர்களிடம் நேரில் சென்று அவர்களின் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று இந்த மன்றத்திற்கு வருகிற நிலையைப் பெற்றிருக்கிறார்களா என்றால் அப்படி பெற முடியாத நிலையில் இருப்பவர்களின் அறிவு, ஆற்றல் இவை பயன்பட வேண்டும், அவர்களின் ஆலோசனைகளைப் பெறுதல் வேண்டும், ஆகவே நேரடியாக பொதுத் தேர்தலில் நிற்க வாய்ப்பில்லை என்று கருதப்படுகிற துறைகளைச் சேர்ந்தவர்களைக் கொண்ட ஒரு அவை இருக்குமானால் அந்த அவையின் கருத்தையும் பெற்றுக் கொள்ளலாம் என்ற நோக்கத்தின் அடிப்படையில்தான் மேல் அவை அமைக்கப்பட்டிருக்கிறது. அதிகாரங்கள், உரிமைகள் இவற்றைப் பொறுத்துப் பார்த்தால் இந்த மன்றம் செய்கிற முடிவுகளே முடிந்த முடிவுகளாக அமைகிற ஒன்றாக இருக்கிறது. இந்த மன்றத்தின் முடிவை மாற்றியமைக்கும்





வல்லமை மேல் அவைக்கு இல்லை. அவர்கள் எதையாவது நிராகரித்தால் இந்த மன்றம் மூன்று முறை அதை நிறைவேற்றி விடுமானால் இதைத் தடுத்து நிறுத்த மேல் அவைக்கு உரிமை இல்லை. மேல் அவையின் நோக்கம், சீரிய ஆலோசனைகளை, வல்லுனர்கள், நிபுணர்களிடம் இருந்து பெற, அமைகிற ஒரு அவையேயாகும். அந்த ஒரு முறையில்தான் அது அமைக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு துறைகளில் உள்ளவர்கள் அந்த அவையில் வரவேண்டுமென்ற நோக்கத்தோடுதான் பல்வேறு தொகுதிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. சட்ட மன்றத்தைச் சேர்ந்த நாமே எல்லாக் கருத்துக்களையும் இந்த மன்றத்தில் எடுத்து வைக்கக் கூடிய வாய்ப்பிருந்தாலும் சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாமே சில பிரதிநிதிகளை மேல் அவைக்கு தேர்ந்தெடுத்து அனுப்புகிறோம். நாம் அத்தனை பேர்களும் கருத்துக்களை பரிமாறிக்கொண்டு சட்டங்களை உருவாக்கக் கூடிய வாய்ப்பு இருக்கும்போது நாம் ஏன் சில பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து மேல் அவைக்கு அனுப்ப வேண்டிய அவசியம் ஏற்படுகிறது? ஏனென்றால், வல்லுனர்கள், அனுபவம் பெற்றவர்கள், நிபுணர்கள் போன்றவர்கள், பொதுத் தேர்தலில் நிற்க வாய்ப்பற்றவர்கள், அந்தச் சூழ்நிலையைப் பெறாதவர்கள் அத்தகைய வல்லுனர்கள், நிபுணர்கள் சிலர் விடுபடுதல் கூடாது, அவர்களின் சிறந்த ஆலோசனைகள் வருதல் வேண்டும் என்பதற்காகத்தான் இந்த முறை வகுக்கப்பட்டிருக்கிறது. இன்றைய அரசியல் சூழ்நிலையில் அப்படிப்பட்டவர்கள் வர முடியாத நிலை ஏற்படுமானால் அப்படிப்பட்டவர்கள் ஆலோசனைகள் அரசுக்குத் தேவை என்ற காரணத்தினால்தான் சட்டமன்றத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் அவர்கள் சிலரைத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்கள் மேல் அவைக்கு. நாமே போதும் என்ற உணர்வோடு இருந்தால் நாம் சிலரை மேல் அவைக்கு தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டிய அவசியமில்லை. அந்த முறையில்தான் ஆசிரியர்களுக்கு ஒரு பிரதிநிதி இருந்து வருகிறார். அப்படி இருந்து வருகிறவர்கள் எந்த அளவிற்கு பணியாற்றி வருகிறார்கள் என்பதை மேல் அவை குறிப்பேடுகளைப் பார்த்தால் ஆசிரியர்கள் தொகுதியில் இருந்து வந்தவர்கள் கல்விப் பிரச்னைகள் பற்றிய பிரச்னைகள் எழும்போது ஆசிரியர்களின் குறைபாடுகளை, கல்வியில் உள்ள குறைபாடுகளை, கல்வித் துறையில் ஏற்படுத்த வேண்டிய சீர்திருத்தங்கள் ஆகியவை பற்றி அரசின் கவனத்திற்கு வருகிற அளவிற்கு அவர்கள் பணியாற்றியிருக்கிறார்கள் என்பதை நாம் அறிய முடிகிறது. ஒன்று வேண்டுமானால் கூறலாம். இப்போது கல்வித் துறையில் கல்லூரிக் கல்வித் துறை ஒன்றாகவும், துவக்கப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி இரண்டையும் இணைத்து ஒரு நிலையில் வைத்திருப்பதால் துவக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கும், உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் சேர்த்து ஒரு தொகுதி என்று வைத்து, கல்லூரி ஆசிரியர்களுக்கு ஒரு தனித் தொகுதி என்ற ஒரு நிலை ஏற்படுத்தப்படுமானால்கூட அது மிகவும் நன்றாக அமையக் கூடும். ஒன்று கூறலாம், ஆசிரியர்கள் தொகுதியில் இருந்து வருகிறவர்கள் ஆசிரியராகத்தான் இருக்க வேண்டும், ஆசிரியர் தொகுதி வாக்காளராக உரிமை பெற்றிருக்

கிற ஒருவர்தான் அதன் பிரதிநிதியாக வரவேண்டுமென்று வேண்டுமானால் கூறலாம். இதில் ஏற்படுகிற சங்கடம் என்னவென்றால் ஆசிரியர் தொகுதியாக இருந்தாலும் ஆசிரியராக அல்லாத ஒருவர் அந்த ஆசிரியர் தொகுதி வாக்காளர்களிடமிருந்து வாக்குகளைப் பெறறு அத் தொகுதி இடத்தில் வந்து அமரலாம் என்பதால் அரசியல் தலைவர்கள் கூட ஆசிரியராக இல்லாமல் இருந்தாலும், அத்துறையில் அவர்களுக்கு சம்பந்தம் இல்லாமல் இருந்தாலும் கூட அவர்களின் வாக்குகளைப் பெற்று ஆசிரியர் பிரதிநிதியாக வருவதற்கு வாய்ப்பிருக்கிறது என்று சொல்லும்போது அந்தத் தொகுதியில் வாக்காளராக இருப்பவர்கள்தான், அத்துறையில் இருப்பவர்கள்தான் ஆசிரியர் பிரதிநிதியாக அமைய வேண்டும் என்ற கட்டுப்பாட்டைக் கூட நாம் ஏற்படுத்தலாம், சாதாரண பட்டதாரிகள் தொகுதிகள் இருக்கின்றன. பட்டம் பெற்றவர்கள் அத்தனை பேர்களும் அந்தத் தொகுதி வாக்காளர்களாக அமைந்து விடுவதில்லை. யார் தங்களை அத்தொகுதி வாக்காளராக பதிவு செய்து கொள்கிறார்களோ அவர்கள்தான் வாக்களிக்கலாமே தவிர மற்றவர்கள் வாக்களிக்க முடியாது. இந்த மாநிலத்தில் பத்தாயிரக்கணக்கான பட்டதாரிகள் இருந்தாலும் வாக்காளர்களாக பதிவு செய்து கொண்டவர்கள் ஒரு சில ஆயிரம் பேர்களே இருக்கிறார்கள். அவர்கள் தான் இந்த பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள். அந்தப் பிரதிநிதி ஒரு பட்டதாரியாக இருக்க வேண்டும் என்றும் வைத்திருக்கிறோம். அதேபோன்று ஆசிரியர் தொகுதியைச் சேர்ந்தவர்கள் தங்களை வாக்காளர்களாக பதிவு செய்து கொள்ளவேண்டுமென்ற நிலையை வைத்து அவர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற பிரதிநிதி ஒரு ஆசிரியராக இருக்கவேண்டுமென்ற ஒரு நிலையை ஏற்படுத்தினால் அவர்களின் கருத்துக்களை நாம் பெற முடியும். மேல் அவை நிகழ்ச்சிக் குறிப்பேடுகளைப் பார்த்தால் ஆசிரியர்களுடைய பிரச்னைகள் வரும்போதெல்லாம் அப்பிரதிநிதிகள் ஆசிரியர்களுடைய நிலையை நன்கு விளக்கமாகவும், தெளிவாகவும் எடுத்துரைத்திருப்பதைக் காண முடிகிறது. அதேபோன்று தொழிலாளர்கள் தொகுதி என்று ஒரு தொகுதி நிர்ணயித்து பதிவு செய்து கொண்டிருக்கும் தொழிலாளர்கள் தங்கள் பிரதிநிதி ஒருவரைத் தேர்ந்தெடுத்து அனுப்பவேண்டும், அப்பிரதிநிதி ஒரு தொழிலாளராக இருக்க வேண்டும் என்று வைத்து அவர்களுக்கும் ஒரு இடம் ஒதுக்கி வைத்தால் நல்லது. வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு என்று ஒரு தொகுதி நிர்ணயித்து இன்னின்ன தகுதி பெற்றவர்கள்தான் அத்தொகுதி வாக்காளர்களாக பதிவு செய்து கொள்ளலாம் என்று வைத்து அத்தொகுதியில் இருந்து ஒருவரை மேல் அவைக்கு அனுப்பலாம் என்ற நிலையை ஏற்படுத்தினால் மிகவும் நல்லதுதான். அப்படிப் பட்டவர்கள் வருகிற நிலையில் சீரிய கருத்துக்களை எடுத்துச் சொல்ல வாய்ப்பு வசதி ஏற்பட முடியும். ஆக, மேல் அவையில் ஆசிரியர்களுக்கு ஒரு இடம், வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு ஒரு இடம், தொழிலாளர்களுக்கு ஒரு இடம் என்று





வைத்தால் ஒவ்வொரு துறையில் உள்ளவர்களும் தங்களுக்கும் ஒரு பிரதிநிதி வேண்டுமென்று கேட்பார்களோ என்று முதல் அமைச்சர் அவர்கள் சொல்லலாம். இவர்கள் தேவை என்று அத்தனை பேர்களும் உணருகிறார்கள். ஒருவர் குறிப்பிட்டார், எதிர்காலத்தில் போலீசார் தங்கள் பிரதிநிதி வேண்டுமென்று கேட்பார்கள் என்று. மற்ற துறைகளில் அப்படி கேட்பார்களே என்ற நிலை ஏற்பட வழியில்லை. அவர்கள் தேர்தலில் நிற்கக் கூடாது என்று சட்டதிட்டங்கள் இருப்பதால் அரசாங்க அலுவலில் ஈடுபட்டிருக்கிறவர்கள் தேர்தலில் ஈடுபட, அவர்கள் எந்தத் தொகுதியிலும் நிற்க வாய்ப்பில்லை. பல துறைகளைப் பற்றிய பல சட்டங்கள் வருகின்றன. அவர்கள் கட்சி அரசியலில் ஈடுபடக் கூடாது என்று சொல்வதில் பொருத்தமிருக்கிறது. ஆனால் முதல் அமைச்சர் அவர்கள் தெரிவித்தது போன்று ஆசிரியர்களோ அல்லது மாணவர்களோ அரசியலிலேயே ஈடுபடக்கூடாது என்பது சரியல்ல. அரசியலைத் தெரிந்து கொண்டு எதிர்காலத்தில் அவர்கள் வாழ்க்கையில் இறங்கும்போது அதைப் பயன்படுத்திக் கொள்கிற முறையில் அவர்கள் அரசியலை அறிந்து கொள்ள வேண்டும். அதற்கப்பாற்பட்ட பாலிடிக்ஸ், கட்சி அரசியலில், ஈடுபடுவது தவறு என்றிருந்தாலும் அரசியலைத் தெரிந்து கொள்வது ஏற்ற ஒன்றுதான். ஆசிரியர்கள், தொழிலாளர்கள், வர்த்தகத் துறையில் ஈடுபட்டிருப்பவர்கள் நேரடியாக கட்சியில் ஈடுபட்டு அதில் மாச்சரியங்கள், சண்டை சச்சரவுகளில் ஈடுபடுகிற அளவிற்கு ஈடுபடாவிட்டாலும் அரசியலில் அவர்கள் ஈடுபடத்தான் வேண்டும். அவர்களைப் பற்றி பல சட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. அவைகள் அவர்களைப் பாதிக்கின்றனவா அல்லது வசதி செய்து தருகின்றனவா என்று அவர்களே ஆராய வாய்ப்பு இருக்குமானால் அது மிக மிக நல்லது. சண்டை சச்சரவுகள் ஏற்படுகின்றன என்றால் நாம் இப்போது ஜனநாயகத்தின் முதல் கட்டத்தில்தான் நிற்கிறோம். நம் நாட்டில் ஜனநாயக முறை மெல்ல மெல்ல வளர வேண்டியிருக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாகத்தான் குறைபாடுகளை நாம் நீக்கிக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். சாதாரணமாக ஒரு கூட்டுறவு சங்கத்தில் டைரக்டர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டு வரவேண்டுமென்றால் மாச்சரியங்கள் வந்துவிடுகின்றன, கட்சி அரசியல்கள் வந்து விடுகின்றன. கல்லூரிகளில் செயற்குழுவில் இயக்குனராக வர வேண்டுமென்றால் போட்டி ஏற்பட்டு கட்சி அரசியல் எல்லாம் வந்து விடுகின்றன. கட்சிகளை மறந்து அதற்கு அப்பாற்பட்ட நிலையில் செயல்புரியக் கூடிய நிலை வருவதற்கு சில பல ஆண்டுகளாகும். ஆகவே அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சி இப்படிப்பட்ட வாய்ப்புக்களை கொடுக்காவிட்டால் ஜனநாயகம் எதிர்காலத்தில் நல்ல முறையில் உருவாக வழியில்லை. கோவில் நிர்வாகத்திற்காக நான்கு பேர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றாலும், கூட்டுறவு சங்கங்களுக்கு தேர்ந்தெடுக்க வேண்டுமென்றாலும், கல்வித்துறை நிர்வாகத்திற்கு நிர்வாகிகளை தேர்ந்தெடுக்க வேண்மென்றாலும் மாச்சரியங்கள் ஏற்பட்டு விடுகின்றன, ஊராட்சி மன்றத் தேர்தலில், ஊராட்சி மன்ற ஒன்றிப்புத்

தேர்தலில், நகராட்சி மன்றத் தேர்தலில் கட்சி அரசியலே அவசியமில்லை. கட்சி அடிப்படையில் இந்த மன்றங்கள் அமையவில்லை. எல்லோரும் சேர்ந்து பணியாற்றும் களமாக அவை விளங்குகிற பண்பாடு ஆங்காங்கு மலர்ந்து வருகிறது. ஆகவே, அரசியலில் ஈடுபடுகிற காரணத்தை வைத்துக் கொண்டு இதை நிறுத்தி விடுவது அவ்வளவு நல்லதல்ல. ஆசிரியர்கள் கட்சி அரசியலில் வேண்டுமானால் பங்கு கொள்ளாமல் பார்த்துக் கொள்ளலாம். ஆகவே, துவக்கப் பள்ளி உயர்நிலைப் பள்ளி இவை இரண்டும் ஒரு அமைப்பின் கீழ் இருப்பதால் அவர்கள் ஒரு பிரதிநிதியை அனுப்பினால் அவர்கள் பிரச்னையில் அவர்கள் மிக்க கவனமாக இருக்க முடியும். அவர்களின் பல்வேறு பிரச்னைகள், பல்வேறு முறைகளில் ஏற்பட்டிருக்கின்றன. அதை முழுவதும் கேட்டுக் கொண்டாலும், பல்வேறு உத்தரவுகள் அவ்வப்போது பிறப்பிக்கப்படுகின்றதால் அவற்றிலுள்ள குறைபாடுகள் என்ன, அவற்றில் உள்ள தகராறுகள் என்ன என்பதை அவர்கள்தான் சரியாக உணர முடியும். ஆகவே அவர்களுக்கு என்று ஒரு பிரதிநிதி இருப்பாரேயானால் அவர்கள் பிரச்னைகளைக் குறித்து தெளிவாக எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. நான் அறிகிறேன், ஆசிரியர் தொகுதியை நீக்கி விட்டு பட்டதாரிகள் தொகுதியோடு சேர்த்து விடலாம் என்ற அபிப்பிராயம் இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே இப்போதிருப்பதை நீக்கி விட்டு அதனுடன் சேர்க்காமல் இருப்பதை வைத்துக் கொள்ள வேண்டும். எனவே இந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டு இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதின் மூலமாக, எதிர்காலத்தில் ஜனநாயகத்தை இன்னும் மேலும் காப்பாற்றுவதற்கு முடியும், மேல்சபையில் தங்களுடைய கருத்துக்களை, பல்வேறு தரப்பட்டவர்கள் விரிவாக சொல்வதற்குள்ள வாய்ப்பு ஏற்படும் என்பதை எடுத்துக் கூறி, இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு வேண்டிய நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும் என்று கனம் முதலமைச்சர் அவர்களை வேண்டிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் தீர்மானத்தின் மொழிபெயர்ப்பு பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். மேல்சபை என்பதற்கு எந்தச் சொல்லை சரியான சொல்லாக வைக்கலாம் என்பது ஒரு பிரச்னையாக இருந்து வருகிறது. இரண்டு மன்றங்கள் இருக்கின்றன. இதற்கு என்ன சொற்களை பயன்படுத்தலாம் என்பதைப் பற்றி உறுப்பினர்கள் கருத்தைத் தெரிவித்தால் ஏற்றுக்கொள்ளலாம். மேல் சபை, கீழ் சபை என்று சொல்வது நல்லதாக இல்லை. இதைச் சட்டமன்றம் என்று சொல்கிறோம். அப்படி வரும்போது அந்த மன்றத்தை எப்படிச் சொல்வது என்று தெரியவில்லை. சாதாரணமாக இதைச் சட்டசபை என்றும் மேல் சபையை சட்டமன்றம் என்றும் சொல்ல முன்னால் ஏற்பாடாகியிருந்தது.





**கனம் சபாநாயகர் :** 'Glossary of Technical Terms peculiar to the Legislature Department' என்ற புத்தகத்தில் அப்படித்தான் இருக்கிறது . . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதை மாற்றலாம், இப்படி பல சொற்களை மாற்றவேண்டியிருக்கிறது. கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், இந்த மன்றத்தில் இருக்கின்ற அறிஞர்கள், புலவர் பெருமக்கள் இவர்கள் எல்லாம் இந்தச் சபைகளுக்கு என்னென்ன வார்த்தைகள் வைக்கலாம் என்று யோசனை சொன்னால் அந்த யோசனையை ஆராய்ந்து முடிவு எடுப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன். இன்னும் மக்கள் சபை இருக்கிறது. அதையும் நாம் பாராளு மன்றம் என்று சொல்லுகிறோம். பார்லிமெண்ட் என்பதற்கு சரியான டிரான்ஸ்லேஷனாக பாராளு மன்றம் என்று போடப்பட்டிருக்கிறது. பாரை ஆளுவது பாராளு மன்றம், பார் என்று சொல்லும்போது உலகத்தை எல்லாம் சேர்த்து அல்ல, பாரதத்தை ஆளுகின்றது, பாரை ஆளவில்லை. இப்படியெல்லாம் 'ரூட்'-க்குள் போய் பார்ப்பது சரியல்ல. பாராளுமன்றத்தைக் கூட இப்போது நாம் மக்கள்சபை என்று சொல்லுகிறோம். இப்படியே சொல்லிக் கொண்டிருக்கலாம், என்று நினைக்கிறேன். இதில் என்னுடைய யோசனை என்னவென்றால், இந்த மன்றத்திற்கு சட்டப் பேரவை என்று வைத்துவிட்டு, மேல்சபைக்கு சட்டமன்றம் என்று வைக்கலாம் என்று நினைக்கிறேன். இருந்தாலும் எதிர்கட்சி உறுப்பினர்கள், மற்றவர்கள் சொல்லுகின்ற யோசனையை நான் ஆராய தயாராக இருக்கிறேன். . .

**திரு. மு. கருணாநிதி :** பாராளுமன்றத்தை நாம் மக்கள் சபை என்றே வைத்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். அப்படி சொல்லும்போது, அவர்கள் மட்டும் தான் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், மற்றவர்கள் அப்படியல்ல என்று வேறுபடுத்திக் காட்டுவது போல் ஆகிவிடும். . .

**டாக்டர் பா. நடராஜன் :** மக்கள் பேரவை என்று வைக்கலாம்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதைப்பற்றி பின்னால் யோசிக்கலாம். இப்போது இந்தத் தீர்மானத்திற்கு வருவோம். அதாவது ஆரம்ப ஆசிரியர்களுக்கு மேல்சபையில் தனியாக ஒரு தொகுதி அமைக்கவேண்டும் என்பது தான் இந்தத் தீர்மானம். இதே சபையில் முன்பு தொழிலாளர்களுக்கு என்று தனியாக பிரதிநிதித்துவம் இருந்தது. அதற்கு முன் வர்த்தகக் குழுவுக்கு என்று தனியாக பிரதிநிதித்துவம் இருந்தது. தொழிலாளர்கள் என்பதில் ரயில்வேத் தொழிலாளர்களுக்கென்று தனியாக பிரதிநிதித்துவம் இருந்தது. அதற்குப் பிறகு ரயில்வே அரசாங்க ஸ்தாபனமாக ஆகிவிட்டது, அப்போது பிரதிநிதித்துவம் இருக்கலாமா என்கிற பிரச்னை வந்தது. அவர்கள் அரசாங்க ஊழியர்களாக இருக்கிறார்களே அவர்கள் எப்படி சட்டமன்ற தேர்தலில் நிற்பது என்கிற பிரச்னை வந்தது. அதற்கு விலக்காகவும் கொஞ்ச நாள் இருந்து

வந்தது. பின்னால் நாம் அரசியல் அமைப்புச் சட்டத்தை செய்த போது இந்த சபையில் தனியாக தொகுதிகள் இருக்கவேண்டாம் என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் இப்போதும் மேல்சபைக்கு சில தொகுதிகள் இருக்கின்றன. ஆசிரியர்களுக்கென்று ஒரு தொகுதியிருக்கிறது. அதற்கான தேர்தல் இப்போதும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதில் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் வரலாம் என்று அமைக்கப்பட்டிருக்கிறது. கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது போல, இந்தத் தொகுதியில் ஆசிரியர்கள் அல்லாதாரும் வருவதற்குரிய வாய்ப்பு இருக்கிறது. பட்டதாரிகளுக்கு என்று தனியாக தொகுதியிருக்கிறது, அதே போன்று ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் இருக்கிறது. மேலும், அந்த மன்றம் அதாவது மேல்சபை வேண்டுமா, வேண்டாமா என்கின்ற பிரச்னையையும் இங்கே சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். என்னைப்பொறுத்த மட்டில், இந்த அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில், மத்திய அரசாங்கத்தைக்கூட சேர்த்துச் சொல்லலாம் என்று நினைக்கிறேன், எங்களைப் பொறுத்தவரையில் இந்த சபைக்கு இடமிருக்கிறது. அந்த சபை இருப்பது நல்லது, மிக நல்ல கருத்துக்களைச் சொல்லக்கூடியவர்கள் இந்த மன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டு வர முடியவில்லை என்றாலும் அந்த மன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டு வந்து நல்ல கருத்துக்களை சொல்ல முடியும். ஆகவே மேல்சபை இருப்பது நல்லது என்ற கருத்து உறுதியாக இருக்கிறது. அதில் இப்போது சிறிதும் மாறுதல் இல்லை. இரண்டாவது, பட்டதாரிகள் தொகுதி தனியாக இருக்கிறது. அதை யொட்டி பட்டதாரிகள் வரலாம் என்றிருக்கும் போது, அதில் ஆசிரியர்களாக இருப்பவர்கள் வரலாம். உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் என்று சொல்லும்போது, ஆசிரியர்களாக இருக்கின்ற பட்டதாரிகள் வருவதற்கான சந்தர்ப்பம் இருக்கிறது, அப்படியிருக்கும்போது, இது போன்ற ஆசிரியர்கள் தொகுதி என்று தனியாக இருக்கவேண்டுமா என்கின்ற ஒரு கருத்தும் இருந்து வருகிறது. இப்போது இருந்து கொண்டிருக்கிற கருத்து, 'Thinking' என்று தான் சொல்லவேண்டும், நான் முடிவு என்று சொல்ல மாட்டேன். மத்திய அரசாங்கத்தின் சார்பிலும் மற்ற வழிகளிலும் நடைபெறுகின்ற மகாநாடுகளில் கலந்து கொள்ளுகின்றபோது அங்கே தெரிவிக்கப்படுகின்ற கருத்துக்களை பார்த்தால், ஆசிரியர்கள் தொகுதி என்று தனியாக இருக்க வேண்டிய அவசியமில்லை, அதை எடுத்துவிடலாம் என்றுதான் கருத்து தெரிவிக்கின்றார்கள். யார் தெரிவிக்கின்றார்கள் என்பதை சொல்லாவிட்டாலும் ஏகோபித்த கருத்து இவ்விதமாகத்தான் இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். ஆசிரியர்களுக்கு என்று தனியாக தொகுதி வேண்டாம், அவ்விதம் இருக்கக்கூடாது அதை எடுத்துவிடலாம் என்று பலரும் நினைக்கிறார்கள். இவ்விதம் ஏன் நினைக்கிறார்கள் என்றால் ஆசிரியர்களை அரசியலில் சிக்க வைக்கக்கூடாது என்பதுதான் கருத்தாக இருந்து வருகிறது. அவர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது என்பது உண்மைதான். ஆனால் சட்டமன்ற தேர்தல் என்று வந்துவிட்டால், அவர்கள் போய் அரசியலில் சிக்கிக்கொள்கிறார்கள், அல்லது அரசியலில்



அவர்கள் சிக்கி வைக்கப்படுகிறார்கள். அவர்கள் தங்களை அறியாமலேயே அரசியலில் சிக்கிக்கொள்கிறார்கள். அது கூடாது என்பது தான் கருத்து. அரசியலில் புகுந்துதான் வரவேண்டும் என்றிருந்தால் செல்வராஜ் அவர்களைப் போன்று, சட்டமன்றத்திற்கான தேர்தலில் நின்று வெற்றிபெற்று இங்கு வந்து பல அரிய கருத்துக்களை சொல்லவேண்டும். அவ்விதம் நான் கனம் உறுப்பினர் செல்வராஜ் அவர்கள் வந்தார்கள், அவர்கள் ஆசிரியராக இருந்தவர். அவர்கள் தேர்தலில் நின்று இங்கே வந்து சட்டமன்ற அங்கத்தினராக பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆசிரியராக இருந்த அந்த அனுபவத்தோடு கருத்துக்களை இங்கே வழங்க முடியும். செல்வராஜ் அவர்கள் வழங்குவது போல் வழங்கலாம். ஆசிரியராக தொண்டு புரிவது வேறு. அதில் அரசியலைப் புகுத்தக் கூடாது என்பதுதான் இப்போதுள்ள பலமான கருத்து. ஆசிரியர்களுக்கென்று எத்தனையோ பிரச்னைகள் இருக்கலாம். அதைப்பற்றி சொல்வதற்காக நான்கு பேர்கள் இங்கு வரவேண்டுமென்றால் நிச்சயமாக அவர்கள் சில அரசியல் கட்சிகளின் ஆதரவை தேடவேண்டியிருக்கிறது. யாரைப் போய் சேர்ந்து கொள்வது, என்பதையெல்லாம் பார்த்தாக வேண்டியிருக்கிறது. இது தவிர்க்க முடியாது. யாரைப் பிடித்தால் காரியம் நடக்கும், யாரோடு போய் ஒப்பந்தம் செய்து கொள்வது, யாரோடு சேர்ந்தால் நன்மை கிடைக்கும், யாரை ஆதரித்துப் பேசவேண்டும், யாரை எதிர்த்துப் பேச வேண்டும் என்கின்ற பிரச்னைகள் எல்லாம் வருகின்றன. அப்படியே மேல்சபையில் நான்கு பேர்கள் வந்து ஆசிரியர்களினுடைய பிரச்னைகளைப் பற்றி கருத்துத் தெரிவித்தால் மட்டும் போதாது, கருத்து தெரிவித்து அது பத்திரிகைகளில் வந்து விட்டால் மட்டும் திருப்தி அடைந்துவிட முடியாது. அதை நிறைவேற்ற வேண்டும். அதற்கு மற்ற அங்கத்தினர்களுடைய ஆதரவைப் பெறவேண்டும், அங்கத்தினர்கள் என்று வந்தால், கட்சியை பிடிக்கவேண்டும். அப்படி வரும்போது, எந்த கட்சியை ஆதரிப்பது, எந்த கட்சியை வெறுப்பது, எப்படி ஆதரித்துப் பேசுவது, எப்படி எதிர்த்துப் பேசுவது என்பதிலும் ஈடுபட வேண்டும். அது இந்த மன்றத்தில் மட்டும் போதாது, வெளியிலும் இருக்கவேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்கள் மட்டும் இவ்விதம் செய்தால் போதாது, மற்ற ஆசிரியர்களும் அது போல் செய்ய வேண்டும். இப்படி வந்து விட்டால் ஆசிரியத் தொண்டு எங்கேயிருக்கும்? படிப்பு எங்கே போகும் ? இவ்விதம் ஆசிரியத் தொண்டு பாதிக்கப்படுகிறது. வேண்டுமென்றால் பட்டதாரிகள் தொகுதி (க்ராஜுவேட்ஸ் கான்ஸ்டிட்யுவன்ஸி) யிலிருந்து இவர்கள் வரட்டும், அப்படி வருவது ஒன்று இப்போது செக்கண்டரி கல்வி ஆசிரியர்களுக்கு என்று தனியாக பிரதிநிதிகள் வருவதற்கு வாய்ப்பு இருப்பது ஒன்று. இப்போது புலவர் கோவிந்தன் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானம், ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்கு தனியாக மேல்சபையில் பிரதிநிதித்துவம் அளிக்கவேண்டும் என்ற வகையில், அதற்கு அரசியல் அமைப்புச் சட்டத்தையே மாற்றவேண்டும் என்பது. ஒன்றை எதிர்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள், சர்க்கார்

உத்யோகஸ்தர்களாக இருந்தால், சர்க்கார் சம்பளம் வாங்கக் கூடியவர்களாக இருந்தால் இம்மாதிரி தேர்தலில் நின்று வர முடியாது. போலீஸ்காரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வர முடியாது, உண்மை தான். ஆனால் டாக்டர்கள் எத்தனையோ பேர்கள் சர்க்கார் சம்பளம் வாங்காமல் இருக்கிறார்கள், அவர்கள் தங்களுக்கு தனியாக தொகுதி வேண்டும் என்று கேட்கலாம். என்ஜினியர்கள் கேட்கலாம். தனிப்பட்ட என்ஜினியர்கள் இருக்கிறார்கள். தனிப்பட்ட டாக்டர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். எங்கள் நிலைமை யாரும் உணர்ந்து பேசுவதில்லை, ஆகவே எங்களுக்கு வேண்டுமென்று கேட்கலாம். வழக்கறிஞர்கள் கூடக் கேட்கலாம். திருமதி அனந்தநாயகி அவர்களும், திரு. மாதவன் அவர்களும் மற்றவர்களும் வந்திருக்கிறார்கள் என்றால் வழக்கறிஞர்கள் என்ற ஹோதாவில் வரவில்லை. அந்த நிலையில் வழக்கறிஞர்கள் பிரதிநிதித்துவம் வேண்டுமென்று கேட்கலாம். அப்படியே கேட்டுக்கொண்டுபோனால் அது எங்கே போய் முடியும் என்பது ஒன்று.

ஆசிரியர்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்றால் தனிப்பட்ட உயர்நிலைப் பள்ளிகள் நிறைய இருக்கின்றன. அந்தப் பள்ளி ஆசிரியர்கள்தான் இப்போது தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆனால், ஆரம்பப் பள்ளிகளைப் பொறுத்த வரையில் அப்படி அல்ல. பெரும்பாலும் அவைகள் ஸ்தல ஸ்தாபனங்கள் நடத்தும் பள்ளிகளாக இருக்கின்றன, அரசாங்கம் நடத்தும் பள்ளிகளாக இருக்கின்றன. சர்க்கார் நடத்தும் பள்ளிகள் என்றால், சர்க்கார் பள்ளிகள் என்றால் மட்டும், மற்றவைகள் உயர்ந்தவையா என்றால் அப்படி ஒன்றும் கிடையாது. ஆனால் சர்க்கார் பள்ளி ஆசிரியர்கள் நின்று வர வழியில்லை என்று நினைக்கிறேன். அப்படிப் பார்க்கும் போது ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் பெரும்பாலும் அவர்கள் அரசாங்க ஊழியர்களாகக் கருதப் படுகிறார்கள். இன்றைக்கு ஆரம்பப் பள்ளிகளை எடுத்துக் கொண்டால் அவைகள் பெரும்பாலும் ஸ்தல ஸ்தாபனப் பள்ளிகளாக இருக்கின்றன. ஆகவேதான் அவைகள் அரசாங்கப் பள்ளிகளாகக் கருதப்படுகின்றன. சர்க்கார் சம்பளம் கொடுப்பதால் அரசாங்கப் பள்ளி என்பதல்ல, உயர்நிலைப் பள்ளிகளிலும்தான் சர்க்காரினால் சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஸ்தல ஸ்தாபனப் பள்ளிகளை ஒதுக்கி, தனிப்பட்டவர்கள் நடத்துகிற பள்ளிகளில் இருக்கிற ஆசிரியர்களுக்குத்தான் உரிமை என்று சொன்னால் அது நியாயமாக இருக்காது.

மேலும், இப்போது நடைபெற்று வருகிற முறையிலே உயர்நிலை பள்ளி ஆசிரியர்கள் பிரதிநிதிகளெல்லாம் சிறந்த பிரதிநிதிகளாக அந்த மன்றத்தில் அங்கம் வகிக்கிறார்கள். அவர்கள் ஆசிரியர்களைப் பற்றியே பேசுகிறார்கள். பெரும்பாலும் ஆசிரியர்களை பற்றித் தான் பேசுகிறார்கள். அவர்கள் ஆரம்ப ஆசிரியர்களைப் புறக்கணித்து விட்டுத் தங்கள் இனத்தைச் சேர்ந்தவர்களைப் பற்றி மட்டும், தங்கள் வர்த்தகத்தைச் சேர்ந்தவர்களைப் பற்றி





மட்டுமா பேசுகிறார்கள்? அந்த மன்றத்தில் எத்தனையோ கேள்விகள் வருகின்றன, நான் விடையளிக்கிறேன். ஆரம்ப ஆசிரியர்களைப் பற்றித்தான் அவர்கள் அதிகமாகப் பேசுகிறார்கள். இப்போது இந்த ஆசிரியர்கள் பிரதிநிதிகள் இருக்கிற வரையில் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் ஒன்றும் கவலைப்பட வேண்டியதில்லை. தங்கள் பிரச்னை எடுத்துச் சொல்லப்படுகிறதா, கவனிக்கப்படுகிறதா என்று கவலைப்பட வேண்டியதில்லை. ஒருக்கால் இப்போது இருக்கிற ஆசிரியர்கள் தொகுதியே எடுக்கப்பட்டால்கூட ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களோ உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களோ சிறிதும் கவலைப்பட வேண்டியதில்லை. அவர்களுடைய ஓட்டைக் கொடுத்து பிரதிநிதிகளாக வந்தவர்கள் தான் தங்களுடைய நலனை கவனிப்பார்கள், இல்லையென்றால் கவனிக்கப்படமாட்டாது என்பது அல்ல. ஆசிரியர்கள் பணி முக்கியமானது. அவர்கள் இளம் சிறார்களைத் தயாரிப்பவர்கள், அவர்கள் தொண்டு புனிதமான தொண்டு என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் நல்வாழ்வில் கவனம் செலுத்திக்கொண்டுதான் வருகிறோம். மற்ற மாநிலங்களில் ஆசிரியர்கள் பற்றி பிரச்னை வரும்போது தமிழ்நாடு அரசாங்கம் என்னென்ன வசதிகள் செய்திருக்கிறதோ அவைகளை மற்றவர்கள் செய்யவில்லையே என்று கூறுகிறார்கள். நம் தமிழ்நாட்டில் தான் ஸ்தல ஸ்தாபன ஆசிரியர்கள், தனிப்பட்ட ஆசிரியர்கள், அரசாங்க ஆசிரியர்கள் என்ற பாகுபாடு இல்லாமல் எல்லா வசதிகளும் எல்லோருக்கும் கொடுக்கப்படுகின்றன. சர்க்கார் ஊழியர்களுக்குக் கொடுக்கப்படுகிற அளவுக்கு அவர்களுக்கு பஞ்சப்படியெல்லாம் கொடுக்கப்படுகிறது. பென்ஷன் திட்டமோ மற்றதோ எல்லா வற்றையும் பாகுபாடு இல்லாமல் கொடுக்கிறோம். இதைப் பற்றி விவாதித்தபோது ஒரு மாநிலம், ‘சென்னை அரசாங்கத்திற்கு இருக்கிற வசதி எங்களுக்கு இல்லையே’ என்று சொன்னார்கள். நான் அப்போது திரும்பிப் பார்த்து ‘உங்கள் நகரம் உயர்ந்த நகரமாக இருக்கிறது, நீங்கள் அப்படிச் சொல்லக்கூடாது’ என்று சொன்னேன்.

ஆகையால், ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில் வரம்பு வந்து விட்டால் தான், நான்கு பேர்கள் பிரதிநிதிகள் என்று இருந்தால் தான் பாதகம் ஏற்படும். அவர்கள் சொன்னால்தான் உண்டு என்ற நிலை ஏற்படும். மற்றவர்களுக்கு ‘நாம் ஏன் சொல்லவேண்டும், ஓட்டு வாங்கியவர்கள் சொல்லுகிறார்கள்’ என்று ஏற்பட்டு விடும். ஜனநாயகத்தில் ஓட்டு வாங்குவதிலே பாகுபாடே இருக்கக் கூடாது. இந்த ஓட்டு வாங்கியவர், அந்த ஓட்டு வாங்கியவர் என்ற பாகுபாடு இருக்கக் கூடாது. நாட்டு நலனைப் பெருக்க மக்கள் நலனைப் பெருக்க கவனம் செலுத்திக்கொண்டு வருகிறோம். எந்தப் பிரதிநிதியும், நான் திடமாகக் குறிப்பிடுகிறேன். இந்த மன்றத்தில் இருக்கிற எந்த உறுப்பினரும் ஆசிரியர்களை அலட்சியம் செய்யமாட்டார்கள். அவர்கள் நலனில் அக்கறைகொள்ள வேண்டும் என்ற எண்ணம் ஒவ்வொரு உறுப்பினர் இடத்திலேயும் முதல் இடம் பெற்றிருக்கிறது என்று நான் உறுதியாகக் கூறுவேன். ஆகவே, ஆசிரியர்கள் யாரும் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்

[திரு. எம். பக்தவத்சலம்] [5th August 1965

கொள்ளவில்லை என்று கவலைப்படவேண்டாம். அவர்களுடைய நலன்கள் அரசாங்கத்தினாலே கவனிக்கப்படும், இந்த மன்றத்தினாலும் கவனிக்கப்படும்.

இப்போது அரசியலமைப்புச் சட்டத்தையே மாற்றி உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு இருக்கிறதை ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு மாற்றுவது சரியல்ல என்பது இந்த அரசாங்கத்தின் கருத்து. அதுவும் ஆசிரியர்கள் தொகுதியே வேண்டுமா, வேண்டாமா என்று சிந்தித்துக்கொண்டிருக்கும்போது, இந்த மன்றத்தின் சார்பாக ஆரம்ப ஆசிரியர்களுக்குத் தனியாகத் தொகுதி வைத்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னால் இப்போது இருக்கிற ஆசிரியர்கள் பிரதிநிதிகள் மீது நம்பிக்கை இல்லை என்ற நிலை ஏற்படும். அவர்கள் தங்கள் நலனைத்தான் கவனித்துக்கொள்கிறார்கள், மற்றவர்கள் நலனை கவனிப்பதில்லை என்ற நிலை ஏற்படும். அவர்கள் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் நலனில் மிகவும் அக்கறை கொண்டவர்களாக இருக்கிறார்கள்.

ஆகவே, இந்தத் தீர்மானத்தை வற்புறுத்தவேண்டாமென்று கேட்டுக்கொண்டு, அப்படி இதை வற்புறுத்தினால் இதை எதிர்க்க வேண்டியிருக்கும் என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

**புலவர் கா. கோவிந்தன்:** கனம் சபாநாயகர் அவர்களே, ஆசிரியர்களுக்கு மேலவையில் இடம் தரவேண்டும், அதிலும் ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்கு இடம் தரவேண்டும் என்று கொண்டு வந்த தீர்மானத்தின் மீது மன்றத்திலே கருத்துக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதை எதிர்த்த அங்கத்தினர்கள் சில காரணங்களைக் காட்டியிருக்கிறார்கள். அந்தக் காரணங்கள் எவ்வளவு பொருத்தம் அற்ற காரணங்கள் என்பதைப் பற்றி மட்டும் கூறி என்னுடைய தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறேன்.

உள்நோக்கம் கற்பிக்க, உண்மையில் ஆசிரியர்களுக்காகப் பாடுபடுவதற்காக அல்ல—நாங்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தாராகிய நாங்கள் ஆசிரியர்களுக்காக வாதாடினோம். ஆளும் கட்சியில் இருக்கிற காங்கிரஸ்காரர்கள் மறுத்து விட்டார்கள் என்று தேர்தலில் தங்களுக்கு ஒரு நிலையை உண்டாக்கிக்கொள்ளக் கொண்டு வந்ததே யொழிய வேறு அல்ல என்று ஒரு காரணம் கூறப்பட்டது. உண்மையிலேயே அந்தக் காரணம் அல்ல. அப்படியே அது உள் நோக்கமாக இருந்தால், அந்த உள்நோக்கத்தைப் பயனற்றதாக ஆக்க, நீங்கள் தீர்மானம் கொண்டு வந்தீர்கள், நாங்கள் அதை ஆதரித்து விட்டோம் என்ற முறையில் அதை ஆதரித்து விட்டு, தேர்தல் அளவில் யாருக்கும் அதனால் பலன் இல்லை என்ற நிலையை உண்டாக்கி இருக்கலாம் என்று கூறிக் கொள்கிறேன்.

அரசியல் புகுந்துவிடும் என்று சொன்னார்கள். அரசியல் புகுந்துவிடும் என்று சொல்லுகிற நேரத்தில் நான் இங்கே பணிவோடு கனம் முதல் அமைச்சருக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்வேன். அது ஒரு காரணம்தான் இதை மறுப்பதற்கு என்றால்,



5th August 1965] [புலவர் கா. கோவிந்தன்]

மேலவையிலே இருக்கிற அத்தனை பேர்களும் தேர்தல் முறையில் வந்தவர்கள் அல்ல, ஒரு சிலருடைய அறிவு தேவை என்ற காரணத்திற்காக நியமன முறையை வைத்திருக்கிறோம், அந்த முறையில் நியமனம் செய்வது என்ற நிலையை கனம் முதல் அமைச்சரும் அரசாங்கமும் ஏற்றுக்கொள்வதாக இருந்தால் காலப் பொருத்தமாக இருக்கும். தேர்தல் என்று சொல்லுகிற நேரத்தில் ஆளும் கட்சியில் இருக்கிறவர்களுக்கு ஒரு அச்சம். ஆசிரியர்கள் நல்லது, தீயது என்று அறிந்துகொள்ளக்கூடிய நிலையில் இருப்பதால் பணத்திற்கோ இனத்திற்கோ அடிமையாகாமல், தேர்தல் நேரத்தில் எந்த இயக்கத்தின் போக்கு நல்ல போக்கு என்று அறிந்து வாக்களிப்பார்கள். அப்படி வாக்களிக்கும் காரணத்தினால். . . .

MR. SPEAKER: It is an aspersion against other voters.

**புலவர் கா. கோவிந்தன்:** அப்படி வாக்களிக்கும் காரணத்தினால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இருக்கிறவர்கள் வெற்றி பெற்று வந்து விடுகிறார்கள். அந்த அச்சம் ஆளும் கட்சியினருக்கு இருக்கிறது. அப்படிப்பட்ட அச்சத்திற்கு இடம் கொடுக்காத வகையில் அவர்களாக நல்ல ஆசிரியர்களாகத் தேர்ந்தெடுத்து, இப்போதுகூட ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து, விருது வழங்குகிறார்கள், பட்டம் வழங்குகிறார்கள், அந்த முறையில் தேர்ந்தெடுப்பதற்கு கல்வி இயக்குனரையும் மற்றவர்களையும் கொண்ட குழு அமைத்திருக்கிறார்கள், அப்படிப் பட்டவர்களை நியமனம் செய்து அப்படிப்பட்ட வாய்ப்புக் கொடுத்தால் அதை மறுக்கவில்லை. தேர்தல் மூலமாகத்தான் வரவேண்டுமென்ற நிலை இல்லை. நியமன முறையில் வருகிற நேரத்தில் ஓரளவுக்கு அரசியல் கண் கொண்டு நம் சார்பாக இருக்கிற ஆசிரியர்கள் யார் என்று அவர்களே பார்த்து வைத்து விடலாம். ஆகவே, இதில் அரசியல் புகுந்து விடும் என்ற அச்சம் தேவையில்லை என்ற கருத்தைக் கூற விரும்புகிறேன். மற்றவர்களுக்கும் இல்லையே, என்.ஜி.ஓ-க்களுக்கு இல்லை, போலீஸ்காரர்களுக்கு இல்லை, ஆகவே இவர்களுக்கு மட்டும் தனித் தொகுதி வேண்டுமா என்று சொல்லுகிற வாதம் நல்ல வாதமாகாது. அவர்களுக்குத் தேவையில்லை என்ற காரணத்திற்காக இது தேவையில்லை என்று சொல்ல முடியாது. அதிலும் திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் அம்மையார் அவர்கள் தங்களுக்கு, பெண்களுக்கு தனித் தொகுதி வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆசிரியர்களில் பெரும் பகுதி இப்பொழுது பெண்களாகத் தான் இருக்கிறார்கள். ஆரம்ப ஆசிரியர்களில் பெரும் பகுதி பெண்களாகத்தான் இருக்கிறார்கள். நமது முதல் அமைச்சர் அவர்களுடைய நோக்கம் ஆரம்ப ஆசிரியர்களாக பெண்களே பணிபுரியவேண்டும் என்பதுதான். அப்படிப்பட்ட ஒரு நிலைமை வந்துவிடுமானால், ஆரம்ப ஆசிரியர்களுடைய சார்பிலே மேலவையில் இடம் பெறுகிறவர்கள் முழுக்க முழுக்க பெண்களாகத்தான் இருப்பார்கள். இந்த நிலையை அவர்கள் எண்ணிப்

பார்க்கவேண்டும். ஆகவே, இந்தக் காரணத்தைக் காட்டி இந்தத் தீர்மானம் தேவையில்லை என்று சொல்லுவது அவ்வளவு பொருத்தமாக இருக்காது.

மற்றும், இங்கு வந்துவிட்டால் அவர்களுடைய வேலை கெட்டுவிடும் என்று சொல்லுகிறார்கள். சாதாரணமாக தமிழகத்தில் இருக்கிற அத்தனை ஆசிரியர்களும் வாக்களித்து அனுப்பினால் இங்கு வரப்போகிற ஆசிரியர் இருவர்தான். இருவர் இங்கு வருவதினால் வேலை கெட்டுவிடும் என்று சொல்லுவது சரியான வாதமா என்பதை அமைச்சர் அவர்கள் சிந்தித்துப்பார்க்க வேண்டும். அதிலும், ஆண்டு முற்றிலும் இங்கே வேலை இருக்கிறதா என்றால், இல்லை. நம்முடைய அவையாவது கொஞ்ச நாட்களுக்கு கூடுதலாக கூடுகிறது. மேலவை நம்மைப்போல் அவ்வளவு நாட்கள் கூட கூடுவதில்லை. ஆகவே, அந்த நிலையில் அவர்களுடைய வேலை கெட்டுவிடும் இங்கு வருகிற காரணத்தினால் என்று சொல்லுவது சரியான வாதம் ஆகாது என்பதை கூறிக்கொள்கிறேன்.

பணிபுரிந்த ஆசிரியர்கள் பலர் இருக்கிறார்கள் இங்கு, அவர்கள் ஆசிரியர்களுடைய சார்பில் குறைகளை எடுத்துச் சொல்லலாம் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. நாங்களும் ஒரு காலத்தில் ஆசிரியர்களாக பணி புரிந்தோம். ஆனால், அன்றைய நிலைக்கும், இப்பொழுது இருக்கிற நிலைக்கும் வேறுபாடு இருக்கிறது. ஆசிரியர் துறையில் புதிய புதிய திட்டங்கள் வருகின்றன, புதிய புதிய அரசாங்க உத்தரவுகள் வருகின்றன. அந்த சிக்கல்களைப் புரிந்து கொண்டு எங்களால் அவர்கள் சார்பில் பணிபுரிய முடியவில்லை. அவர்களுக்கு இப்பொழுது இருக்கிற அனுபவத்தை வைத்துக் கொண்டு, அவர்களுடைய குறைகளை சொல்லிக்கொள்ள வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, ஆசிரியர்களாக பணி புரிந்தவர்கள் பலர் சட்டமன்றத்தில் இருக்கிறார்கள், அவர்கள் இந்த பணியைப் புரியக்கூடும் என்று சொல்லுவதும் பொருத்தமாக இருக்காது.

மேலவையே வேண்டாம் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது. மேலவை வேண்டுமா, வேண்டாமா என்பது பற்றி எங்கள் தலைவர் நாவலர் அவர்களும், நண்பர் திரு. எம். எஸ். மணி அவர்களும் எடுத்துரைத்தார்கள். நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் மேலவை வேண்டும் என்ற கருத்தை அழுத்தமாகச் சொன்னார்கள். அதற்கு நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். ஆசிரியர் தொகுதி தேவையில்லை என்ற ஒரு நிலை இருக்கிறது என்று சொல்லுகிற நேரத்தில், நம்முடைய முதல் அமைச்சர் மிகவும் நடுக்கத்தோடு, அச்சத்தோடு தயக்கத்தோடு சொன்னார்கள். காரணம், அவர்கள் ஆசிரியர் தொகுதி தேவை என்பதை உணர்கிறார்கள். முடிவுகூட இல்லை. 'திங்கிங்' தான், 'திங்கிங்' தான் என்று பல முறை சொன்னார்கள். ஆசிரியர் தொகுதி தேவை என்பதை நன்றாக உணர்ந்த காரணத்தினால், ஆசிரியர் தொகுதி தேவை என்று சொல்லிவிட்ட பிறகு, அங்கே தனியாக இப்படிப்பட்ட பிரதிநிதித்துவம் இருக்கவேண்டும் என்று ஒப்புக்கொண்ட பிறகு, ஆரம்ப ஆசிரியர்களுக்கு தனித்தொகுதி





இருக்க வேண்டும் என்பதை மறுப்பதற்கு நல்ல காரணம் காட்ட முடியாது. அவர்கள் சொன்னார்கள், இப்பொழுது ஆசிரியர்கள் பிரதிநிதியாக இருப்பவர்கள் பெரும்பாலும் ஆரம்ப ஆசிரியர்களைப் பற்றித்தான் பேசுகிறார்கள் என்று சொன்னார்கள். அதை நான் மறுக்கவில்லை. ஆனால், ஆரம்ப ஆசிரியர்களைப் பற்றி, ஆரம்ப ஆசிரியர்களின் நிலையை அந்த அளவுக்கு அவர்கள் கண்டு கேட்பதைவிட, ஆரம்ப ஆசிரியர்களுடைய பிரதிநிதியே நேரிடையாக தங்களுடைய நிலையை அறிந்து, தங்களுடைய கொள்கையை தாங்களே எடுத்துச்சொல்வதற்கு இது ஒரு வாய்ப்பாக இருக்காதா என்பதை கனம் முதல் அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இப்பொழுது இருக்கிற ஆசிரியர்கள், மேலவையிலே இருப்பவர்கள் தனியார் பள்ளிகளிலிருந்து வந்தவர்கள்தான். இப்பொழுது இருக்கிற ஆரம்ப ஆசிரியர்கள் அத்தனை பேர்களும் அரசாங்கப் பள்ளியில் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அப்படியில்லை. இப்பொழுதுகூட தனியார் இடத்தில் ஆரம்பப் பள்ளிகள் இருக்கின்றன. அந்தப் பள்ளிக்கூட ஆசிரியர்களும் வரலாம். அதுகூட தேவையில்லை. இப்படிப்பட்ட பதவிக்கு வரக் கூடியவர்களுக்கு விலக்கு அளிப்பது என்ற முறையில் அரசாங்கம் இடம் கொடுத்தால், அந்த இடர்பாட்டுக்குக்கூட இடம் தராது. ஆக, அமைச்சர் அவர்கள் கூறிய காரணங்களோ, அல்லது ஆளும் கட்சியினர் கூறிய காரணங்களோ சரியானதாக இருக்காது, சரியான காரணங்கள் ஆகாது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அந்தப் பகுதியிலிருந்து நண்பர் திரு. எம். எஸ். செல்வராஜன் அவர்கள் இந்தத் தீர்மானத்தை ஆதரித்தார்கள். இதுதான் முழுக்க ஆளும் கட்சியின் உள்ளத்தை காட்டுகிறது. எதிர்க்கட்சிக் காரர்கள் கொண்டுவந்துவிட்டார்கள், அதை ஏற்றுக்கொள்ளலாமா என்ற முறையில்தான் மற்றவர்கள் இதை மறுத்தார்களே தவிர, அவர்களுடைய உள் நோக்கம் இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவு தரவேண்டும் என்பதுதான். சூரனைப் பணியவேண்டும் என்ற எண்ணம் முருகனுக்கு இருந்தாலும், மானம் தடுத்தது என்ற கருத்து கந்த புராணத்தில் இடம் பெற்றிருக்கிறது.

**கனம் சபாநாயகர் :** முருகனுக்கு அல்ல, சூரனுக்கு என்று சொல்லுங்கள்.

**புலவர் கா. கோவிந்தன் :** முருகனைப் பணியவேண்டும் என்ற எண்ணம் சூரனுக்கு வந்தாலும் மானம் தடுத்த காரணத்தினால் சூரன் பணியவில்லை என்ற கருத்து கூறப்பட்டிருக்கிறது. அது போல், எதிர்க்கட்சிக்காரர் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார் என்ற காரணத்திற்காக இதை மறுப்பதாக இருந்தால், கனம் முதல் அமைச்சர் அவர்கள் 'இந்தத் தீர்மானத்தை கொண்டுவரத் தேவையில்லை, நியமன முறையில் ஆரம்ப ஆசிரியர்களுக்கு மேல் அவையிலே தனித் தொகுதி கொடுக்க நான் வழி

வதை செய்கிறேன்' என்று உறுதிமொழி கொடுத்தால் நான் இந்தத் தீர்மானத்தை வற்புறுத்தவில்லை. அப்படி உறுதி மொழி கூறவில்லை என்றால் நான் இந்தத் தீர்மானத்தை வற்புறுத்துகிறேன் என்று கூறிக்கொண்டு, ஆளும் கட்சியினரும், மற்றவர்களும் இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவு தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நியமனம் செய்வது கவர்னர் அவர்களுடைய பொறுப்பு: அதைப்பற்றி நான் உறுதிமொழி கூறுவது முறையல்ல. ஆனால் அரசாங்கம் கவர்னர் அவர்களுக்கு யார் யார் தகுதி பெற்றவர்கள், யார் யார் இருக்கவேண்டியவர்கள் என்று ஆலோசனை கூறுவது உண்டு. அதிலே முக்கியமாக என்னுடைய கருத்தைச் சொல்லுகிறேன். இந்த ஆசிரியர் தொகுதி இப்பொழுது இருப்பது கூட எடுபட்டுவிடுமோ என்ற நிலையில், ஆசிரியர் ஒருவரை நியமனம் செய்வது நல்லது, அவசியம் என்பது என்னுடைய கருத்து. அதற்கு இயன்ற அளவுக்கு நான் யோசனை கூறுவேன் கவர்னர் அவர்களுக்கு. அப்படி ஒரு ஆசிரியர் சட்டமன்றத்தில் நியமனம் பெறுவார் என்ற நிலையிலே, அவர் அந்த நியமன ஸ்தானத்தில் இருக்கிற நிலையிலே ஆசிரியர் பணியை அவர்கள் நிறுத்திக்கொள்ள வேண்டும், அப்படி நிறுத்திக் கொண்டு சட்டமன்றத்தில் ஆசிரியர்களுடைய பிரதிநிதியாக இருக்கலாம் என்பது என்னுடைய சொந்தக் கருத்து.

MR. SPEAKER : I will now put the resolution of the hon. Member, Sri Pulavar Govindan, to the vote of the House.

The question is—

" This House recommends to the Government to move the Government of India to bring in necessary legislation under Article 171 (2) of the Constitution or amend sub-clause (c) of clause 3 of Article 171 of the Constitution to provide a separate Constituency for elementary school teachers in the Legislative Council ".

The resolution was put and lost.

(3) *Declaration of all the languages mentioned in the Eighth Schedule as National Languages of India.*

* **திரு. து. ப. அழகமுத்து :** கனம் சபாநாயகர் அவர்களே, நான் என்னுடைய தீர்மானத்தை பிரேரேபிக்கிறேன்.

" This House recommends to the Government of India that all the languages referred to in the Eighth Schedule be declared as National Languages of India by suitably amending the Constitution of India. "

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் அவர்கள் ' அமெண்டட் பாரத்தில் ' மூவ் பண்ணியிருக்கிறார்களா ?



**திரு. து. ப. அழகமுத்து:** அமெண்டட் பாரத்தில்தான் படித்தேன்.

MR. SPEAKER : The hon. Member may say : " I move my amendment " since I will have to take the resolution and amendment one by one, at the time of voting.

SRI T. P. ALAGAMUTHU : Sir, I move the following resolution :—

" That this House recommends to the Government of India that all the languages referred to in the Eighth Schedule be declared as National Languages of India by a suitable amendment to Article 351 of the Constitution '.

The resolution was duly seconded.

SRI T. P. ALAGAMUTHU : Sir I move the following amendment—

' In item (3) included in the Agenda for 5th August 1965 under the heading " Resolutions ", *for* the expression " by a suitable amendment to Article 351 of the Constitution ", *substitute* the expression " by suitably amending the Constitution of India ".

The amendment was duly seconded.

MR. SPEAKER : The resolution and the amendment are now before the House for discussion.

**திரு. து. ப. அழகமுத்து :** தலைவர் அவர்களே, நமது அரசியல் அமைப்புச் சட்டத்தில் 8-வது ஷெட்யூலில் குறிப்பிடப்பட்டிருக்கிற 14 மொழிகளும் தேசிய மொழிகள் என்று இப்பொழுது கூறப்பட்டு வருகிறது. அந்த எண்ணத்தை உறுதி செய்யும் வகையிலே சமீபத்தில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி மத்திய அரசு தேர்வுகளுக்கு 14 மொழிகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தபொழுது அவர்கள் 14 மொழிகளும் தேசிய மொழிகள் என்று கூறிடத்தக்க வகையில் தீர்மானத்தின் வாசகத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

" The national language of each State will become the medium of administration as well as instruction at the University stage as early as possible ".

என்று தீர்மானம் போட்டு அதை உறுதி செய்திருக்கிறார்கள். பண்டித நேரு அவர்கள்கூட ஆட்சிமொழிச் சட்ட விவாதம் பாராளுமன்றத்தில் நடைபெறும் பொழுது

" The makers of our Constitution were wise in laying down that all the 13 or 14 languages were to be national languages. There is no question of any one language being more a national language than the other. Bengali or Tamil or any other regional language is as much as Indian national language as Hindi ",

[திரு. து. ப. அழகமுத்து] [5th August 1965

என்று அதை உறுதி செய்திருக்கிறார்கள். 14 மொழிகளும் தேசிய மொழிகள்தான், ஒன்றைவிட ஒன்று உயர்ந்தது அல்ல, அதுவும் இந்தி மற்ற மொழிகளைவிட உயர்ந்தது என்று கூறிக் கொள்ள முடியாது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், அரசியல் அமைப்பு சட்டத்தில் 8-வது ஷெட்யூலில் குறிப்பிடப்பட்டிருக்கிற 14 மொழிகளும் தேசிய மொழிகள்தான் என்பதற்கு ஆதாரம், அரசியல் அமைப்பின் 17-வது பிரிவிலே ஆட்சி மொழி பற்றி சொல்கிற இடத்தில் எல்லோரும் புரிந்துகொள்ளக்கூடிய முறையில் தேசிய மொழிகள் என்று அதில் உறுதி செய்யப்படவில்லை. மாறாக,

'Language of the Union', 'Regional languages' என்று தலைப்புகளில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

'Language of the Union' என்று குறிப்பிடுகிறபொழுது இந்தியைக் குறிப்பிடுகிறார்கள், "ரீஜனல் லாங்க்வேஜ்"கள் என்று குறிப்பிடப்பட்டு, ஒவ்வொரு மாநிலத்திலும் பேசப்படும் மொழிகள் மாநிலத்தின் ஆட்சிமொழியாக இருக்கலாம் என்று குறிப்பிட்டு இருக்கிறார்களே ஒழிய, இந்த மொழிகள் தேசிய மொழிகள் என்று அரசியல் சட்டத்தில் சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அதுபற்றி பாராளுமன்றத்திலே திரு. பிராங் அந்தோனி அவர்களுடைய தீர்மானத்தின் மீது நடந்த விவாதத்திலே கனம் உறுப்பினர் திரு. என். ஆர். முனுசாமி அவர்கள்

The caption of the Eighth Schedule is only 'Languages'. I find neither the word "national" nor the word "regional" in the caption. These two words are very often used by many of our Members both inside and outside the House. We are using these two words *ad infinitum* without understanding their implications.

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தப் பதினான்கு மொழிகளை அவரவர்கள் கருத்துக்குத் தகுந்தபடி வியாக்கியானம் கொடுக்கிறார்களே தவிர, 'நாஷனல் லாங்வேஜ்' என்று உறுதி செய்ய அரசியல் அமைப்புச் சட்டத்திலே ஆதாரம் இல்லை. அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கும்போது, இந்தி மொழி ஆட்சிமொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டபோது அதுதான் தேசிய மொழி என்று இந்தி பேசும் மாநிலத்தவர்கள் பேசினார்கள். அந்த நேரத்திலே இந்தி பேசாத மற்ற மாநிலங்களிலிருந்து சென்ற பிரதிநிதிகள் என்ன பேசினார்கள் என்பதை, அந்த அரசியல் நிர்ணய சபைக் குறிப்பிலிருந்து படித்துப் பார்க்கிறபோது நாம் உணரலாம். உதாரணத்திற்கு ஒன்று இரண்டு பேர்களுடைய கருத்துக்களைக் குறிப்பிட விரும்புகிறேன். உத்தரப் பிரதேசத்திலிருந்து வந்த பிரதிநிதி திரு. ஆர். வி. துலேகர்,

"Now, today because we are nationality minded, therefore I say that Hindi is the national language. You say, Hindi is the official language, but I say it is the national language. You are mistaken when you say that it is the official language."



5th August 1965] [திரு. து. ப. அழகமுத்து]

இந்தியை ஆட்சிமொழி என்று குறிப்பிடுகிறபொழுது நீங்கள் தவறு செய்கிறீர்கள். அது தேசிய மொழிதான் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்குப் பின்னால் வேறொரு மெம்பர் திரு. லக்ஷ்மண ஸாஹு என்கிற ஒரிசா மெம்பர்.

"When we regard India as a nation and are trying to make it one, there is no reason why we should call it as official language. We must call it as national language".

என்று குறிப்பிட்டிருக்கிறார். நாம் இந்தியா ஒரு தேசம் என்று ஒப்புக்கொண்ட பிறகு, அதற்கு மொழியை நிச்சயித்த பிறகு, ஏன் 'அபிஷியல் லாங்க்வேஜ்' என்று குறிப்பிடவேண்டும், 'நாஷனல் லாங்க்வேஜ்' என்றே கூறலாம் என்று குறிப்பிட்டிருக்கிறார். இப்படி இந்தி மொழி பேசும் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் இந்தியை தேசிய மொழி என்று சொல்லவும், அதனால் எரிச்சல் அடைந்து நம் பிரதிநிதிகள், அதை மறுத்துப் பேசியும் இருக்கிறார்கள். அதையும் இங்கே குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன். திரு. டி. ஏ. ராமலிங்கம் செட்டியார் அவர்கள்,

"I, however, said that you cannot use the word national language, because Hindi is no more national to us than English or any other language. We have got our own languages which are national languages and for which we have got the same love as the Hindi speaking people have got for their language".

என்று பேசியிருக்கிறார்கள். உங்களுக்கு தேசிய மொழி இந்திதான் என்று சொல்ல எவ்வளவு உரிமை இருக்கிறதோ, அவ்வளவு உரிமை எங்கள் மொழி தேசிய மொழி என்று சொல்ல எங்களுக்கும் இருக்கிறது என்று அரசியல் நிர்ணய சபையில் பேசியிருக்கிறார். டாக்டர் சுப்பராயன் அவர்கள், 'கொஞ்சம் இடம் கொடுத்தால் மடத்தைப் பிடுங்கி விடுவீர்கள் போல் இருக்கிறதே' என்பது போல,

"I am also reminded of the other Tamil proverb which says that if a man comes and asks for a little place on the verandah and if you grant it, he will next ask for entry into the house itself. That is the position of most of you, gentlemen to-day".

என்று பேசி இருக்கிறார்கள். ஆகவே, இந்தி பேசுகின்ற மாநிலத்தில் இருப்பவர்கள் இந்திதான் தேசிய மொழி என்று கூறுவதும், இந்தி பேசாத மக்கள் அது தேசிய மொழிகளில் ஒன்றுதான் என்கிற நிலைமைதான் இன்றையதினம் இருந்து கொண்டிருக்கிறது. அதனால் நம்முடைய மாநில சர்க்கார், ஆட்சி மொழிக் கமிஷன் வந்தபோது அவர்களுக்கு ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள்.

"There is a widespread belief that the Constitution has declared Hindi to be the 'National' language of India; that other named languages are 'regional' languages, and that the unnamed languages are ignored. This belief is incorrect. Hindi has not been declared to be the national language of India—it is the Official language of the Indian Union which is not necessarily the same thing".

[திரு. து. ப. அழகமுத்து] [5th August 1965

என்று நம்முடைய மாநில சர்க்கார் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை உறுதிசெய்யும் வகையில் பார்லிமெண்டரி கமிட்டிக்கு இந்தக் கருத்தை தெரியப்படுத்தினார்கள். பார்லிமெண்டரி கமிட்டி அந்த கருத்தை ஏற்றுக்கொண்டு, மற்ற மொழிகளும் தேசிய மொழிகள்தான் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

" Thus, in one part of its Report, the Committee says the constitutional settlement outlined in the foregoing paragraphs is an integrated and comprehensive scheme ".

இதன் மூலம் அந்தக் கமிட்டி மற்ற மொழிகளையும் தேசிய மொழிகள் என்று ஏற்றுக் கொண்டிருக்கிறது.

இப்படி இந்தக் குழப்பம் வந்த பிறகு, பாராளுமன்றத்திலே இருக்கிற நம் உறுப்பினர்கள் பாராளுமன்றத்திலே பேசும்போது கவனத்தில் வைத்துக்கொள்ள நம்முடைய சர்க்கார் மூன்றாவது மெமோராண்டம் சமர்ப்பித்தது. அந்த மெமோராண்டத்திலே பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு என்ன கூறியிருக்கிறது என்றால்,

" Every language of Indian origin, spoken by any group of Indian citizens as their mother-tongue should be referred to as one of the Indian National Languages."

என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய மாநில சர்க்கார் இந்தப் பதினான்கு மொழிகளையும் தேசிய மொழிகள்தான் என்று வற்புறுத்தியிருக்கிறார்கள் நமது மாநில சர்க்கார் வற்புறுத்துகிற கருத்தை, அரசியல் சட்டத்தில் சட்ட பூர்வமாக ஆக்கவேண்டும் என்று சொல்லத் துணியவில்லை. நமது மாநில சர்க்கார் அழுத்தம் திருத்தமாகக் கூறியிருக்கிறார்கள்.

" should be referred to as one of the Indian national languages "

தேசிய மொழிகள் என்று குறிப்பிட்டு பேச வேண்டும் என்று. அதைத் தான் என் தீர்மானத்தில், அரசியல் சட்டம் should be amended என்று தான் குறிப்பிடுகிறேன். ஆகவே, அவர்களுடைய கருத்துக்கும், என்னுடைய கருத்துக்கும் அதிக வித்தியாசம் இல்லை. சட்ட வடிவம் கொடுக்க வேண்டும் என்றுதான் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறேன். கனம் அமைச்சர் அவர்கள் இதை ஏற்றுக் கொள்வார்கள் என்று கருதுகிறேன். இதையே வேறொரு கோணத்திலிருந்து பார்த்து வாதத்தை கிளப்பலாம். இந்தப் பதினான்கு மொழிகளும் ஆட்சிமொழி என்றால் இந்தியத் துணைக் கண்டத்திலே பேசப்படும் வேறு மொழிகளும் இருக்கின்றனவே என்று கேட்கலாம். அதற்கும், இந்த மாநில சர்க்கார் மூன்றாவது மெமோராண்டத்திலே பதில் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் சொல்லியிருப்பது, இங்கிலீஷோ அல்லது பிரெஞ்சோ இந்த நாட்டிலே பேசப்பட்டாலும் அவை இந்திய மொழிகள் ஆகாது. இந்திய 'ஆரிஜின்' உள்ள மொழிகள்தான் எடுத்துக் கொள்ளப்படும், எல்லா மொழிகளும் குறிப்பிடப்பட முடியாது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே 8-வது ஷெடியூலில்



5th August 1965] [திரு. து. ப. அழகமுத்து]

குறிப்பிடுகின்ற 14 மொழிகளும் principal national languages என்று ஏற்றுக்கொள்வது போதுமானதாக இருக்கும் என்பது தான் என்னுடைய தீர்மானம். தொல்காப்பியத்திற்கு, இளம்பூரணர், நச்சினார்க்கினியர் என்று பலர் உரை எழுதியிருப்பதைப் போல, நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு வட இந்தியர்கள் வியாக்கியானம் ஒன்று, இங்கே தென் இந்திய வியாக்கியானம் ஒன்று என்று ஏற்படும் சூழ்நிலை இருக்கக்கூடாது இந்தப் பதினான்கு மொழிகளும் தேசிய மொழிகள்தான் என்பதை அரசியல் அமைப்புச் சட்டத்திலேயே கொண்டு வர, சட்டத்தைத் திருத்தம் செய்ய, நமது சர்க்கார் மத்திய சர்க்காருக்கு சிபாரிசு செய்ய வேண்டும் என்று, சபாநாயகர் அவர்களே, உங்கள் மூலம் அவையைக் கேட்டுக்கொள்ளுகிறேன். 'நான் அபிஷியல் டே' என்று குறிப்பிடுகிறபோது, 'நோ டே' என்று சுருக்கமாகவும் கேலியாகவும் குறிப்பிடுவார்கள். அப்படி 'நோ' என்று கூறிவிடாமல், அவர்களுடைய கருத்தையே நான் கூறுகிறேன் என்ற காரணத்தினால், இந்தத் தீர்மானத்தை கனம் அமைச்சர் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

* திரு. வை. சங்கரன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது சபை முன் வந்திருக்கக்கூடிய தீர்மானம் தேவையில்லாத ஒரு தீர்மானம் என்றுதான் நான் நினைக்கிறேன். அந்தத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லை என்ற காரணத்தினால் நான் அதை ஆட்சேபிக்கிறேன். காரணம், அந்தத் தீர்மானத்திலேயே தெளிவாக இருக்கிறது.

' That all the languages referred to in the Eighth Schedule be declared as National Languages of India '

என்று தீர்மானத்திலே போட்டிருக்கிறார்கள். கான்ஸ்டிட்யூஷனில் பல இடங்களில் ' languages of India ' என்றால் ' vide—Eighth Schedule ' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தியாவினுடைய மொழிகள் பதினான்கு என்று கான்ஸ்டிட்யூஷனில் பல இடங்களிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

இன்னொரு வேறுபாட்டை நன்றாகப் பார்க்க வேண்டும். பலர் சொல்வதையெல்லாம் குறிப்பிட்டு, பல வியாக்கியானம், பலருடைய அச்சம், ஐயம் என்பதைப்பற்றி கனம் அங்கத்தினர் சொன்னார்கள். நாம் இப்பொழுது கவனிக்கவேண்டியதெல்லாம், கான்ஸ்டிட்யூஷன்படி இப்பொழுதிருப்பதே போதுமா, மேற்கொண்டு அதற்குத் தனிப்பட்ட முறையில் அமென்ட்மென்ட் செய்ய வேண்டுமா என்பதுதான். அந்த முறையில் பார்த்தால், 'லாங்குவேஜ் ஆஃப் இந்தியன் நேஷன்' அல்லது 'நாஷனல் லாங்க்வேஜஸ்' பதினான்கு என்று அங்கே குறிக்கப்பட்டிருக்கிறது. தனியாக திருத்தம் எதுவும் தேவை இல்லை என்றே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

351-வது செக்ஷனில், ' It shall be the duty of the Union to promote the spread of the Hindi language, to develop it so that it may serve as a medium of expression for all the elements of the composite culture of India and to secure its enrichment by assimi-

lating without interfering with its genius, the forms, style and expressions used in Hindustani and in the other languages of India specified in the Eighth Schedule . . . .'

என்று போடப்பட்டிருக்கிறது. ஹிந்தியோடு 'Other languages of India' என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்திய தேசத்தின் பாஷை என்றாலும் இந்தியாவின் தேசிய பாஷை என்றாலும் இரண்டும் ஒன்றுதான். தனியாக ஒன்றும் போட வேண்டியதில்லை. அதை மனதிற்கொண்டுதான் 'லாங்வேஜஸ் ஆப் இண்டியா' என்று 14 மொழிகளையும் போட்டார்கள். இந்தியாவில் நூற்றுக்கணக்கான பாஷைகள் புழங்கி வருகின்றன. மலை ஜாதியினர் போன்றவர்கள், புராதனமான மக்கள் இப்படிப்பட்டவர்கள் பேசும் பாஷைகள் எத்தனையோ இருந்தாலும், 14 மொழிகளைத்தான் எடுத்து, 'லாங்வேஜஸ் ஆப் இண்டியா' என்று போட்டிருக்கிறார்கள். நாஷனல் லாங்வேஜஸ் என்று பதினைந்து மொழிகளைத்தான் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதும் தெரிந்த விஷயம்.

தீர்மானத்தைக் கொண்டு வந்த கனம் அங்கத்தினர் 'நாஷனல் ஆரிஜின்' என்று இன்னொரு அடிப்படையும் கொடுத்திருக்கிறார். ஆங்கிலம் இன்றைக்கு ஓரளவு நாட்டிலே பரவியிருந்தாலும்கூட, அதைப் பல காரியங்களுக்குப் பயன்படுத்திக்கொண்டாலும்கூட, 'லாங்வேஜஸ் ஆப் இண்டியா' என்பதிலே ஆங்கிலத்தையும் போடாததற்குக் காரணம் என்ன? 'நாஷனல் ஆரிஜின்' இல்லை என்றுதான் அதை விட்டிருக்கிறார்கள். 'நாஷனல் ஆரிஜின்' அது ஆங்கிலம் இல்லாததன் காரணமாகத்தான் 'லாங்வேஜஸ் ஆப் இண்டியா' என்பதில் ஆங்கிலத்தைச் சேர்க்க முடியாத நிலையில், பதினைந்து மொழிகளோடு நிறுத்திவிட்டார்கள்.

பாஷை சம்பந்தமாகப் பார்த்தால், கான்ஸ்டிட்யூஷனில் 17-வது 'பார்ட்'டில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 'லாங்வேஜ் ஆப் தி யூனியன்' என்று சொல்கிறபோது ஹிந்தியைத்தான் குறிப்பிட்டிருக்கிறது. மேல் தலைப்பைப் பார்த்தால், 'அபிஷியல் லாங்வேஜ்' என்று போடப்பட்டு, கீழ்த்தலைப்பு 'லாங்வேஜ் ஆப் தி யூனியன்' என்றுதான் போடப்பட்டிருக்கிறது. அபிஷியல் லாங்வேஜ் ஆப் தி யூனியன்' என்று அதற்காக மட்டும் ஹிந்தியை வைத்துக் கொண்டு மற்றவை பின்னிடத்தில் தள்ளப்படவில்லை என்பதையும் பார்க்க வேண்டும். நாஷனல் லாங்வேஜஸ் ஆப் இண்டியா' என்பதில் ஹிந்திக்கும் அதே இடம்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிந்து கொள்ளவேண்டும். அது மட்டுமல்ல, 'ரீஜனல் லாங்வேஜ்' என்ற நிலைமையில்தான் இதர மொழிகள் எல்லாம் வைக்கப்பட்டிருக்கின்றன. நாஷனல் லாங்வேஜ் ஆக இல்லை என்ற அர்த்தம் தொனிக்கும்படியாகப் பல வாதத்தை எடுத்துச் சொன்னார்கள். அப்படியானால், இரண்டாவது சாப்டரைப் பார்க்க வேண்டும். இரண்டாவது சாப்டரில் 345-வது ஆர்டிகிளில் கூறப்பட்டிருப்பதாவது—

'Subject to the provisions of articles 346 and 347, the Legislature of a State may by law adopt any one or more of the



languages in use in the State or Hindi as the language or languages to be used for all or any of the official purposes of that State.'

என்று 'ரீஜனல் லாங்வேஜஸ்' என்ற தலைப்பில் போடப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் தமிழ் ரீஜனல் லாங்வேஜாக இருக்கிறது. மேற்கொண்டு ஒன்றுக்கு மேற்பட்ட பாஷைகள் இருப்பதாக எடுத்துக்கொள்வோம்.

மாநிலத்தில் வேறு மொழிகள் வழங்கினால் அதையும் ரீஜனல் லாங்வேஜாக எடுத்துக்கொள்ளக்கூடிய ப்ரோவிஷன் இருக்கிறது 347-வது ஆர்டிகிளோடு சேர்த்துப் பார்த்தால் தெரியும்.

'On a demand being made in that behalf, the President may, if he is satisfied that a substantial proportion of the population of a State desire the use of any language spoken by them to be recognized by that State, direct that such language shall also be officially recognized throughout that State or any part thereof for such purpose as he may sepeify".

என்று 347-வது ஆர்டிகிளில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் தமிழைத் தவிர தெலுங்கும் வழக்கத்தில் இருந்து வருகிறது. ஸப்ஸ்டான்ஷியல் போர்ஷன் ஆப் தி பாபுலேஷன் பேசி வருகிறார்கள் என்றால், அதைக்கூட ரீஜினல் லாங்வேஜாக அனுமதிக்கப்படுகிறது. ஜனாதிபதி அனுமதி கொடுத்தால் இந்த மாநிலத்தில் தமிழோடு சேர்ந்து தெலுங்கையும் வைத்துக்கொள்ள முடியும் என்று அதற்கு வேண்டிய இடமும் அளிக்கப்பட்டிருக்கிறது. ரீஜனல் லாங்வேஜஸாக 14 மொழிகள் இருக்கலாம். அதற்கு மேலும் பல மொழிகள் ரீஜனல் லாங்வேஜஸாக வர வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது; அதற்கு இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. 'லாங்வேஜ் இன் யூஸ் இன் தி ஸ்டேட்' என்றால் 14 மொழிகளைத் தவிர வேறும் இருக்கின்றன என்று அர்த்தம். 14 மொழிகள் மட்டுமல்லாமல் மற்ற மொழிகளும் இருக்கின்றன என்று அர்த்தம் உண்டாகிறது.

348-வது ஆர்டிகிளில் 'Notwithstanding anything in sub-clause (a) of clause (1), the Governor or Rajpramukh of a State may, with the previous consent of the President, authorize the use of the Hindi language or any other language used for any official purposes of the State.'

என்று போடப்பட்டிருக்கிறது. 14 மொழிகளைத் தவிர மேலும் பல மொழிகள் இருப்பதாக தனி இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தேசீய அளவிலே எடுத்துக்கொண்டால் 14 மொழிகள் தேசிய மொழிகளாக இருக்கின்றன. 351-வது ஆர்டிகிளில் 'அதர் லாங்வேஜஸ் ஆப் இண்டியா' என்று சொல்லப்பட்டிருப்பதிலிருந்து பதினைந்துக்கும் ஒரே அளவில்தான் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே கான்ஸ்டிட்யூஷனில் அதற்காகத் தனி இடம் அளிக்கப்பட்ட பிறகு, எட்டாவது ஷெட்யூல் அதற்காகத்தான் போடப்பட்டிருக்கிறது. தனியாக 'நாஷனல் லாங்வேஜ்' என்று குறிப்பிட வேண்டிய அவசியம் இல்லை. இந்திக்கு ஆக்கம் அளிப்பதற்காக மட்டும் 351-வது ஆர்டிகிளில் இடம் இருக்கிறது.

'அபிஷியல் லாங்க்வேஜ்' என்ற காரணத்திற்காக அதற்குத் தனியாக இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கமும், அந்தந்த அமைப்பிலே இருக்கிறவர்களும் ஏற்கனவே சொல்லியிருக்கிறார்கள். இந்தி மட்டுமல்ல, இந்தி தவிர மற்ற 13 மொழிகளுக்கும் ஆக்கம் அளிக்க, நாட்டிலே நல்ல முறையில் பணி வளர்ச்சி பெற வேண்டிய ஆக்கமும் உதவியும் மத்திய சர்க்கார் அளிக்கவேண்டும் என்று ஏற்கனவே பல ஏற்பாடுகள் செய்யப்பட்டு, வற்புறுத்தப்பட்டு இருக்கின்றன. இப்போது உள்ள இந்த நிலைமையில் சட்டத்தின்படி பார்த்தால் எதாவது பயம், அச்சம் இருந்தாலும் கூட, காரியத்தில் அந்த அச்சத்தையும் பயத்தையும் போக்குவதற்குப் போதுமான அளவு உதவி பெற அன்றாட நடைமுறையில் காரியத்தில் செய்யவேண்டுமே தவிர, சட்டத்திற்கு அந்தவிதமான திருத்தமோ மாற்றமோ வேண்டிய அவசியம் இல்லை. இருக்கும் சட்டத்தின்படி எந்த முறையில் அதைச் செயல்படுத்த வேண்டுமோ அதை நடைமுறையில் செய்யவேண்டியதற்கு பார்க்க வேண்டுமே தவிர, தனியாக சட்டத்தில் திருத்தம் தேவை இல்லை என்று கூறிக்கொண்டு, தீர்மானத்தை எதிர்த்து, என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

* திரு. ஜே. மாதா கவுடர்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் உறுப்பினர் திரு. அழகமுத்து அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்தத் தீர்மானம் தற்போது அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன். 14 மொழிகளையும் தேசிய மொழிகளாகச் சேர்க்கவேண்டும் என்பதைப்பற்றி இந்த மன்றத்தில் பல விவாதங்கள் நடத்தியிருக்கிறோம். பல முறை பேசப்பட்டு, இந்தி தான் ஆட்சி மொழி என்று நாட்டிலே இருக்கும் அத்தனை பேர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்தி தேசிய மொழி ஆகிவிட்டது என்பதற்கு அடுத்த பாராளுமன்றக் கூட்டத்திலே அவர்கள் அதற்குத் திருத்தத்தையெல்லாம் செய்ய முடிவு செய்கிறார்கள். இந்தி ஆட்சி மொழி ஆவதற்கு அரசியல் சாசனத்தை நாம் ஏற்படுத்தும்போதே இந்தியைப்பற்றி அங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அன்று யாரும் எதிர்க்கவில்லை. அன்றைக்கு இந்த நாட்டிலே இருக்கும் அரசியல் கட்சியினர் யாரும் அதைப் பற்றி வாய் திறந்து எதிர்த்துப் பேசவில்லை. அரசியல் சாசனம் எழுதுவதற்கு டெல்லியிலிருந்து சென்றிருக்கிறார்கள். 15 வருடங்களுக்குப் பிறகு இந்தி ஆட்சி மொழியாக வரும் என்று அப்போதே தெரிவித்திருக்க, அதைப்பற்றி அன்று பேசாமல் இருந்துவிட்டு, பிறகு அரசியல் காரணமாக, இந்தி வந்து நம்மை அடக்கியாளுகிறது, இந்திக்கு நாம் அடிமையாகப் போகிறோம் என்று சொல்லி, மொழியின் காரணமாக மக்களைக் கிளர்ச்சியிலே தூண்டிவிடுவதென்றால், அரசியலிலே இடம் பிடிக்கவேண்டுமென்பதற்காகத்தானே தவிர வேறு ஒன்றுமில்லை. நாம் ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். பாரத நாட்டில் இருக்கக் கூடிய 40 கோடி மக்களில் தமிழ் நாட்டில் இருக்கக் கூடியது 4 கோடி மக்கள்தான். பத்தில் ஒரு பாகம். இந்திய ஜனத்தொகையில் பத்தில் ஒரு பாகம் இருக்கக்கூடிய தமிழ் நாட்டைப் பொறுத்தவரையிலும் எடுத்துக்கொண்டால் இங்கே உள்ள எல்லா மக்களின் தாய்





மொழியும் தமிழ்தான் என்று சொல்ல முடியாது. பொதுவாக திராவிட மொழி என்று பேசினாலும் இங்குள்ளவர்கள் தமிழைத் தான் உதாரணமாக எடுத்து வைக்கிறார்கள். நாற்பது கோடி மக்களுக்கு என்று இருக்கக்கூடிய பாராளுமன்ற ஆட்சி மொழியில் தமிழையும் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்றால் அதை நியாயம் இல்லை என்று சொல்லவில்லை. இன்றைக்கு தமிழ் நாட்டில் 4 கோடி மக்கள் இருக்கிறார்களே, இவர்கள் எல்லோருமே தமிழ் பேசுகிறார்களா? தமிழை மட்டுந்தானே ஆட்சி மொழியாக வைக்க வேண்டும் என்கிறோம். தமிழ்நாட்டில் உள்ளவர்கள் எல்லோரும் தமிழைத்தான் தாய்மொழியாகக் கொண்டவர்கள் என்று நாம் மொட்டையாகச் சொல்ல முடியாது. நம்முடன் ஆந்திரர்கள் இருந்தார்கள். "சென்னை மனதே" என்று அவர்கள் போராடிய போராட்டத்தை நாம் மறந்து விடுவதற்கில்லை. இங்கே தெலுங்கு பேசுகின்றவர்கள் இருக்கிறார்கள், கன்னடம் பேசுகின்றவர்கள் இருக்கிறார்கள், மலையாளம் பேசுகின்றவர்கள் இருக்கிறார்கள். இன்னும் எழுத்து வடிவில் இல்லாத பேச்சுமொழியில் இருக்கக் கூடிய வேறு பாஷை பேசுகின்றவர்களும்—தாய்மொழியாகக் கொண்டவர்களும் இங்கே இருக்கிறார்கள். ஆக தமிழை மட்டும் தாய்மொழியாகக் கொண்டவர்கள் 50 சதவிகிதம்தான் இருப்பார்கள் என்று நினைக்கிறேன். இருந்தும் இந்த 50 சதவிகிதம் உள்ள தமிழ்மொழியை நாம் நம்முடைய மாநிலத்தில் ஒரே ஒரு ஆட்சி மொழியாகக் கொள்வது நியாயம் என்று ஒப்புக்கொண்டால் மத்திய ஆட்சியைப் பொறுத்த வரையில் 50 சதவிகிதத்துக்கு மேல் பேசக்கூடிய இந்தி மொழியை ஆட்சிமொழியாகக் கொள்வது நியாயமற்றதாகுமா? அதிகமான ஜனத்தொகையினர் பேசுகின்ற மொழியைத் தேசியமொழியாகக் கொள்ளவேண்டும் என்பது ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்டது. அப்படி இருக்கிறபோது பதினான்கு மொழிகளையும் தேசியமொழி என்று கொண்டுவர வேண்டும் என்று சொல்வது சாலச்சிறந்தது அல்ல, வீண் குழப்பமே ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களைக் கொண்டே இதுபோன்ற தீர்மானத்தை அங்கே கொண்டுவரலாம். மெஜாரிட்டியினர் ஏற்றுக்கொண்டால் நல்லது. இதை இங்கே நிறைவேற்றி, நாம் சிபார்சு செய்து அவர்களுக்கு அனுப்புவதைவிட அங்கே கொண்டுவந்து நிறைவேற்றுவது உசிதம் என்று சொல்லி இந்தத் தீர்மானத்தை எதிர்க்கின்றேன்.

திரு. எம். எஸ். செல்வராஜன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் கொண்டு வந்திருக்கக் கூடிய தீர்மானத்தை வெளிப்படையாகப் பார்க்கிறபோது இந்தத் தீர்மானத்திற்கு கனம் மாதா கவுடர் என்ன கருத்தைக் கொண்டார்களோ அதே கருத்தைத்தான் நானும் கொண்டேன். அந்த அர்த்தம்தான் புலப்படுகிறது. ஏற்கனவே இந்த நேரத்தில் பேசப்பட்டு வருகிற மொழிகள் ஆயிரத்துக்கும் மேற்பட்டவைகளாக இருக்கின்றன. அரசியல் அமைப்புச் சட்டம் செய்தபோது நமது மொழிகள் என்று தனியாகப் பிரித்துப் பார்த்தபோது, இந்த

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [5th August 1965

மொழிகள் ஒன்றுக்கொன்று உள்ள தொடர்பையும், இலக்கண இலக்கியச் செறிவோடு எழுத்துக்கள் அமைதியோடு பேசப்பட்டு வருகிற மொழிகள், வரிவடிவ எழுத்துக்கள் இன்றி பேச்சு மொழியாக வாய்ப்பேச்சில் மட்டும் இருந்து கொண்டிருக்கக் கூடிய மொழிகள், சிலாசாசனம், நூல்கள் முதலியவற்றில் இருந்து வழக்கில் பேசப்படாத மொழிகள் ஆகிய எல்லாவற்றையுமே நன்றாகப் பரிசீலனை செய்துதான் இலக்கண, இலக்கிய அமைதியோடு நம்முடைய மொழிகளுக்கு ஆதாரமாக இருக்கக் கூடிய மொழி ஆகிய எல்லாவற்றையும் கண்டு 14 தேசிய மொழிகள் என்று வகுத்துக் கொடுத்தார்கள். அப்படி வகுத்துக்கொடுத்தபோதே நம்முடைய தேசத்தில் வழக்கில் இருந்தாலும் இலக்கண இலக்கிய அமைதியின்றி, வரிவடிவெழுத்தின்றி, சிலாசாஸனத்தில் காணப்படாது இருக்கின்ற மொழிகள் உள்பட மொத்தமாக ஆயிரத்துக்கும் மேற்பட்டு இருப்பதையும் உணர்ந்தார்கள். எல்லாவற்றையும் பார்த்து தான் இந்திய தேசிய மொழிகள் என்று 14 மொழிகளைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் குறிப்பிட்டிருக்கிற மொழிகளில், ஆங்கிலம் இந்த நாட்டில் பரவலாகப் பேசப்பட்டு வந்தாலும் கூட இந்திய தேசீய மொழி என்பதில் அது இடம் பெறவில்லை. இந்த தேசத்தில் பல்லாயிரக்கணக்கான வருஷங்களாக வளர்ந்து வந்திருக்கக்கூடிய நாகரிகத்திற்கேற்ப ஆரம்பம் முதற்கொண்டு இடையறாது வந்திருக்கக்கூடிய நிலைமையை அனுசரித்து, நம்முடைய நாகரிக, கலாசார வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்திருக்கக் கூடிய நிலைமையை அனுசரித்து சமஸ்கிருதம் உள்ளிட்டு 14 மொழிகள் என்று வரையறுக்கிறபோது ஆங்கிலத்தை பிறநாட்டு மொழி என்று விலக்கியே விட்டிருக்கிறார்கள். ஆக நம்முடைய அரசியல் அமைப்பில் 14 மொழிகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளவை நம்முடைய தேசிய மொழிகள்தான். அதில் சந்தேகமில்லை.

கனம் அழகமுத்து அவர்களுடன் நான் பேசிக்கொண்டிருந்தேன். அப்போது நான் 14 மொழிகள் என்பதற்கு முன்னால் "தேசீய" என்ற ஒரு சிறு வார்த்தையைச் சேர்க்க வேண்டும் என்பதுதான் அவருடைய திருத்தத்தின் நோக்கம் என்பதைத் தெரிந்து கொண்டேன். ஆரம்பத்தில் நானே புரிந்து கொண்டது தேசியமொழிகள் பதினான்கு என்று குறிப்பிடவேண்டும் என்று சொல்கிறார் என்பதுதான். ஆட்சிமொழியாக இந்தப் பதினான்கு மொழிகளையும் கோருகிறார் என்றே நினைத்தேன். ஆனால் அவரோடு பேசிய பிறகுதான் அரசியல் அமைப்புச் சட்ட 351-வது பிரிவிலே மொழிகள் என்று இருக்கக்கூடிய இடத்தில் "தேசிய மொழிகள்" என்ற வார்த்தையை இணைக்க வேண்டுமென்பது அவர் திருத்தம் என்று அறிந்து கொண்டேன்.

நான் முன்பு குறிப்பிட்டது போல இந்தப் பதினான்கு மொழிகளை வெறும் எண்ணிக்கையை மட்டும் வைத்து நிர்ணயிக்கவில்லை. ஆயிரக்கணக்கான மொழிகள் நம் நாட்டில் வழக்கத்தில் இருந்தாலும் கூட, எழுத்து வடிவில் இல்லாது பேச்சு வழக்கில் இருக்கிற கொங்கணம், சௌராஷ்டிரம் போன்றவற்றையும்



5th August 1965] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

கவனித்து இலக்கண, இலக்கிய அமைதியோடு, வடிவச் சிறப்போடு, மற்ற மொழிகளின் தோற்றத்திற்குத் தாய் மொழியாக, பண்டைக்காலம் தொட்டே இடையறாது வருகின்ற மரபு அமைதியோடு, வரலாற்றுச் சிறப்போடு அதிகமான பேர்கள் பேச வேண்டும் என்பது கூட இன்றி 2 ஆயிரம் மக்களே பேசுகின்றதாலும்கூட இலக்கிய, சாசன, சாத்திரச் சிறப்புப் பெற்றதாக விளங்குகின்ற சமஸ்கிருதம் உள்பட உள்ள 14 மொழிகளை நம்முடைய இந்திய மொழிகள் என்று எடுத்து வைத்துள்ளார்கள். இந்த தேசத்திற்குரிய சிறப்பான மொழிகள்தாம் இவை. தேசிய மொழிகள் என்ற அங்கீகாரம் அவற்றை அரசியல் அமைப்பு ஷெட்யூலில் சேர்த்திருப்பதில் இருந்தே கிடைத்திருக்கிறது. ஆகவே இப்போது மேலும் "தேசிய" என்ற வார்த்தையைச் சேர்த்து குழப்பமான நிலைமையை உண்டாக்கக் கூடாது என்பது என் கருத்து. இந்தப் பதினான்கு மொழிகளைத் தவிர வேறு மொழிகள் தேசிய மொழிகளாக வருவதற்கு என்ன ஆட்சேபணை இருக்கிறது? இப்பொழுது அங்கீகரிக்கப்பட்டிருக்கின்ற 14 மொழிகளைத் தவிர, மேற்கொண்டு இருக்கக்கூடிய மொழிகளைப் பரிசீலனை செய்து அவற்றை அங்கீகரிக்கவேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை புலப்படுத்துவதாகத்தான் இந்தத் தீர்மானம் அமைந்திருக்கிறது. இப்பொழுது அங்கீகரிக்கப்பட்டிருக்கின்ற 14 மொழிகளையும் தவிர, இன்னும் அங்கீகரிக்கப்படாமலிருக்கின்ற ஆயிரக்கணக்கான மொழிகளையும் பரிசீலனை செய்து ஏன் அவற்றிலிருந்து இன்னும் மொழிகளைப் பொறுக்கி எடுக்கக்கூடாது என்ற ஒரு விஷயத்தை கிளப்பி, அதை சர்ச்சைக்குரிய ஒன்றாக்கக்கூடிய நிலைமை இந்தத் தீர்மானத்தால் வந்துவிடும். ஏற்கனவே, ஷெட்யூலில் ரிக்கக்னைஸ்டு லாங்க்வேஜஸ் என்று இந்திய தேசிய மொழிகளாக 14 மொழிகள் அங்கீகரிக்கப்பட்டுவிட்டன. ஆகவே, அவசியமில்லாத ஒரு தீர்மானத்தை அவசியம் இருப்பதைப் போன்று கருதி அதைக் கொண்டு வருவதை நான் எதிர்க்கிறேன் என்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் துணைத் தலைவரவர்களே, திரு. அழகமுத்து அவர்கள் கொண்டுவந்துள்ள தீர்மானத்தை எதிர்க்கின்ற முறையில் நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். அரசியலமைப்புச் சட்டத்தின் 351-வது விதியில் ஒரு தகுந்த திருத்தம் செய்வதன் மூலம் எட்டாவது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள எல்லா மொழிகளையும் இந்தியாவின் தேசிய மொழிகளாக அறிவிக்கவேண்டுமென்று இச்சபை இந்திய அரசாங்கத்திற்குப் பரிந்துரைக்க வேண்டுமென்று இந்தத் தீர்மானம் கூறுகின்றது. அரசியலமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டிருக்கின்ற சொற்களை ஆராய்ந்து பார்ப்போமானால் அஃபிஷியல் லாங்க்வேஜ், ஆட்சி மொழி, ரீஜனல் லாங்க்வேஜ், வட்டார மொழி என்ற சொற்கள்தான் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால், நடைமுறையிலே பேசப்படுகின்ற பேச்சுக்களையும், வாதங்களையும் பார்ப்போமானால் இந்தி தேசிய மொழியாக ஆக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால் இந்தி மட்டுமே தேசிய மொழியாக இருக்கும் என்ற கருத்து எடுத்துச் சொல்லப்படுகின்றது.

*[திரு. இரா. நெடுஞ்செழியன்]* [5th August 1965

ஆகவே, இந்தக் குழப்பத்தைப் போக்க வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தியாவுக்கு ஒரே ஒரு தேசிய மொழிதான் இருக்கவேண்டும், இருக்கமுடியும், அதுவும் இந்திதான் இருக்கவேண்டும், இருக்க முடியும் என்ற அளவிலேதான் நடைமுறையிலே பேச்சுக்களும் வாதங்களும் இருந்து வருகின்றன. ஆகவே, 14 மொழிகளும் இந்த நாட்டின் முக்கியமான தேசிய மொழிகள் என்ற அடைமொழியைப் பெற்று விடுமானால், அந்தத் தகுதியைப் பெற்று விடுமானால் நான் முன்பு சொல்லியதைப் போன்று, நாட்டின் எதிர்காலம் அமைதியாக இருக்கும், நாட்டிலே இருக்கின்ற அத்தனை மக்களும் அவரவர்கள் திருப்தியடையத் தக்க முடிவு காண வழிவகை பெறமுடியும். இந்தி மட்டுமே ஒரே தேசிய மொழியாக ஆகாது; முக்கியமான மொழிகள் எல்லாம் தேசிய மொழிகளாக ஆக்குதல் வேண்டும் என்பதைச் சட்டத்தின்மூலம் கொண்டுவருவதால் அந்தந்த மொழிகள் உரிய இடத்தைப் பெற முடியும். ஒரு வாரத்திற்கு முன்பு அலகாபாத்திலே நடைபெற்ற இந்தி சம்மேளன மாநாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். 'ஆங்கிலம் இருந்த இடத்திலே இந்தி மட்டும்தான் இருக்க முடியும், இருக்கவேண்டும்; பிற மொழிகளையும் இந்தியுடன் சேர்க்கவேண்டுமென்றால், இந்திக்கு என்ன என்ன தகுதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவோ அந்தந்தத் தகுதிகளையெல்லாம் பெற்றால்தான் சேர்க்கமுடியும். இல்லாவிட்டால் சேர்க்கமுடியாது என்ற வகையிலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். ஆகவே, இந்திக்கு மட்டும்தான் தேசியத் தன்மை இருக்கின்றது என்றும், தேசியத் தன்மையின் தகுதியை இந்தி மட்டும்தான் பெற்றிருக்கிறது, மற்றைய மொழிகளுக்கு அது இல்லையென்ற உணர்வே இருந்து வருகின்றது. 14 மொழிகள்தான் முக்கிய தேசிய மொழிகள் என்று குறிப்பிடப்படுவதனால், மற்றைய மொழிகள் தேசிய மொழிகள் ஆகாவா என்ற கேள்வி எழக்கூடும். மற்றைய மொழிகள் இந்த நாட்டின் மொழிகள் என்றாலும், இந்தியாவின் முக்கிய தேசிய மொழிகள் என்று இந்த 14 மொழிகளைத்தான் அழைக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். இதுபற்றி அஃபீஷியல் லாங்குவேஜ் கமிஷனின் ரிப்போர்ட்டிலே கூடச் சொல்லப்பட்டிருக்கிறது.

'The linguistic survey of India records 179 languages and 544 dialects in the country as current at present'

என்று ஆட்சிமொழிக் கமிஷன் அறிக்கை கூறுகின்றது. முக்கியமாக மொழிகள் என்ற வகையில் 179 மொழிகளும், 544 கிளை மொழிகளும் இந்தியாவில் இருக்கின்றன . . .

**டாக்டர் பா. நடராஜன்:** இது 1961-ம் வருடத்திய சென்ஸஸ். இப்பொழுது அது இன்னும் அதிகமாகி இருக்கும்.

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** இன்னும்கூட அதிகமாக இருக்கும் என்று டாக்டர் நடராஜன் அவர்கள் சொல்லுகின்றார்கள். அரசாங்கமே ஒரு தனி இந்தியை உருவாக்கி அதற்கு கரிபோலி என்று பெயரிடப்பட்டு, ஆட்சியாளர்கள் அதை ஆட்சிமொழியாக



5th August 1965] *[திரு. இரா. நெடுஞ்செழியன்]*

உருக்கொடுக்கும் முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். சமஸ்கிருதப் பேராசிரியர்களையும், பண்டிதர்களையும் அழைத்து சொற்களைக் கண்டுபிடித்துச் சேருங்கள் என்று சொல்லி, அதன்படி 10, 15 பேர்கள் ஆறுமாத காலம் வரை உட்கார்ந்து சொற்களைக் கண்டு பிடித்துக் கண்டு பிடித்துச் சேர்க்கின்றார்கள். இப்படிக் கண்டுபிடிக்கப்பட்ட சொற்களைப் புரிந்துகொள்ள முடியாத பல இடங்கள், இந்தி பேசுகின்ற மாநிலங்களிலேயே இருக்கின்றன. நீதிமன்றங்களிலே பயன்படுத்தப்படும் சொற்களிலே பேதங்கள் இருக்கின்றன. ஒரு மாநிலத்திலே வழங்கப்படுகின்ற சொல் மற்றொரு மாநிலத்தால் புரிந்து கொள்ளமுடியவில்லை என்பதற்காக, நான்கு மாநிலங்களைச் சேர்ந்தவர்களை அழைத்துச் சொற்களை ஆராய்ந்து, எந்தச் சொல்லை ஏற்றுக்கொள்ளலாம் என்று தேர்ந்தெடுக்கவேண்டுமென்று கூறியிருக்கின்றார்கள். இதை நான் எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், தாய்மொழி என்றும், வட்டார மொழி என்றும், லிங்க் லாங்க்வேஜ் என்றும், ஆட்சிமொழி என்றும் பல்வேறு பெயர்கள் இருக்கின்றன. தாய்மொழி என்பது நாமாகத் தேர்ந்தெடுத்துக் கொள்கின்ற மொழியல்ல. தாய்மொழி நம்மை ஆட்கொள்கின்றது, நாம் யாரும் தாய்மொழியை ஆட்கொள்வதில்லை. தாய்மொழி தான் நம்மை ஆட்கொள்கின்றது. என்னுடைய தாய்மொழி நானாகப் பார்த்துத் தேர்ந்தெடுத்துக்கொள்கின்ற ஒன்று அல்ல. என்னுடைய பிறப்பின் காரணமாக தமிழ் தாய்மொழியாக என்னை ஆட்கொண்டிருக்கிறது. அவரவர்கள் பிறந்த மண்ணுக்குரிய மொழிகள் அவரவர்களை ஆட்கொள்கின்றனவே தவிர, மொழிகளை நம் முன்னால் வைத்து நாம் எந்த மொழியைத் தாய்மொழியாகக் கொள்ளலாம் என்று நாமாகப் பார்த்து ஆட்கொள்வதில்லை. ஆகவே தாய்மொழி என்பது நம்மை ஆட்கொள்கின்ற மொழிதான்; நாம் உருவாக்குகின்ற மொழியல்ல. தேசியம் என்பது நம்முடைய நாகரிகம், பண்பாடு, கலாச்சாரம் இவற்றை வைத்துத்தான் உருவாகின்றது. தேசியத்தை திடீரென்று ஒரு நாள் காலையிலே மாற்றிக்கொள்ளவோ, அல்லது வேறு தேசியத்தை ஏற்றுக் கொள்ளவோ முடியாது. நான் நாளை காலை 6 மணிக்கு என்னுடைய தேசியத்தை விட்டுவிட்டு, இன்னொரு தேசியத்தை வைத்துக் கொள்ளப்போகிறேன் என்று யாரும் அறிக்கை விடமுடியாது. எனவே, தேசியமும் நம்மை ஆட்கொள்கின்ற ஒன்றுதான். ஆனால் ஆட்சிமொழி அப்படியில்லை. ஆட்சிமொழி நம்மை ஆட்கொள்கின்ற ஒன்றல்ல. நாமாகப் பார்த்து ஆட்கொள்கின்றோம். நாமாகப் பார்த்து ஏதாவது ஒரு மொழியை ஆட்சிமொழியாக ஏற்றுக்கொள்கின்றோம். வெள்ளையன் நம்மை ஆண்ட காலத்தில் ஆங்கிலம்தான் ஆட்சிமொழி என்று சொன்னான். கடலூரிலே ஆங்கிலம் ஆட்சிமொழியென்றால், பக்கத்திலேயுள்ள பாண்டிச்சேரியில் அதைப் ஃப்ரெஞ்சுக்காரன் ஆண்டதால் ஃப்ரெஞ்சு தான் ஆட்சி மொழியாக இருந்தது. ஆகவே, ஆட்சிமொழியை மாற்றிவிட்டு, எப்பொழுதும் வேறு ஒரு ஆட்சிமொழியை புகுத்தி விடலாம். இந்தியாவிலே பல தேசிய மொழிகள் இருக்கின்றன. குறிப்பிடப்பட்ட அத்தனை தேசிய மொழிகளும், [illegible], பண்பாடு, தேசியம் ஆகியவற்றின் தன்மையை அடிப்படையாகக் கொண்டவை. தமிழகத்திலே தமிழ் மண்ணுக்குரிய, பண்பாட்டிற்குரிய



D! V211, 3' N65 64916

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [5th August 1965

தேசிய மொழியாக தமிழ் இருக்கிறது. ஆந்திராவிலே, ஆந்திர மண்ணுக்குரிய, ஆந்திர தேசிய மொழியாக தெலுங்கு இருக்கிறது. மராட்டியத்திலே, அந்த மண்ணுக்குரிய மராட்டியம் தேசிய மொழியாக இருக்கின்றது. இந்தி பேசப்படுகின்ற இடங்களில், அந்த மண்ணுக்குரிய இந்தி மொழி தேசிய மொழியாக இருக்கின்றது. ஆகவே, இந்தியாவில் இருக்கின்ற பல்வேறு மொழிகளும் தேசிய மொழிகள்தாம். குறிப்பிட்ட ஒரு பகுதியில் பேசப்படுகின்ற மொழியாக அது அமைந்துவிட்ட காரணத்தால் அதுதான் இந்தியா முழுமைக்கும் தேசியமொழி ஆகும் என்று சொல்வது சரியல்ல. இந்தி இந்தியா முழுவதற்கும் தேசிய மொழியாக ஆகிவிடாது. காஷ்மீரம் முதல் கன்னியாகுமரி வரை பரவலாக அது வளர்ந்து வந்த, வழங்கிவந்த மொழியல்ல. நான்கு மாநிலங்களில்தான் இந்தி பேசப்படுகின்றது. நான்கு மாநிலங்களுக்கு மட்டுமே தேசிய மொழியாக இருக்கக்கூடிய மொழி பல்வேறு மாநிலங்களுக்கும் தேசிய மொழியாக இருக்கமுடியாது. இந்தி என்பது பல வகைகளில் பேசப்படுகின்ற ஒரு மொழியாக இருக்கின்றது.

'Within what is known as the Hindi-speaking area, various dialects are spoken, and were once cultivated as literary languages but during the first decades of the 19th Century, the *Kharibolı*, one of the component dialects of Hindi, emerged as the standard and accepted form of Hindi writing over the whole of the Hindi-speaking area "fl

என்று இப்படி இருக்கக்கூடிய ஒரு மொழியை எடுத்துக்கொண்டு, அதற்கு எல்லாத் தகுதிகளையும் கொடுத்து, அதை ஒரு எடுத்துக் காட்டு மொழியாக வைத்துக்கொள்ளலாம் என்ற அளவுக்கு இந்தியைக் கொண்டுவருகிறார்கள். இந்தியாவிலே பேசப்படுகின்ற அத்தனை மொழிகளுக்கும் தேசிய மொழி அந்தஸ்து உண்டு என்று பார்க்கும்பொழுது, இந்தியாவில் பேசப்படுகின்ற இந்த 179 மொழிகளும், 544 கிளைமொழிகளும் தேசியத் தன்மைக்கு உரியன என்று அடிப்படையிலே பார்க்கும்பொழுது, ஏன் இந்த 14 மொழிகளையும் முக்கிய தேசிய மொழிகள் 'Important National Languages' என்று கொண்டுவரக்கூடாது? இப்போது நடைமுறையில் பார்க்கையில் எப்படி இருக்கிறது என்றால் பாகிஸ்தான் பிரியாமல் இந்தியா ஒன்றாக இருந்த நேரத்தில், அதற்கும் முன்பு பர்மாவும் இந்தியாவோடு இருந்த நேரத்தில் அத்தனைக்கும் சேர்ந்து தேசிய மொழி இந்தி என்றுதான் அமைந்திருக்கும். வேறு ஒரு அமைப்பாகப் பாகிஸ்தான் போய்விட்ட பிறகு மீதிப் பகுதிக்கு இந்தி தேசிய மொழி என்று ஆக்கப்பட்டிருக்கிறது. ஆட்சி மொழியினுடைய விரிவை அகலப்படுத்தலாம் அல்லது குறைக்கலாம். ஆனால் தேசிய மொழி என்பது தாய் மொழியைப் போன்றது. அதை விரிவுபடுத்த முடியாது. சட்டத்தின் மூலமாக, அதிகாரத்தின் மூலமாக, நான்கு மாநிலங்களில் பேசப்படுகின்ற மொழியை 44 கோடி மக்களும் சேர்ந்து பார்க்கும்போது பெரும்பான்மையான மக்களுடைய தேசியத்தை உணர்த்துகின்ற மொழியாக அது ஆகாது. தமிழ் மக்களுடைய தேசியத்தை உணர்த்துகின்ற மொழி தமிழாகத்தான் இருக்க முடியும். இந்த மாநில மக்களுக்கு உரிய



5th August 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

மொழி தமிழாகத்தான் இருக்க முடியும். ஆந்திரத்தைப் பொறுத்த வரை அது அவர்களுக்குத் தெலுங்காகத்தான் இருக்க முடியும். இந்தியாவில் பல தேசிய மொழிகள் இருந்தன. அதிலே முக்கியமாக—இம்பார்ட்டண்ட் நேஷனல் லாங்குவேஜ்—14 மொழிகள் தேசிய மொழிகள் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அப்படி இருக்கும்போது இந்திக்கு மட்டும் ஒரு தனி அந்தஸ்து கொடுக்கப்படுகின்றது. அந்த அந்தஸ்து இந்த 14 மொழிகளுக்கும் தரப்பட வேண்டும் அப்போதுதான் பெரும்பான்மையான மக்கள் தங்கள் தங்கள் தாய் மொழி தேசிய அந்தஸ்தைப் பெற்று இருக்கின்றது என்று உணர்வோடு அமைதியாகப் பணி புரிகின்ற வாய்ப்பு அமையும் என்ற காரணத்தால்தான் இந்தத் தீர்மானம் வந்திருக்கிறது. இனிய சர்க்கரை 'இனிய' என்ற அடைமொழியுடன் கூறினால் புளித்த சர்க்கரை இருக்கிறது என்று அர்த்தமல்ல. சர்க்கரை இனியது என்பதை உணர்த்துகின்ற அளவுக்கு உள்ள அடைமொழியாகத்தான் அது பயன்படுத்தப்படுகின்றது. இந்தக் கருத்து முரண்பட்ட, வேறுபட்ட தன்மைகளை உருவாக்கும் அடிப்படையில் அமைந்த ஒன்று அல்ல. இருக்கின்ற நிலைமைகளைத் தெளிவுபடுத்தி விளக்கங்கள் தருகின்ற ஒன்றாகத்தான் இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது, இந்த மன்றத்திலே விவாதிக்கப்பட்டிருக்கிறது. அந்த முறையில் இந்தக் கருத்துக்களுக்கு ஆக்கம் தருகின்ற வகையிலே இதை நிறைவேற்றி வைப்பதன் மூலம் எந்த முரண்பாடும் மாறுபாடும் ஏற்பட்டு விடாது. இந்த மாநிலத்தின் உணர்வை அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும். இந்தி ஒன்றுதான் தேசிய அந்தஸ்தைப் பெறத் தகுதி படைத்தது, மற்றைய மொழிகள் வட்டார மொழி அந்தஸ்துக்குத்தான் உரியன, தேசிய மொழி அந்தஸ்தைப் பெற மற்ற மொழிகளுக்குத் தகுதி இல்லையென்ற உணர்வு இந்தி வெறியர்களுக்கு இருக்கின்ற காரணத்தால், அந்த பயத்தைப் போக்கவும் இந்தத் தீர்மானம் பயன்படும். அந்த வகையில் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்த கனம் உறுப்பினர் அவர்கள் திருத்தத்தை மேலும் பிரேரேபிக்காமல் இருந்திருந்தால் ஒருவாறு நான் புரிந்து கொண்டிருக்க முடியும்; புரிந்து கொள்வதோடு மட்டுமல்ல, இந்தத் தீர்மானத்தை எப்படி ஆட்சேபிப்பது என்று கூட நான் சிந்திக்க வேண்டியிருக்கும். 351-வது விதியைத் திருத்த வேண்டுமென்றார்கள். எதற்காகத் திருத்த வேண்டும்? 8-வது ஷெட்யூலில் உள்ள எல்லா மொழிகளும் தேசிய மொழிகளாகக் கருதப்படக் கூடிய அளவுக்குத் திருத்த வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். எந்த அளவுக்கு, எந்த வகையில் திருத்த வேண்டுமென்பதற்குச் சில கட்டுப்பாடுகள் இருக்கலாம். திருத்தத்திற்கு இடம் இல்லையென்று கூடச் சொல்ல முடியாமல் இருக்கலாம். ஆனால் அவர்கள் அதை விட்டு விட்டு 350-வது பிரிவின்படி எல்லா மொழிகளும் தேசிய மொழிகளாகக் கருதப்படுவதற்கு கான்ஸ்டிட்யூஷனைத் தகுதியாகத் திருத்த

வேண்டுமென்று சொல்கிறார்கள். தேசிய மொழி என்று சொல்வதற்குப் பதிலாக 'அஃபிஷியல் லாங்குவேஜ்' ஆகப் போட்டு எட்டாவது ஷெட்யூலில் கண்ட 14 மொழிகளும் மத்திய ஆட்சி மொழியாக வேண்டுமென்பதுதான் கொஞ்ச நாளாக எதிர்க்கட்சியினரின் வாதம். அது இப்போதைய வாதந்தான். முன்பு இல்லை.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் துணைத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்களுடைய திருத்தத்தைப் பொறுத்து கனம் முதலமைச்சர் அவர்கள் சொல்லுகின்றபோது சட்ட நிலைமைகளைப் பற்றிக் கூறினார்கள். அந்தத் திருத்தம் சட்ட இலாகாவில் இருந்து உருவாக்கப்படாத காரணத்தால் கருத்தைக் கனம் முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டால் அந்தக் கருத்துக்கு ஏற்ப இந்தத் திருத்தம் எப்படி இருக்க வேண்டுமோ அப்படிக் கூட மாற்றி கொள்ளலாம். அந்த முறையில் கனம் முதலமைச்சர் அவர்கள் இதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் கூற வந்தது தேசிய மொழி என்பதற்குப் பதிலாக ஆட்சி மொழி என்று போட்டிருந்தால் இந்தத் தீர்மானத்தில் 14 மொழிகளையும் மத்திய ஆட்சி மொழியாக்க வேண்டுமென்று கோருகிறார்கள் என்பதை ஆதரிக்க முடியும் என்று நான் கூறவில்லை—புரிந்து கொள்ள முடியும் என்றுதான் கூறினேன். 14 மொழிகளும் மத்திய ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்பதை நான் ஏற்றுக் கொள்ள முடியாது. அதிலே எவ்வளவோ சிரமங்கள் இருக்கின்றன. அவ்வாறு வாதிடுவது சரியல்ல. 14 மொழிகள் ஒரு நாட்டுக்கு ஆட்சி மொழியாக இருப்பது சரியல்ல என்பதுதான் என்னுடைய வாதம், அரசாங்கத்தின் வாதம், காங்கிரஸ் கட்சியின் வாதம், அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் வாதம். (டாக்டர் பா. நடராஜன் : 'காமன் ஸென்ஸ்' வாதம் . . .) அவ்வளவு தூரம் நான் போகவில்லை ; அவர்கள் கோபித்துக் கொள்வார்கள். தேசிய மொழிகளாக ஆக்குவதற்குக் கான்ஸ்டிட்யூஷனில் திருத்தம் செய்ய வேண்டுமென்று சொல்வதிலே சில தவறுதலான கருத்துக்கள் இருக்கின்றன என்று நினைக்கிறேன். 'தேசிய மொழியாக இந்தியை மட்டும் போட்டு விட்டு மற்ற மொழிகளை ரீஜனல் லாங்குவேஜஸ் என்று போட்டிருக்கிறார்கள் ; அவற்றுக்குச் சம அந்தஸ்து இல்லை' என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொஞ்சம் விளக்கமாகக் கூறியிருக்கிறார்கள் அஃபிஷியல் லாங்குவேஜ் ஆக இருப்பது தேசிய மொழி அந்தஸ்தைப் பெறுகிறது ; ஆகவே, மற்ற மொழிகளுக்கும் முதற்படியாக தேசிய மொழியாகப் பட்டம் சூட்டி அதற்குப் பிறகு ஆசனத்தில் கொண்டு வந்து உட்கார வைக்க வேண்டும் என்ற முறையில் கூறினார்கள். எப்படி பட்டாபிஷேகத்திற்கு முன்பு பட்டாடை உடுத்தி அதற்குப் பிறகு ஆசனத்தில் அமர்த்துகிறார்களோ அந்த வகையில் கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், நான் கூற விரும்புவது அரசியல் அமைப்புச் சட்டத்தில் தேசிய மொழி இந்தி என்று கூடக் குறிப்பிடப்படவில்லை என்பதாகும். எங்காவது ஒருபுறத்தில் இந்தி



தேசிய மொழி என்று இருந்தால் நாம் அதைப் பற்றிக் கேட்கலாம். இந்திதான் தேசிய மொழி என்று எங்காவது ஒரு செக்ஷனில் இருந்தால் கனம் அங்கத்தினர் அச்சப்பட்டிருக்கலாம். அப்படி இருந்தால் 'நம்முடைய மொழிகளுக்கெல்லாம் கீழான அந்தஸ்தா ? எங்களுடைய மொழிகளுக்கும் தேசிய மொழிகளாக அந்தஸ்து கொடுக்கவேண்டும்' என்று கோரியிருக்கலாம். இந்தி தேசிய மொழியாகக் கருதப்படவில்லை. தேசிய மொழி ஒன்று, ஆட்சி மொழி வேறு ஒன்று. தேசிய மொழியாகப் பட்டம் பெற்றுத்தான் ஆட்சி மொழியாக ஆக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. அஃபிஷியல் லாங்குவேஜ் என்று இந்தியைக் குறிப்பிடுகின்றபோது மாநிலங்களில் அந்தந்த மொழிகள் பயன்படுத்தப்படுவதை 'ரீஜனல் லாங்குவேஜஸ்' என்ற ஹெட்டிங்கில் போடப்பட்டிருக்கிறது. கான்ஸ்டிட்யூஷனில் உள்ள இந்த ஹெட்டிங் கூட அவ்வளவு பொருத்தமானது அல்ல என்பது என்னுடைய கருத்து. நான் வற்புறுத்துவது என்னவென்றால் 'லாங்குவேஜஸ் ஆப் இண்டியா' எல்லாம் நேஷனல் லாங்குவேஜஸ். இதைக் காலஞ்சென்ற பிரதம மந்திரியவர்களும் வற்புறுத்தி இருக்கிறார்கள். இந்த மன்றத்தில் நான் கூறியிருக்கிறேன்.

14 மொழிகளும் தேசிய மொழிகளாகக் கருதக் கூடிய மொழிகள்தான், அவை தேசிய மொழிகள்தான். ஏன் இந்த சந்தேகத்தைக் கிளப்பவேண்டும்? ஏன் நம் மொழி தேசிய மொழி இல்லை என்று சொல்லவேண்டும்.

**திரு. மு. கருணாநிதி :** இந்தி தவிர மற்ற மொழிகள் தேசிய மொழிகளாக இருக்கத் தகுதியற்றவை என்று திரு. மாதா கடவுர் வாதம் செய்தார்கள். அதைப் பற்றி கனம் முதல் அமைச்சர் அவர்கள் என்ன அபிப்பிராயப்படுகிறார்கள் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவர்கள் சொன்னதற்கு நான் பொறுப்பேற்றுக் கொள்ள முடியுமா ? அதை நான் ஏற்றுக் கொள்ளவில்லை ; அதை முற்றிலும் மறுக்கிறேன். நம் நாட்டு மொழிகள் எல்லாம் தேசிய மொழிகள்தான். இந்தி மட்டும் தேசிய மொழி அல்ல. இந்தியும் தேசிய மொழிதான், தமிழும் தேசிய மொழிதான், தெலுங்கும் தேசிய மொழிதான், மராத்தியும் தேசிய மொழிதான். அதுதான் நம் வாதம். அதைத்தான் வற்புறுத்திக் கொண்டு வருவது. தேசிய மொழி என்று கான்ஸ்டிட்யூஷனில் எங்கும் இல்லை. அங்கு அப்படி குறிப்பிட்டிருந்தால் மற்ற மொழிகளையும் தேசிய மொழிகளாக ஆக்கவேண்டுமென்று சொல்லலாம். கனம் அங்கத்தினர் திரு. அழகரத்து அவர்களின் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டால் நமக்கே சந்தேகம் வந்து விடுகிறது, நாமே தேசிய மொழி இல்லை என்று ஒத்துக் கொள்கிறோம் என்று வரும். அது நமக்கும் நல்லதல்ல, நம் மொழிக்கும் நல்லதல்ல. 14 மொழிகளும் தேசிய மொழிகள்தான் என்று வற்புறுத்துகிறோம். ஆட்சி மொழி என்றால் அது வேறு விஷயம். 14 மொழிகளும் தேசிய மொழிகள்தான், இதில் ஐயமில்லை. ஆனால் 14 மொழிகளும் ஆட்சிமொழிகளாக ஆக வேண்டும் என்பது எதிர்கட்சிக்காரர்களின் வாதம். 14 மொழிகளும் மத்திய ஆட்சி மொழிகளாக ஆவது சரி அல்ல என்பதுதான் நாம் சொல்வது.

அரசாங்கம் சொல்வதும் அதுதான். அதுதான் சித்தியாசம். 14 மொழிகளும் ஆட்சிமொழிகளாக வேண்டும் என்று இருந்திருந்தால் அதை நான் ஏற்றுக் கொள்ள முடியாது என்றாலும் புரிந்து கொள்ள முடியும். இந்தத் தீர்மானத்திற்குச் சிறிதும் அவசியமில்லை. எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் கொண்டுள்ள கருத்துக்கள், அபிப்பிராயங்கள் எல்லாவற்றையும் வைத்து பார்த்தாலும் இதற்கு அவசியம் இல்லையென்பதால் இது வேண்டாம். நாமே போய் இந்த மொழிகள் தேசிய மொழிகள் அல்ல என்று சொல்லக் கூடாது. அரசியல் அமைப்புச் சட்டத்தில் அப்படித் தடை ஒன்றுமில்லை. நான் எவ்வளவோ பொதுக்கூட்டங்களில் பேசியிருக்கிறேன். இந்த மன்றத்திலும் பேசியிருப்பது நினைவிருந்து வருகிறது. இவைகளை எல்லாம் தேசிய மொழிகளாக ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அரசியல் அமைப்புச் சட்டத்தில் ஒரு சொல் இருக்கலாம், இல்லாமல் போகலாம். பழக்கத்திலிருந்து முன்பே வந்து விட்டது, இவைகள் எல்லாம் தேசிய மொழிகள் என்று. அதில் ஐயம் ஏற்படும் வகையில், பிறருக்கு அதற்கு இடம் கொடுக்கும் வகையில் இத்தீர்மானத்தை வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. து. ப. அழகமுத்து :** கனம் தலைவர் அவர்களே, பதினைந்து மொழிகளும் தேசிய மொழிகள் என்று அரசியல் அமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டு விட வேண்டுமென்று வற்புறுத்துவதின் நோக்கம் நம் மொழிக்கு தேசிய அந்தஸ்து சட்டபூர்வமாக வர வேண்டும் என்பதற்காகத்தான். கனம் முதல் அமைச்சர் அவர்கள், இது வெளியில் பேசப்பட்டு வருகிறது, பழக்கத்தில் இருக்கிறது, ஆகவே அதற்காக ஒரு மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று கூறுகிறார்கள். இந்தி இந்தியாவின் ஆட்சிமொழி என்று இப்போது கூறப்படுகிறது. ஆனால் காலப் போக்கில் அதுதான் தேசிய மொழி என்ற நிலை உருவாகும் என்பதற்கு இந்தி பேசுகின்ற மாநிலத்தில் உள்ளவர்கள் பேசுகிற பேச்சு அல்லது மேற்கொள்கிற நடவடிக்கைகள் ஆதாரமாக இருக்கின்றன என்பதை முதல் அமைச்சர் அவர்களே ஒப்புக் கொள்வார்கள். ஆகவே இத்திருத்தத்தைச் செய்வதன் மூலம் புதிதாக ஒரு குழப்பத்தை உண்டு பண்ண வேண்டுமென்ற நோக்கத்தோடு நான் இதைச் சொல்லவில்லை. அரசியல் அமைப்புச் சட்டத்தில் 351, 344 பிரிவுகளில் எந்த இடத்திலும் நாஷனல் லாங்குவேஜ் என்று பொருள்படத் தக்க நிலையில் குறிப்பிடவில்லை. அதர் லாங்குவேஜஸ், லாங்குவேஜஸ் என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்கள். எட்டாவது ஷெட்யூலில் கூட லாங்குவேஜ் என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்களே தவிர இந்தியன் லாங்குவேஜ் என்று கூடக் குறிப்பிடவில்லை. ஆகவே பிரதேச மொழி என்று பார்க்கிறபோது, பேசப்படுகிற மொழிகளில் ஒன்று என்று ஆங்கிலத்தையும், 8-வது ஷெட்யூலில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று திரு. ப்ராங்க் அந்தோணி அவர்கள் பாராளு மன்றத்தில் ஒரு தீர்மானம் கொண்டு வந்தபோது ஏற்றுக் கொள்ளவில்லை. பேசப்படுகிற மொழிகளில் ஒன்றாகத்தான் அது





இருக்கிறது. 8-வது ஷெட்யூலில் லாங்குவேஜஸ் என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே இதை வலியுறுத்த வேண்டிய அவசியம் இல்லை, வலியுறுத்தாமலே ஆங்கிலத்தை இந்த நாட்டின் ஒரு மொழியாகக் கருத இடம் இருக்கிறது, என்று சமாதானம் கூறினார். அதை அவர் வாபஸ் வாங்கிக் கொண்டார். சந்தர்ப்பத்திற்கு ஏற்ப வியாக்கியானம் செய்யும் நிலை இல்லாமல் 14 மொழிகளும் தேசிய மொழிகள் என்ற அந்தஸ்தை பெற வேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேனே தவிர புதிதாக ஒரு குழப்பத்தை உண்டு பண்ண அல்ல என்று கூறிக் கொண்டு இந்தக் கருத்தை நம் சென்னை மாநில அரசாங்கம் மூன்று தடவைகள் வலியுறுத்தியிருக்கிறார்கள் தங்கள் மெமோராண்டங்களின் மூலம், லாங்குவேஜ் கமிஷன் முன்னாலும், பாராளுமன்ற கமிட்டி முன்னால், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இந்தக் கருத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள். நாஷனல் லாங்குவேஜ் என்றுதான் குறிப்பிட வேண்டும் என்கிற அவர்கள் விரும்புகிற கருத்தை சட்டபூர்வமாக ஆக்க வேண்டுமென்று கேட்கிறபோது ஏனோ முதல் அமைச்சர் அவர்கள் மறுக்கிறார்கள். அதற்கு அவர்கள் உள்நோக்கம் என்னவாக இருக்கும் என்றால் அவர்கள் கூறியது போல் முதலில் சட்டை போட்டு அலங்கரித்து பிறகுதான் முடி சூட்ட வேண்டும் என்று அவர்கள் கூறுவது போல் எதிர்காலத்தில் இந்த 14 மொழிகளும் ஆட்சி மொழிகளாக ஆகவேண்டுமென்ற நோக்கத்தோடு இதைக் கொண்டு வருகிறோம் என்ற உள் நோக்கத்தில்தான் இதை ஏற்க மறுக்கிறார்களோ என்று கருத வேண்டியிருக்கிறது. அந்த எண்ணம் இப்போதைக்கு தேவை இல்லாதது. நம் மொழிக்கு தேசிய அந்தஸ்து வரவேண்டும் என்பதற்காக என் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நம் மொழிக்கு அந்தஸ்து இருக்கிறது, ஒன்றும் குறைவில்லை. தேசிய மொழியாகத்தான் கருதப்படுகிறது. ஆகவே இந்தத் தீர்மானம்தான் ஒரு ஐயத்தைக் கிளப்பும், ஆகவேதான் வேண்டாமென்று சொன்னேன்.

MR. DEPUTY SPEAKER : I will now put the amendment to vote. The question is—

"In item (3) included in the Agenda for 5th August 1965 under the heading "Resolutions" *for* the expression "by a suitable amendment to Article 351 of the Constitution" *substitute* the expression "by suitably amending the Constitution of India".

The amendment was put and lost

MR. DEPUTY SPEAKER : The question is—

"That this House recommends to the Government of India that all the languages referred to in the Eighth Schedule be declared as National Languages of India by a suitable amendment to Article 351 of the Constitution".

The resolution was put and lost.

MR. DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

1-17 p.m. The House then adjourned.

III.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE

### A. Statutory Rules and Orders.

188. *Notification issued with G.O. Ms. No. 1574, Food and Agriculture, dated the 23rd April 1965, declaring the area of Gandarvakottai market specified in column (1) of the Schedule of the notification and the area of ten miles around that market comprised in the villages specified in the corresponding entries in column (2) thereof, to be notified market area of the Gandarvakottai market for the purpose of the Madras Agricultural Produce Markets Act, 1959. [Laid on the Table of the House under section 29 (4) of the Madras Agricultural Produce Markets Act, 1959 (Madras Act 23 of 1959).]*

### B. Reports Notifications and other papers

* 49. *The Madras Appropriation (No. 4) Bill, 1965 (L.A. Bill No. 21 of 1965).*

* 50. *The Madras Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 18 of 1965) with annexure.*

* Despatched to Members on 3rd August 1965.

N65.31.2

64916